4

தொழில்

INDUSTRY

சிரியர் : K. பெருமாள் உடையார்

25 காசுகள்

15-12-59

The Discerning Printer

Takes great care in selecting the materials for his work—Fine Paper, Good Ink, Clear Types and neat execution. Because he knows that he can rely on

V. O. C. PRESS

FINE ART PRINTERS & BINDERS

A

LEADING HOUSE FOR

Quality, Display and A-I Printing

Moderate Charges.

★

PRESS AT:

13, LLOYDS ROAD, MADRAS - 5.

தொழில்

இந்த இதழில்

15—12—59

புதிய தலைவர்! ...	3
தலைநகரில் அமெரிக்க ஜனாதிபதி ...	5
இந்திய ரயில்வே வளர்ச்சி ...	9
தங்கப்பதக்கம் ...	17
பொன் வண்டு ...	25
எத்தன் வந்து ஏற்பானே (கவிதை) ...	31
அழகுக் கலை ...	32
பைத்தியம் ...	34
அதுவும் தோல்வியா? ...	43
ஆழ்கடல் அளிக்கும் அருஞ் செல்வம் ...	52
ஹெலிகாப்டர் சகாப்தம் ...	58
அமுதவல்லி (பட விமரிசனம்) ...	67

கதை, கட்டுரைகளில் வரும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே.

"மலைக்குகை மர்மம்"

பி. வி. கிரி

எழுதும் மர்மத் தொடர்கதை

1-1-60 இதழில் ஆரம்பமாகிறது.

குறிப்பு: அதிகப்பிரதி வேண்டுவோர் உடனே பதிவு செய்து கொள்ளவும்.

Telegrams : MARIGOLD　　　Phone : 31738

K. PERUMAL UDAYAR

Importer, Exporter &
Manufacturers' Representative

Iron and Steel Approved Fabricator
and Approved Scrap dealer

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்

K. பெருமாள் உடையார்,

55, எடப்பாளையம் தெரு,

சென்னை-3.

" அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர்; கே. பெருமாள் உடையார்.

தொழில் 2	சென்னை 15—12—'59	இதழ் 16

புதிய தலைவர்!

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் புதியதலைவராக ஸ்ரீ. ஓ. வி. அளகேசன் அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் பதவி மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும். ஸ்ரீமான்கள் எஸ். சத்திய மூர்த்தி, முத்துரங்க முதலியார், காமராஜர், கக்கன், ராஜா ராம் நாயுடுபோன்ற பெருந்தலைவர்கள் எல்லாம் இத்தலைமை பதவியை வகித்துவந்துள்ளனர். இந்தியாவின் மற்ற எல்லாப்பகுதியையும்விட தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் தான் ஒழுங்கும், கண்டிப்பும் நிறைந்துள்ளன என்று பல தலைவர்கள் பெருமையாகக்கூறும் அளவிற்கு அவர்கள் அதைக் கட்டிக்காத்துவந்திருக்கின்றனர். அத்தகைய மாபெரும் ஸ்தாபனத்தின் தலைமைப்பதவியை ஸ்ரீ. ஓ. வி. அளகேசன் அவர்கள் ஏற்றுள்ளதைக்கண்டு பெருமையடைகின்றோம்.

ஸ்ரீ ஓ. வி. அளகேசன் அவர்கள் வயதில் இளைஞர்; ஆனால் அறிவில் முதியவர்; சுறுசுறுப்பு நிறைந்தவர். எதற்கும் அஞ்சா நெஞ்சம் கொண்டவர். சிறந்த பேச்சாளர். எடுத்த கருமத்தைக் குறைவின்றி முடிக்கும் செயல்திறன்

கொண்டவர். அத்தகையவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது பொருத்தமானதே!

208370

இன்றையதினம் சென்னைமாநிலத்தில் பல்வேறுபட்ட அரசியல் சிக்கல்கள் பின்னிப்பிணைந்து மக்களிடையே பீதியையும் குழப்பத்தையும் உண்டுபண்ணிக்கொண்டு வருகின்றன. ஏராளமான காங்கிரஸ் ஊழியர்களும், தியாகிகளும் போதிய வசதியின்மை காரணமாகவும் கவனிப்பு இன்மையாலும் சோர்வுற்று மந்தநிலையில் காணப்படுகின்றனர். புதிதாக வந்துள்ள தலைவர் அவர்கள் இக்குறைபாடுகளை நீக்கி ஊழியர்களுக்கு உற்சாகமளிக்கும் வகையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். ஊழியர்களும்—தொண்டர்களும் நன்கு தங்கள் கடமையை நிறைவேற்றினால்தான் ஸ்தாபனம் வளர்ச்சிபெறமுடியும்; அவர்களின் ஒத்துழைப்பில்லையேல் எப்பேர்ப்பட்ட மாபெரும் ஸ்தாபனமும் கலகலத்துவிட ஏதுவாகும்- ஆகையால் ஸ்தாபன வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது பணியாற்றிக்கொண்டுவரும் ஊழியர்களை பராமரிக்கும் முறையிலும் அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல எதிர்க்கட்சிகள் இன்று நாட்டில் உண்மை நிகழ்ச்சிகள் பலவற்றை மாறுபாடாகத்திரித்திக்கூறி மக்களின் உள்ளத்தை மாற்றநினைக்கின்றன. இந்நிலைமையில் காங்கிரஸ் ஊழியர்களின் பணி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குப் பெரிதும் தேவைப்படுகிறது. மாற்றுக்கட்சிகள் கூறிடும் வாதங்களுக்கு மறுப்புரை தந்தும் உண்மை நிலையை விளக்கியும் மக்களிடத்தே சேவை செய்யும் பெரும்பணியும் ஊழியர்களிடத்தில் நிரம்பியுள்ளன. ஆதலால் ஊழியர்களின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாததாகிறது. புதியதலைவர் அவர்கள் ஊழியர்களின் சேவையை நன்கு உணர்ந்தவர்; நல்ல உழைப்பாளி! எனவே அவர் இது விஷயத்தில் அதிக கவனம் செலுத்துவார் என்று நாம் திடமாக நம்புகிறோம்.

ஸ்ரீ ஒ. வி. அளகேசன் அவர்கள் மத்திய சர்க்காரின் உதவி இரயில்வே மந்திரியாக இருந்து ஆற்றிய பணி அனைவரும் அறிந்ததே! அவரின் நிர்வாகத் திறமையையும் தன்னலம் கருதா சேவையையும் கண்டுதான், சென்னை முதலமைச்சர் கனம் காமராஜர், உள்நாட்டு அமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம், டி. டி. கிருஷ்ணமாச்சாரி போன்ற பெரும் தலைவர்கள், அவரிடம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைமைப் பதவியை அளித்துள்ளனர். ஸ்ரீ. ஒ. வி. அளகேசன் அவர்

கள் இளைஞர்கள் உள்ளத்தைக் கவருவதில் அதிக திறமை படைத்தவர்; அவரின் தலைமைக்காலத்தில் காங்கிரஸ் கமிட்டி ஓர் இளைஞர் கூடாரமாகவும்—தீவிர சக்தி கொண்டதாகவும் இயங்கும் என்று நம்புகிறோம்.

ஸ்ரீ ஓ. வி. அளகேசன் அவர்கள் உண்மைக்குத் தலை வணங்கும் உத்தமராவார். யார் எதைச்சொன்னாலும் அதை நிதானமாகக்கேட்டு அவற்றில் உள்ள உண்மையை தயங்காமல் ஏற்றுக்கொள்ளும் நேர்மை உள்ளங்கொண்டவராவார். காந்தீயத்தில் அசையாத நம்பிக்கைக்கொண்டவர் அவர். எனவே அவரின் காலத்தில் கட்சிக்குள் கருத்து வேறுபாடு கொண்டோர் தொகை மிக அரிகிவிடும் என்றும் கூறலாம். மேலும் கருத்துமாறுபாடு கொண்டோரையும் அணைத்துச் செயலாற்றும் திறமை கொண்டவர் அவர். அத்தகைய ஒருவர் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவராக அமைந்தது மகிழத்தக்கதே!

முன்பு, சென்னை ராஜ்யத்தின் பல பகுதிகளிலிருந்தும் சென்னைக்கு வரும் காங்கிரஸ் ஊழியர்களுக்கு—தங்குவதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி செய்துகொடுத்துக்கொண்டிருந்தது. அதனால் பல ஊழியர்கள் புத்துணர்ச்சியோடு செயல்பட்டுவந்தனர். ஆனால் அந்த ஏற்பாட்டை பதினைந்தாண்டுகாலமாக ஏனோ நிறுத்திவிட்டார்கள். புதிதாகத் தலைமைப்பதவி ஏற்றுள்ள ஓ. வி. அளகேசன் அவர்கள் மீண்டும் அதைநடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் - என்று வலியுறுத்துகிறோம். தேசத்திற்காகத் தொண்டாற்றும் ஒருதியாகியை—நல்லறிவாளரை—கடமை வீரரை தலைவராக தேர்ந்தெடுத்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களை இந்நேரத்தில் வாழ்த்தியேயாகவேண்டும்.

தலைநகரில் அமெரிக்க ஜனாதிபதி!

"ஐயயோ! அது முதலாளித்துவ—ஏகாதிபத்திய நாடாயிற்றே! உலகசமாதானத்தை ஒழித்துக்கட்ட நினைக்கும் நாடாயிற்றே!" என்றெல்லாம் ஒருக்காலத்தில் அமெரிக்காவைக்கண்டு அலறித்துடித்தவர்கள் உண்டு! ஆனால் இன்றோ நிலைமை மாறிவிட்டது. அமெரிக்காவின் எதிர் முகாம் என்று கருதப்பட்ட ரஷியநாடு அமெரிக்காவோடு நேசக்கரம் நீட்டுவதையும்—கம்யூ

னிஸ்டு கட்சிகள் அமெரிக்க ஜனாதிபதியை மகிழ்ச்சியோடு வரவேற்பதையும் நாம் இன்று காண்கிறோம். இத்தகைய ஒரு மாறுபாட்டை உலகநாடுகள் மத்தியில் உருவாக்கியவர், இன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் அவர்கள் தான் என்றால் மிகையாகாது. அத்தகைய புதுமையாளர்—ஐசனோவர் அவர்கள் இம்மாதம் 9-ந் தேதியிலிருந்து இந்தியாவின் பலபகுதிகளை சுற்றிப்பார்த்துக் கொண்டிருக்கிறார். வேறெந்த அமெரிக்க ஜனாதிபதியும் தங்களுடைய பதவிக்காலத்தில் இந்தியாவுக்கு வருகை தந்தது கிடையாது. முதன் முறையாக இந்தியாவுக்கு வந்துள்ள அமெரிக்க ஜனாதிபதியை பாரதமக்கள் மகிழ்ச்சிப் பெருக்கோடு, ஆரவாரமிட்டு வரவேற்றுள்ளனர். இந்தியப்

பிரதமர் ஜவஹர்லால் நேருவும் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்தும் மனமகிழ்வோடு அவரை வரவேற்று உபசரித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் அவர்கள் இந்திய மக்களின் ஒழுக்கத்தையும்—விருந்தோம்பும் பண்பையும் வெகுவாகப் பாராட்டியுள்ளார். உலக அமைதிக்கு இந்தியா ஆற்றிவரும் சிறந்த சேவையையும்—பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் அரசியல் கொள்கைகளையும் அவர் பலபட புகழ்ந்து கூறியுள்ளார். இதிலிருந்து அமெரிக்கா எந்த நேசபாவத்தோடு இந்தியாவை அணுகுகிறது என்பது நன்கு

தெளிவாகியுள்ளது. உலக அமைதிக்கும்—சர்வதேச பரஸ்பர ஒத்துழைப்புக்கும் இந்தியா ஆற்றிவரும் தொண்டு அமெரிக்கர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளது. அந்த கவர்ச்சியின் விளைவு தான் அமெரிக்க ஜனாதிபதியின் இந்திய வருகை.

இன்றையதினம் இந்தியர்வில் கம்யூனிஸ்டு சீனாவின் கெடுபிடி வட எல்லையில் கோரதாண்டவமாடிக் கொண்டிருக்கிறது; இதுவரையில் நம்முடன் நேசக்கரம் நீட்டிக்கொண்டிருந்த அவர்கள் துரோக வலையை வீச ஆரம்பித்து விட்டனர்; இந்திய வீரர்களை சுட்டு வீழ்த்தியுள்ளனர். பல ஆயிரம் மைல் பரப்பளவுள்ள இந்திய எல்லையைக் கபளீகரம் செய்து விட்டு கதை வேறு பேசிக்கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் இந்தியா "இச்சிக்கலைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதே நல்லது; அதுதான் இருசாராருக்கும் நன்மை பயக்கும்" என்று கூறி வருகிறது. இதே கருத்தைத்தான் அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் அவர்களும் எடுத்துரைத்துள்ளார்கள்.

> "எந்த ஒரு தகராறுக்கும் பரிகாரம் காணவேண்டுமானால் பேச்சுவார்த்தை முறையைக் கையாளவேண்டும்; உலகில் பெரும்பகுதியிலுள்ள மக்கள் அனைவரும் இதை உறுதியாக விரும்புகின்றனர். நாடுகளுக்கிடையே பயமுறுத்தல்களும், குற்றச்சாட்டுகளும் மறைந்து சர்வதேச அறிவுப் பரிவர்த்தனை ஏற்படவேண்டும்" இவ்வாறு இந்திய பாராளுமன்றத்தில் பேசுகையில் ஐசனோவர் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் பேச்சை உற்றுநோக்கினால் இந்தியக்குடியரசின் பஞ்சசீலக் கொள்கையை, அமெரிக்கா பெரிதும் விரும்புகிறது என்றும், அவ்வழி நடந்தால்தான் உலகில் அமைதி ஏற்படும் என்றும் நமக்கு நன்குபுலனாகிறது.

அமெரிக்காவுக்கு ஆதிக்கமோகம் கிடையாது என்பதையும் ஐசனோவர் அவர்கள் தெள்ளத்தெளிவாக விளக்கியுள்ளார்.

> "சமாதானமும் சுதந்திரமும் வேண்டும் என்பது மனித குலத்தின் உண்மையான அபிலாட்சை. அதனை மக்கள் பெறுவதற்கு உதவி செய்யத் தன் பொருளைப்பகிர்ந்து கொள்ள அமெரிக்கா தயாராயிருக்கிறது. மற்றபடி அது வேற்று மக்களுக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்தையும் கூட அது விரும்பவில்லை. என்று ஐசனோவர் அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார்.

ஐசனோவரின் பேச்சு துரோக எண்ணம் கொண்டு—ஆதிக்க வெறி கொண்டு—முறைகெட்ட செயலில் இறங்கும் நாடுகளுக்கு ஓர் சிறந்த அறிவுரையாகும்.

சுதந்திரம் பெற்றதிலிருந்து — உலக சமாதானத்திற்காக அரும்பணியாற்றிவரும் பாரதம் அமெரிக்கத் தலைவரின் தெளிவான கொள்கையைக் கண்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறது. உலகில் போரும்பூசலும் இன்றி—சுபிட்ச வாழ்வு தழைக்க அமெரிக்க ஜனாதிபதியின் இந்திய சுற்றுப்பயணம் பெரிதும் துணைபுரியும் என்று நம்புகிறோம்.

Telegrams : "COOPFIRE" Telephone : 4361

The Co-operative
Fire & General Insurance Society Ltd.,

MADRAS-1.

(The First of its kind in India)

PRESIDENT :

SRI T. M. CHINNAYYA PILLAI, M.A. B L.,
Director : State Bank of India, Madras,

Transacts : Fire Insurance of all description, Motor vehicles and Fidelity Guarantee Insurances.

ASSETS AND FUNDS EXCEED Rs. 20 LAKHS.

NO CLAIM BONUS TO FIRE POLICY - HOLDERS Rs. 50/- PER THOUSAND DECLARED OUT OF PROFITS FOR THE YEAR 1957.

—A UNIQUE FEATURE—

Insure and share in the Profits.

For particulars apply to:—

SRI P. SHANMUGAM, B.A.,
SECRETARY,
Post Box No. 1249, MADRAS-1.
or
the offices at

The Branch Manager,
15-B, North Maravaneri Extension
SALEM-1

Chandra Vilas Buildings,
High Road,
TINNEVELLY Junction.

இந்திய ரயில்வே வளர்ச்சி

கனம் ஸ்ரீ எஸ். வி. ராமசாமி,

(இந்திய ரயில்வே துணை அமைச்சர்.)

தொழில் துறை அமைப்பில் இன்றைய தினம் எத்தனையோ சிக்கலான பிரச்சினைகள் பின்னிக்கிடக்கின்றன. இந்நிலையில் ஒருநாடு தொழில்துறையில் சிறந்த நாடாகத் திகழவேண்டுமானால் அந்நாட்டின் போக்குவரத்துத்துறை சிறந்தமுறையில் இருக்கவேண்டும். ஏனெனில் போக்குவரத்து வசதிதான் ஒருநாட்டு பொருளாதார முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாகும். இதை இந்தியாவைக்கொண்டே நன்கு தெரிந்து கொள்ளலாம். இன்றைய தினம் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, உறையும் இல்லம் இதைப்போன்ற ஏராளமான துறைகளிலும் இரயிலின் உதவி தேவைப்படுகிறது.

இரயில்வேயின் பணி

சுதந்திரம் பெற்றபிறகு நமதுநாடு வியக்கத்தக்க அளவு முன்னேற்றமடைந்திருக்கிறது; இதற்கு முக்கிய காரணம் இரயில்வே இலாகாவின் மாபெரும் பணியேயாகும். சகல விதமான தொழில் துறை நடவடிக்கைகளிலும் இன்று இரயில்வே பணிபுரிந்து வருகிறது. இதைப்புள்ளி விவரத்தோடும் நிரூபித்துக் காட்டலாம். தினந்தோறும் 40 லட்சம் மக்கள் இரயிலில் பிரயாணம் செய்கின்றனர். இது இந்திய மக்கள் தொகையில் ஒரு சதவிகிதமாகும். 3000 சரக்கு ஏற்றும் வண்டிகளும் நாள்தோறும் ஓடிக்கொண்டேயிருக்கின்றன. இதனால் நாள் தோறும் தேசீய வருமானமும் பெருகிக்கொண்டே வருகிறது. இதையெல்லாம் கணக்கிட்டுத்தான்

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இரயில்வேத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர், நமது இந்திய சர்க்கார்.

முதல் ஐந்தாண்டு திட்டத்தில் இரயில்வேத்துறைக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை 400 கோடி ரூபாய். ஆனல் இரண்டாவது திட்டத்தில் 1120 கோடி ரூபாய் இரயில்வேத் துறைக்கு ஒதுக்கியுள்ளனர். இத்தொகை முதல் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையைப்போல் 3 பங்காகும். இதனல் முதல் ஐந்தாண்டு திட்ட அளவை விட அதிகப்படியான போக்குவரத்து வசதிகள் விரிவடையும்.

இரண்டாவது திட்டம்

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் 826 மார்க்கங்களுக்கு (மைல்ளுக்கு) மின்சார வண்டிகள் விடுதல்; 842 மைல் நீளத்திற்குப் புதுப்பாதைகள் அமைத்தல்; 1600 மைல் நீளத்திற்கு இரு வழிப்பாதைகள் அமைத்தல்; நான்கு மிகப்பெரிய பாலங்களுள்பட 6000 இரயில் பாலங்கள் கட்டுதல் முதலியவை அடங்கியுள்ளன. மேலும் 70 பாலங்கள் புதுப்பிக்கவும் திட்டமிட்டுள்ளனர். பல புதிய தொழிற்சாலைகள் அமைத்தல்; வண்டிகள் நிற்கும் ஷெட்டுகள் கட்டுதல் முதலியவையும் திட்டத்தில் அடங்கியுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் சரக்குகளை இரயில்களில் ஏற்றுமதி செய்வது 168 மில்லியன் டன்னுக அதிகரிக்கும் 1955-56 ஆம் ஆண்டில் இது 120 மில்லியன் டன்னுக இருந்தது. இரயிலில் பிரயாணம் செய்வோரின் எண்ணிக்கையும் 15 சதவிகிதம் அதிகரிக்கும். சாமான்களின் ஏற்றுமதி அபிவிருத்தியளவோடு ஒப்பிடுகையில் இது மிகக்குறைவாகவே தோன்றும். திட்டத்தின் முடிவில் 1955-56 ஆம் ஆண்டைவிட 20 கோடி பிரயாணிகள் அதிகமாக பிரயாணம் செய்ய வசதி செய்யப்படும்.

இரண்டாவது திட்டம் ஆரம்பித்தபிறகு பலவித திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொண்டு வருகின்றனர். 1959-ம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் 428 புதுப்பாதைகளும் 390 மைல் இருவழிப்பாதைகளும் போடப்பட்டுள்ளன. 88 மார்க்கங்களில் (மைல்களில்) மின்சாரவண்டிகள் விடப்பட்டுள்ளன. ஏராளமான இருப்புப்பாதைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 75, 612 யூனிட்டு சரக்கு ஏற்றும் வாகன்களும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் தற்போதைய

நிலைமையில், இரயில்வேத்துறையில் புதிய ஒளிதோன்றியுள்ளது. திட்டத்தின் முடிவில் பல்வேறு துறைகளிலும் இது துரிதமுன்னேற்றமடைந்துவிடும்.

இந்திய இரயில்வேயின் சரக்கு ஏற்றுமதி நாளுக்குநாள் வெகுவேகமாக அதிகரித்துக்கொண்டே வருகின்றது. கடந்த 3 ஆண்டுகாலத்தில் இது எவ்வாறு உயர்ந்து வந்திருக்கிறது என்பதைக் கீழேயுள்ள அட்டவணை நன்கு விளக்கும்.

ஆண்டுகள்	ஏற்றுமதி
1956-57	124 மில்லியன் டன்.
1957-58	132.1 ,,
1958-59	134.6 ,, (தற்காலிகமானவை)

(தொடரும்)

நீடித்த உழைப்பிற்கும், உயர்ந்தரகத்திற்கும் உத்திரவாதமுள்ள பிரசித்தி பெற்ற "எவர்ஜோதி" பிராண்டு ஸ்டெயின்லஸ் ஸ்டீல் வீட்டு உபயோகத்திற்கான பாத்திரங்களும் ஆஸ்பத்திரிக்குத் தேவையான சாமான்களும் கீழ்க்கண்ட விலாசத்தில் நியாயமான விலைக்கு கிடைக்கும்

★

சுப்பிரமணியம் & CO.,

"எவர் ஜோதி" பிராண்டு ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பாத்திரங்கள் உற்பத்தியாளர்கள்.

15-A, ஜடாமுனி கோவில் தெரு,

மதுரை.

மக்களாட்சியும் தொழிலாளர் இயக்கமும்

[பிரிட்டன் தொழிற் சங்கத்தில் தொழிலாளர் நிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை விக்டர் பெதர் இக்கட்டுரையில் விவரித்துக் கூறுகிறார். இவர் பிரிட்டன் தொழிற் சங்கக் காங்கிரசின் துணைச் செயலாளராக இருக்கிறார்]

பிரிட்டனில் தொழிலாளர் இயக்கம் தோன்றி சுமார் இரு நூறு ஆண்டுகளாகின்றன. தொழிற்சங்கங்கள் காலத்திற்கேற்ற முறையில் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. அவற்றின் நோக்கமும் பணியும் விரிவடைந்திருக்கின்றன.

சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பு தொழிற்சங்கக் காங்கிரஸ் நிறுவப்பட்டது. இன்று தொழிற்சங்கக் காங்கிரஸில் 185 யூனியன்கள் இணைந்து பணியாற்றுகின்றன. இவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை 8,500,000. நாட்டிலுள்ள ஒவ்வோர் தொழிலைச் சேர்ந்த சங்கமும் தொழிற்சங்கக் காங்கிரஸுடன் இணைந்து பணியாற்றி வருகிறது. தொழிலாளர் சங்கங்கள் சுதந்திரமாக இயங்குகின்றன. ஒவ்வோர் சங்கமும் உறுப்பினர்களுடைய விருப்பத்திற்கேற்ப கொள்கைகளை அமைத்துக் கொண்டு, அவர்கள் அவ்வப்போது செய்யும் முடிவுகளுக்கிணங்கச் செயலாற்றுகிறது. தொழிற்சங்கக் காங்கிரஸ், இயக்கத்தின் மாபெரும் சக்தியாக விளங்கினாலும் ஆணையிடும் நிறுவனமாக இயங்கவில்லை. இணைந்துள்ள சங்கங்களுக்கு குறிப்பிட்ட துறைகளில் சிபாரிசுகளைக் கூறி அவற்றை நிறைவேற்ற முயலுகிறது. பல்லாண்டுகளாக ஏற்பட்ட பழக்கத்தின் காரணமாக, தொழிலாளர் சங்கங்கள் தொழிற்சங்கக் காங்கிரஸின் சிபாரிசுகளுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றன. தொழிலாளர்கள் தன்னடக்கத்துடனும் மிகுதொகையாளர் தீர்ப்புக்கு அடங்கி நடக்கவேண்டும் என்ற எண்ணத்துடனும் செயலாற்றுவதால் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தில் ஜனநாயகப் பண்பு மிளிருகிறது.

ஜனநாயக நிர்வாகம்

ஒரே தொழிலைச் சேர்ந்த பல சங்கங்கள் ஐக்கியபலத்தை விரும்பி ஒன்றாக இணைந்தபோது சிக்கல்கள் தோன்றின என்றாலும் பயனும் கிடைத்தது. சிறு சங்கங்கள் தன்னிச்சையாக இணைந்ததால் பணியும் பலமும் பெருகிற்று. சங்கங்களின் உரிமையை மதித்து ஜனநாயக முறையில் நடவடிக்கைகள் அமைந்தன. இல்லாவிட்டால் தொழிலாளர் நலனைப் பேணுவதற்காகத் தோன்றிய தொழிற்சங்க இயக்கம், நிலைதவறி

'ஓர் வியாபாரக் கூட்டமாக' மாறியிருக்கும். பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கத்தில் உறுப்பினர்கள் அனைவருக்கும் சம உரிமை உண்டு. கிளைச் சங்கம் முதல் தேசிய மகாநாடு வரையில் ஒவ்வோர் கமிட்டியிலும் உறுப்பினர்களுக்கு தங்களுடைய உரிமைகளை பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கிறது.

ஸ்தலஸ்தாபனங்களிலும் பாராளுமன்றத்திலும் மக்கள் பிரதிநிதிகள் அமருவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னேயே தொழிற்சங்கங்கள் ஜனநாயக முறையில் செயலாற்றத் தொடங்கிவிட்டன. தொழிற்சங்க இயக்கம், குடியாட்சி முறைக்கு ஓர் பயிற்சிக்களமாக அமைந்தது. தொழிற்சங்க இயக்கத்தில் தீவிரப் பங்கு எடுத்துக்கொண்ட பலர் ஸ்தலஸ்தாபனங்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் சென்று சிறப்புறப் பணியாற்றினர்கள்—பணியாற்றுகிருர்கள். நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களில் அங்கம் வகிப்பதால் ஜனநாயகமுறைகளை நன்கு தெரிந்துகொண்டு செயலாற்றுகிருர்கள்.

எளிதானதல்ல!

கூட்டத்தில் வாக்கெடுப்பு மூலம் முடிவுகளைச் செய்வதும் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ள அனைவருக்கும் சமவாய்ப்பளிப்பதும் ஒழுக்கவிதிகளை பேணி நடப்பதும், நாட்டின் சர்க்காரை தேர்ந்தெடுப்பதும்—குடியாட்சி முறையல்ல. நிறைவுற்ற குடியாட்சிமுறையைக்காண இவை துணை செய்கின்றன. குடியாட்சி முறைக்கு விளக்கம் கூறுவது எளிதல்ல. குடியாட்சிமுறைக்கு ஒழுக்கமும் நேர்மையும் பிறர் கருத்துக்கு மதிப்பளிக்கும் பண்பும் அவசியம். குடியாட்சி முறையில் மக்கள் அனைவருக்கும் சம உரிமையுண்டு. மிகுதொகையாளர் விருப்பப்படி ஓர் பிரச்னைக்குத் தீர்வுசெய்தாலும் அந்தப் பிரச்னைமீது கருத்துக்கூறி சபையின் ஆதரவைப் பெறும் வாய்ப்பை சிறுதொகையாளருக்குத் தருவது குடியாட்சி முறையின் முக்கிய அம்சங்களில் ஒன்ருகும். குடியாட்சி முறையில் ஒவ்வொருவருக்கும் பேச்சு உரிமையுண்டு. குழுவாகச் சேர்ந்து செயலாற்றும் உரிமையுண்டு. ஒவ்வொருவரும் நேர்மையுடனும் நீதியுடனும் பிறர்நலம் பேணியும் சுதந்திரமாக வாழும் உரிமையை குடியாட்சி முறை அளிக்கிறது.

கூட்டுபேரம்

பிரிட்டிஷ் தொழில்களில் ஜனநாயக நடைமுறை வேரூன்றிவிட்டது. தொழிலாளர்கள் உரிமைகளைக்கோரும் போது, கூடிப்பேசி முடிவுசெய்துகொண்டே செயலில் இறங்குகிருர்கள். தொழிலாளர்கள் சங்கம் அமைத்துக்கொண்டு செயலாற்றுவதுபோல தொழிலதிபர்களும் தங்களுடைய நலன்களுக்காக சங்கம் அமைத்துக் கொண்டிருக்கிருர்கள்.

தொழிற்தகராறுகள் தோன்றும்போது தொழிலாளர் பிரதி

For Quality Stainless Steelware Goods

ASK

Famous "ELEPHANT" Brand

★

PLEASE CONTACT:

Madras Stainless Steelware Industries

23, TEYNAMPET RAMASAMY MUDALI STREET,

KONDITHOPE, MADRAS-1

Manufacturers of Superior Stainless Steel

HOUSE HOLD UTENSILS AND HOSPITAL REQUIREMENTS.

நிதிகள், தொழிற்சாலைப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசி தீர்வுகாண முயலுவதுண்டு. இம்மாதிரிச் சந்திப்புக்களில் சம்பிரதாயத்தை ஒதுக்கிவிட்டு இரு சாராரும் மனம்விட்டுப்பேசுவார்கள். சமரசம் செய்துவைக்க மூன்றாம் மனிதரைத் தேடாமல் நேரடியாகப்பேசி முடிவுக்கு வரும் நிகழ்ச்சிகளும் உண்டு. சமரச உடன்படிக்கை செய்துகொண்ட பிறகு—அது சட்டபூர்வமாகத் தங்களைக் கட்டுப்படுத்தாது என்றாலும்கூட—இரு சாராரும் அதை நிறைவேற்ற முயலுவார்களே தவிர மீறத்துணியமாட்டார்கள்.

ஜனநாயகமுறைகளை ஏற்றதால் பிரிட்டனில் தொழிற்சங்க இயக்கம் செல்வாக்கும் பலமும் பெற்று விளங்குகிறது. தொழில் முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கிறது. தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர் நலனை மட்டும் கருதாமல் தொழில் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு நேர்மையுடனும் பொறுப்புடனும் சிக்கலை ஆராய்ந்து தங்களுடைய கோரிக்கையை சமர்ப்பிப்பார்கள். தொழில் செழித்தால்தான் தொழிலாளர்களும் வாழ்முடியும். ஆகவே ஊதிய உயர்வு அல்லது வேறு சலுகைகளைக்கோரும்போது, தொழிற்சங்கப் பிரதிநிதிகள்

தொழிற்சாலையின் நிலைமையையும் உற்பத்தி-ஏற்றுமதி லாபம் முதலிய அம்சங்களையும் ஆராய்வதுண்டு.

தொழிற்துறை ஆராய்ச்சியில் கூட்டுறவு

புதிய தொழில்கள் தோன்றியுள்ள இந்நாளில் தொழிற்சங்கத் தலைவர்களுடைய பொறுப்பும் அதிகரித்துவிட்டது. பிரிட்டிஷ் தொழிற்சாலைகளில், திறமை—உற்பத்தி பெருக்கத்திற்கான திட்டமிடும்போதும் புதிய உத்திமுறைகளில் பயிற்சிதர தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போதும், நிர்வாகிகளும் அரசாங்க அதிகாரிகளும் தொழிற்சங்கத் தலைவர்களும் கலந்தாலோசிக்கிறார்கள். தொழிற்துறை ஆராய்ச்சிப் பணியிலும், விஞ்ஞானரீதியில் அபிவிருத்தி காணும் முயற்சியிலும் தொழிற்சங்கங்கள், தொழிற்சாலை நிர்வாகத்திற்கு துணை நிற்கின்றன. தொழில்நுட்பக் கல்வி கமிட்டிகளில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பணியாற்றுகிறார்கள்.

தொழிற்சங்கங்கள் உறுப்பினர்களுடைய பொருளாதார நலனில் அக்கறை காட்டுவதைப்போல அவர்களுடைய உடல்நலனைக் காப்பதிலும் அக்கறைகாட்டுகின்றன. தொழிற்சாலையில் சுகாதார வசதிகளை அதிகரிப்பதிலும் விபத்துக்களை தடுக்க நூதன முறைகளை வகுப்பதிலும் தொழிற் சங்கங்கள் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு வசதிகளை வழங்கும் பொறுப்பு தங்களையே சேர்ந்தது என்று கூறும் நிர்வாகிகன் இப்போது இல்லை. தொழிற்சாலையிலுள்ள ஒவ்வொருநடைமுறைக் குழுவிலும் நிர்வாகிகளும் தொழிலாளர்களும் இடம் பெற்று பணியாற்றுகிறார்கள்.

மகத்தான தியாகம் செய்ததன் விளைவாக இன்று தொழிற்சங்க இயக்கம் சீரும் செல்வாக்கும் பெற்றிருக்கிறது. உரிமைப் போராட்டத்தில் குதித்த தொழிலாளர்கள் பட்ட துயரம் பல. வேலை இழந்தோர் பலர். சிறை சென்றோர் பலர். நாடு கடத்தப்பட்டவர் பலர். ஒரு காலத்தில் தொழிற் சங்க உறுப்பினர்களுக்கு வேலை மறுக்கும் நிலை இருந்தது. உறுப்பினர் அடையாள அட்டை வைத்திருப்போரை வேலையிலிருந்து நீக்கி விடுவார்கள். வேறு தொழிற்சாலைகளிலும் வேலை கிடைக்காது.

நிர்வாகத்தில் பங்கு

காலம் மாறிவிட்டது. இன்று நிர்வாகச் சிக்கல்களை அகற்றுவதுபற்றி ஆலோசிக்க நிர்வாகிகள் தொழிலாளர்களை—தொழிற்சங்கத் தலைவர்களை அழைக்கிறார்கள். தொழிற்சங்க இயக்கத்தை மதிக்காதவர்களே பிரிட்டனில் இல்லை என்று கூறலாம். தொழிற்சங்கங்களும், தொழிலதிபர்கள் சங்கங்களும் சுதந்திரமாகச் செயலாற்றுகின்றன. என்றாலும் பல துறைகளில் இணக்கமாகவும் ஒன்றையொன்று கலந்தாலோசித்தும் செயலாற்றுகின்றன.

திருத்தம்

'இரு அடி துணைகொண்டு இமயம் கண்ட தமிழர்' என்னும் பகுதியில் திருவிளையாடர் புராணம் என்று இருப்பதை பெரியபுராணம் என்று திருத்திக் கொள்ளவும். பிழை நேர்ந்தமைக்கு வருந்துகிறோம்.—ஆசிரியர்.

பிரிட்டனில் நிலவும் தொழிலுறவு கண்டு வெளிநாட்டார் வியப்படைகிறார்கள். ஒவ்வொரு நிலையிலும் இரு சாராரும் ஜனநாயகப் பண்புடன் செயலாற்றுவதால்தான் தொழிற்றுறையில் அமைதியும் நல்லுறவும் நீடிக்கின்றன. இதனால் பிரிட்டனில் மனநிறைவற்ற தொழிலாளர்கள் இல்லை என்று கூறவில்லை. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதுண்டு. நல்லுறவால் கிடைக்கும் பயனுடன் ஒப்பிட்டால் நட்டம் மிகமிகக் குறைவு என்று தெரியும். உதாரணமாக 1958-இல் நடந்த வேலை நிறுத்தங்களால் ஏற்பட்ட நட்டத்தை எடுத்துக்கொள்வோம். சராசரியாக வாரம் ஒன்றுக்கு 72 செகண்டுகள்தான் நபர் உழைப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் விபத்துக்களால் ஏற்பட்ட உற்பத்திநட்டம் இதைப் போல ஐந்து மடங்காகும். தொழிலாளர்கள் நோயுற்றதால் ஏற்பட்ட உற்பத்தி நட்டம், இதைப்போல எண்பது மடங்காகும்.

ஜனநாயக முறையில் சிறப்பை யறிய தொழிற்றுறையில் நிலவும் அமைதியை அளவு கோலாகக் கொள்ளவேண்டியதில்லை. ஆனால் அது ஓர் சிறந்த சாதனையாகும். பிரிட்டிஷ் மக்கள், பல்லாண்டுகளாக போராடிப் பெற்ற உரிமைகளை, பேணிவளர்க்கிறார்கள். தங்களுடைய உரிமைக்கு ஊறு செய்யும் எந்த முயற்சியையும் அவர்கள் எதிர்ப்பார்கள். பிரிட்டனில் ஜனநாயக முறையில் வாழ்க்கை அமைவதற்கு தொழிற்சங்க இயக்கம், குறிப்பிடத்தக்க முறையில் உதவியிருக்கிறது.

—※—

தமிழ்ச் சொற்கள் அகராதி தயாரிப்பு-குழு நியமனம்

காலப் போக்கில் தமிழ்ச் சொற்கள் எப்படி பொருள் மாறி வந்திருக்கின்றன என்ற ஒப்பு ஆராய்ச்சியுடன் தமிழ்ச் சொற்கள் பேரகராதி தொகுப்பதற்கான திட்டம் வகுக்க அரசாங்கம் ஒரு குழுவை அமைத்துள்ளது. அக்குழுவுக்கு ஸ்ரீ டி. பி. மீனாட்சி சுந்திரம் தலைவராகவும், டாக்டர் ஆர். பி. சேதுப் பிள்ளை, டாக்டர் எம். ஏ. துரையரங்கசாமி, ஸ்ரீ ஏ. எஸ். ஞானசம்பந்தம் ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவசியமானல் மேலும் இரு உறுப்பினர்களை கோஆப்ட் செய்துகொள்ள குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பேரகராதியைத் தயாரித்து வெளியிட வேண்டும் என்று தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் தெரிவித்த யோசனைக் கிணங்க, இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

தங்கப் பதக்கம்

—பி. எஸ். சின்னசாமி, பி. எஸ்ஸி; எம். பி. பி. எஸ்—

"அதென்ன, அப்படி வீடு தேடி வந்தவர்களைக் கொஞ்சம் கூட தாட்சண்யமில்லாமல் திருப்பியனுப்பி விட்டீர்கள்? அவர்களுக்கு மூஞ்சி தொங்கிப் போய் விட்டது. ஊருக்குப் பெரிய மனிதர்! நீங்கள் வந்தால் தங்களுக்குப் பெருமை என்றுதானே வந்தார்கள்?" என்றாள் சிவப்பிரியா.

"இதோ பார், இது ஒன்று மட்டும் என்னால் முடியாத காரியம். நீ வேணும்னா போய் தலைமை வகித்துப் பரிசுகளை வழங்கி சொற்பொழிவாற்றி விட்டு வா. நாளைக்கு கொட்டை கொட்டை எழுத்துக்களில்... பள்ளிக்கூட ஆண்டு விழாவில் திருமதி சிவப்பிரியா மருந்தீஸ்வரன் தலைமை வகித்து பரீட்சைகளிலும், விளையாட்டுப் பந்தயங்களிலும் வெற்றியடைந்த மாணவ மாணவிகளுக்கு......" என்பதற்குள் "பரிசளித்து மாணவர்களுக்கு ஊக்கமளிக்குமாறு பேசினார்கள்", என்று பேப்பரில் போடுவார்கள் என்று தானே என்னைக் கேலி செய்யப் போகிறீர்கள், 'இவ்வளவு தானே' என்றாள் கோபத்துடன்.

மருந்தீஸ்வரன் ஐ. ஏ. எஸ். அந்த ஊருக்குப் புதிதாக வந்திருக்கும் கலெக்டராவார். அவருக்கு விவாகமாகி இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை. மனைவியின் கோபத்தைச் சாந்தப்படுத்தியாக வேண்டுமே!

"இந்தா மூஞ்சியை 'உர்' என்று வைத்துக்கொள்ளாதே. கோரமான என் கடந்தகால வாழ்க்கையின் நிழலைக் கூட என்னால் தாங்க இயலாது. நான் இம்மாதிரி விழாக்களில் கலந்து கொள்ள முடியாத காரணத்தை கூறியபின் உன் தீர்ப்புக்கு உடன்படுகிறேன்" என்றார்.

இதோ 'ஒன்மினிட்' என்று ஒரு துள்ளலுடன் குளிர்பானப் பெட்டியிலிருந்து இரண்டு கோப்பை ஆரஞ்சுப் பழரசத்துடன் திரும்பி வந்து உட்கார்ந்தாள். கலெக்டர் தொடர்ந்தார்.

"நான் அடையாறுக்கு இரண்டு மைல் தெற்கேயுள்ள திருவான்மியூர் என்னும் சிறு கிராமத்தில் பிறந்தேன். அந்த ஊரில் குடிகொண்டிருக்கும் ஈசனின் திருநாமத்தையே எனக்கு சூட்டினார் என் அப்பா.

நான் இன்னும் உன்னை அந்த ஊருக்கு அழைத்துச் செல்லவில்லையல்லவா? அடுத்த வாரம் இரண்டு நாள் 'லீவ்' எடுத்துக்கொண்டு மதருஸ் போய் உங்கள் வீட்டிற்கும் திரு

வான்மியூருக்கும் போய் வருவோம்.

"திருவான்மியூர் என்பது மிகவும் அழகான ஓர் புண்ணியஸ்தலம். ஊருக்கு நடுவில் பெரிய குளம். அதன் மத்தியில் சிருங்காரமான நீராழி மண்டபம். குளத்தைச் சுற்றி நான்கு மாட வீதிகள். இப்பொழுது நாம் பார்க்கும் படங்களில் எதாவது ஒரு காட்சியாவது திருவான்மியூரில் படம் பிடிப்பது தான் நாகரீகம். ஊருக்குத் தென்மேற்கு மூலையில் கிழக்குப் பார்த்த ஆலயம். ஆலயத்திற்கெதிரில் உள்ள புதர்கள் மண்டின சிற்பங்கள் நிறைந்த மொட்டைக்கோபுரத்தை, இன்னும் 'ஆர்கிலாஜிகள்' இலாகா கவனிக்கவில்லை என்பதுநமக்கு வருத்தத்தையூட்டும்.

இராமாயணத்தை இயற்றிய வான்மீகி முனிவருக்கு சிவபெருமான் "நான் இங்கே இருக்கிறேன்" என்று இத்தலத்தில் அசரீரியாகக் கூற அவர் ஒரு வன்னிமரத் தடியில் தவமியற்றி சிவபெருமானைத் தரிசித்ததாகக் கூறுகின்றனர். மேலும் இங்கே அவருக்கு தியாகராஜ மூர்த்தியாய் திருநடம் புரிந்தும் தரிசனம் அருளினர் ஈசன். அவர் அருளால் ஜன்ம நாசினி, காமநாசினி, பாபநாசினி, ஞான தாயினி, மோக்ஷதாயினி என்ற புண்ணிய தீர்த்தங்கள் இவ்வூரில் தோன்றின. ஒரு சமயம் இந்திரனுடைய மயக்கத்தைப் போக்க இங்கு சிவபிரான் மருந்து கொடுத்ததால் 'மருந்தீசர்' என்று பெயர் உண்டாயிற்று. அகத்திய முனிவருக்கு மருந்துகளின் பிரயோகத்தையும் உபதேசித்தாராம்.

"ஒருமுறை வசிஷ்ட முனிவரால் சாபமடைந்த காமதேனு பசு உருவில் இந்த லிங்கத்துக்கு பாலபிஷேகம் செய்து வந்ததால் லிங்கம் இன்றும் வெள்ளையாகத்தோன்றி பால்வண்ணன் என்ற பெயருடன் தோன்றுகிறது ஒருநாள் ஒரு சிங்கம் அப்பசுவிடம் போரிட, அதை எதிர்த்துப் பசு பாயும்பொழுது லிங்கத்தின்மேல் அதன் குளம்பு பட்டு, வடுவொன்று ஏற்பட, இன்றும் லிங்கம் வடுவுடன் விளங்குகிறது. இவ்வளவு தூரம் இவ்வூரின் புராணக் கதையைக் கூறினேனல்லவா? சரித்திரத்தில் சுமார் 1769 ஆம் ஆண்டில் ஹைதர் அலி மதருஸ் கோட்டை முன் தன் படைகளுடன் வந்து ஆங்கிலேயருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான் என்று படித்திருக்கிறோம் (First Mysore War). ஹைதர் மக்களுக்குபயத்தை யுண்டு பண்ண திருவான்மியூர்க் கோயில் தேரைக் கொளுத்திவிட்டதாகவும் அறிஞர் கூறுகின்றனர். அவன் கொணர்ந்த ஒரு இரும்பு பீரங்கி இன்றும் திருவான்மியூருக்கு இரண்டு மைல் தூரத்தில் உள்ள பலகை வாராவதி (Lattice Bridge) என்னுமிடத்தில் ஒரு வயலில் புதைந்து கிடக்கிறது. சுமார் 45 ஆண்டுகளுக்குமுன் நாட்டுக் கோட்டை நகரத்தாரால் கோயில் திருப்பணி செய்யப்பட்டு, மிகவும் அழகாக விளங்கும் சிற்பங்களுடன், அமைதியான சூழ்நிலையில் விளங்கும் இந்தக்கோ

விலும் ஊரும், சென்னைக்கு இவ்வளவு அருகிலிருந்தும் இன்னும் பிரபலமடையாதது வருந்தத்தக்கது.

“நீங்கள் தான் என்னை அடுத்தவாரம் அங்கு அழைத்துச் செல்வதாகக் கூறியிருக்கிறீர்களே”—என்ருள் சிவப்பிரியா.

“கதையைக் கேட்க அவசரமாக்கும்,” என்று மீண்டும் தொடங்கினர் “என் அப்பா அந்த ஊர் கோவிலில் ஒரு அர்ச்சகர். நான் மட்டும் ஐ. ஏ. எஸ். ஆக இல்லாவிட்டால் ஒரு அர்ச்சகரின் குடும்பத்திலேயா உன் அப்பா சம்பந்தம் செய்திருப்பார்? எனக்கு அடிக்கடி இந்த ஐ. ஏ. எஸ்ஸின் சக்தியை எண்ணி எண்ணி சிரிப்புத்தான் வருகின்றது மணமகனின் குலம், கோத்திரம், நடத்தை, குணம் எதையும் மறைக்கும் சக்தி இதற்கு உண்டு. எவ்வளவு கெடுதல்கள் இருந்தாலும், அந்த மூன்றெழுத்துக்கள் எல்லாவற்றையும் மறைத்து...” என்று கூறி வந்த என்னை “எங்கப்பாவுக்கு அதெல்லாம் இடையாது” என்று தடுத்தாள் சிவப்பிரியா.

“சரியம்மா சரி! நான் பொதுவாகச் சொன்னேன். அவ்வளவுதான்! நீ ரோஷப்பட வேண்டாம்”.

“என் அப்பா அங்கே அர்ச்சகர் என்று கூறினேனல்லவா? போனவாரம் நாமிருவரும் ஒரு கோவிலுக்குப் போய் வந்தோமே, கவனமிருக்கிறதா? நாம் அர்ச்சனைக்காகக் கொடுத்த

தேங்காய், பூ, பழம், வெற்றிலை முதலியவற்றை அலம்பக் கூட அர்ச்சகருக்கு நேரமில்லை. ஈச னின் நூற்றெட்டு நாமங்களை உச்சரிப்புடன் சொல்லாமல், வேகமய் உளறக் கூட, சுமார் பத்து நிமிடங்கள் தேவை. ஒரு இரண்டு நிமிடங்களில் பிர சாதத்தட்டுடன் திரும்பிவிட்டா ரல்லவா அர்ச்சகர்; அப்படி இல்லை எங்கப்பா அவர் அழுத் தந் திருத்தமாக ஸ்பஸ்டமாக ஒரு ஆனந்த பைரவி, கல்யாணி முதலிய ராகத்துடன் அர்ச்சனை செய்து, திரிபுரசுந்தரி அம்மன் மேல் மலர்களைப் போடும் பொழுது, நாஸ்திகர்களுக்குங் கூட ஆஸ்திக உணர்ச்சி எற் படும். ஆனல் வரும்படி என் னவோ குறைவுதான். [இப் பொழுதும் இந்தக் கோயிலில் அர்ச்சனை முறை மிகவும் அழ காய் மனதிற்கு அமைதி அளி க்க வல்லதாய் இருக்கிறது]

"திடீரென விஷ ஜுரத்தால் படுத்த என் அப்பா மூன்று நாட்களில் 'மருந்தீசா, வேத புரீசா, பால்வண்ண நாதா, அமிர்த புரீசா' என்று ஈசன் நாமங்களைக் கூறியப்படியே கால மாய் விட்டார்.

"திண்ணைப் பள்ளிக் கூடத் தில், வீசம், மாகாணி வாய்ப்பா டும், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் முதலியவையும் பயின்று வந்த என்னை, என் அம்மா பள்ளிக் கூடத்தில் சேர்த்தார்கள். தானும்மைலாப் பூரில் ஒரு வக்கீல் வீட்டில் சமையல் செய்து ஐந்து ரூபாய் சம்பாதித்தார்கள். எங்களை, நாங்கள் இது காரும் வாழ்ந்த திருவான்மியூர்க் கோவிலுக்குச் சொந்தமான வீட்டைக் காலி செய்யச் சொல்லவில்லை. கட வுள் கிருபையால் எனக்கு எந்த பாடத்தையும் ஒரு முறை படித்தாலோ யாராவது சொல் லக் கேட்டாலோ, எழுதி ஞலோபோதும்—அது மறக்கா மல் மூளையில் பசுமரத்தாணி போல் பதிந்துவிடும். அடக்க மான ஒழுங்கான மாணவன் என்று பெயரெடுத்ததால் தலை மை ஆசிரியரின் விசேட சலு கையால் உபகாரச் சம்பளம் கொடுக்கப்பெற்று படிப்பைத் தொடர்ந்தேன். ஒவ்வொரு ஆண்டு முடியும்தோறும் பள் ளிக்கூடத்தவர் நடத்தும் ஆண்டு விழாவில் எனக்களிக் கப்படும் பரிசுகளான புத்தகக் குவியல்கள், டார்ச்லைட்டுகள், வெள்ளிக்கோப்பைகள் முதலிய வற்றைக்கண்டு பூரித்த அம்மா உடல் நலம் குன்றுமல் என்னை காப்பாற்ற, தன்னலம் பாராது உழைத்து உழைத்து உடல் நலம் குன்றலானாள். படிப்பும் வயதும் ஏற ஏற என் தேவை களும் ஏறின. அவற்றை நிரப்ப ஒழிந்த நேரங்களில் ஓட்டல்க ளுக்கு இட்லி தோசை முதலிய பணியாரங்களுக்கு மாவு அறை த்து அறைத்துக் கொடுத்த அம்மாவின் கைகள் மெலிந்து, மேன்மையிழந்து, காய்த்து, முற்றிப்போன முருங்கைக்காய் போலாய்விட்டது. காய் காய ஆரம்பித்துவிட்டது. ஈரப்பசை குறைந்துவிட்டது. இனி வேலை செய்வது சாத்தியமில்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

'இண்டர்மீடியேட்' பரீட்சை யுடன் படிப்பை நிறுத்திவிட்

டுத் தீவிரமாய் வேலைதேட ஆரம்பித்தேன். கனவிலும் பகலிலும் நான் கண்ட 'நோ வேகன்ஸி' பலகைகள் என் கண்முன் தோன்றின.

அந்த சமயத்தில் பட்டணத்தில்ஒருபெரிய 'பாங்க்' ஒன்றில் திறமைமிக்க குமாஸ்தாக்களைத் தேர்ந்தெடுக்க ஒரு பரீட்சை நடந்தது. பரீட்சையில் வெற்றியடைந்த என்னை, அந்தக்காரியாலயத்தின் மானேஜரான மாதவ் என்பவர், "போதிய அளவு வசீகரத் தன்மையில்லை," (Personality not up to mark) என்று காரணம் காட்டி வேலையைத் தரமுடியாது எனக் கூறிவிட்டார். அவர் காலைப்பிடிக்காவண்ணம் கெஞ்சியும் அவர் மனம் இறங்கவில்லை. தலைக்குமேல் போய் விட்டது வெள்ளம். எவருக்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை. ஆதலால் 'விறு விறு' என்று அந்த அலுவலகத்தின் ஆங்கிலேய டைரக்டர் ஜாக்சன் அனுமதிச் சீட்டில்லாமல் உள்ளே நுழைந்த என்னை சீறி வெகுண்டு வேங்கைப்புலி போல் துரத்தினுல் தப்பு எதுவுமில்லை ஆனுல் என் தந்தை உபாசித்து வந்த திரிபுரசுந்தரியம்மன் கருணையால் அவர் அமைதியாக எல்லாவற்றையும் விசாரித்து, பிறகு பார்க்கலாம் என்று கூறி என்னை அனுப்பி விட்டார். தொங்கின தலையுடன் வீடு திரும்பி ஒரு மணிநேரம் கூட ஆகியிருக்காது. சைக்கிளில் வந்த ஒரு பாங்கு சேவகன் என்னிடம் ஒரு கவரை நீட்டினுன். என்ன ஆச்சர்யம்...! என்னை அந்த பாங்கில் வேலைக்கு எடுத்துக்கொண்டு விட்டார்கள்! அந்த சேவகனை அப்படியே ஆர்வத்துடன் கட்டிக் கொண்டு விட்டேன். அந்த துரையை உருக்கியது எனது கடைசி வார்த்தைகள். "ஒரு வேளை சாப்பாட்டிற்கு வழியில்லாது ஒரு வயோதிகத்தாயையும் காப்பாற்றிக்கொண்டு உழலும் நான் வசீகரிப்புத்தன்மைக்கு எங்கு போவது?" என்பவையே அவை!

அந்த பாங்கின் மானேஜர் மிஸ்டர் மாதவ் இந்த வேலையில் தன் மைத்துனனை எப்படியாவது நுழைத்துவிட வேண்டும் என்று பாடுபட்டவர். ஏற்கெனவே துரையவர்களிடம் ஒரு வார்த்தை போட்டு வைத்திருந்தார். நடந்த பரீட்சையில் கூட பல உதவிகள் தன் மைத்துனனுக்கு அளித்ததாகக் கேள்வி. கைக்கெட்டியதை வாய்க்கெட்டாமல் செய்த என்னைத் தன் பரம வைரியாகக் கருதி, மிகவும் கஷ்டமான பொறுப்புள்ள, புதிதாய் வேலைக்கு வந்தவர்களுக்கு அளிக்கத் தகாத வேலைகளை எனக்களித்தார். கணிதத்தில் வல்ல எனக்கு இவ்வேலைகள் மிக எளிதில் புரிந்துவிட்டன. பாங்கில் வேலை செய்துகொண்டு "பிரைவேட்" ஆக பி. ஏ. பரீட்சையும் தேறி விட்டேன்.

சென்னையில் தம்புச்செட்டித் தெருவில் ஏழு ரூபாய் வாடகையில் ஒரு தாழ்வாரத்தைத் தேடிப் பிடித்து குடி புகுந்தோம்.

ஐந்தாறு மாதங்கள் அமைதியாய் ஓடின. இந்த சமயத்தில்

Maniyam Industrial & Engineering Works

Government approved Fabricator, Contractor.

(Regd. No. 5.)

A.C.C. CEMENT STOCKIST

2, Sankari Road,

Trichengode,

(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமானவேலைத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்துகொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

'பாங்க்' நிர்வாகத்தில் டெல்லியில் நடத்தப்படும், இந்தியாவிற்கே பெரிதெனக் கருதப்படும் பரீட்சையில் கலந்து கொள்ள எனக்கு நான் ஏற்கெனவே விண்ணப்பம் செய்திருந்ததால், அழைப்புவந்தது. எனக்கு பரீட்சை எழுதசெல்ல ஒருவார 'விடுமுறை' அளிக்க மறுத்தார் மானேஜர் மாதவ். என் விடுமுறை விண்ணப்பத்தை வேறு வழியில்லாமல் டைரக்டர் ஜாக்ஸனிடம் அனுப்ப வேண்டியதாயிற்று. அவர் உடனே மானேஜர் மிஸ்டர் மாதவ் அவர்களைத் தன் மேஜை மேலுள்ள டெலிபோன் மூலம் கூப்பிட்டார்.

"நமது ஸ்தாபனத்திற்குப் பெருமையளிக்கவல்ல காரியத்தை ஒரு அற்ப விஷயத்தைக் காரணமாகக் கொண்டு தடைசெய்வது சரியல்ல. மருந்தீஸ்வரனுக்கு லீவைக்கொடுங்கள்" எனக் கூறிவிட்டார்.

குமுறும் எரிமலை அக்னிக் குழம்பை வாரிஞெங்கி வீசத் தயாராய்விட்டது.

டெல்லி சென்று பரீட்சை எழுதிவிட்டு திரும்பி ஒரு மாதம் சென்றிருக்கும். ஒரு நாள்டைரக்டர் துரையின் சேவகன் என்னை 'துரையவர்கள் கூப்பிட்டார்' என்றான்.

என்ன கஷ்டமோ என்று ஒரு வகை பயத்துடன் எனது நாற்காலியில் கழற்றி மாட்டிவைத்திருந்த என் ஒரே கோட்டை மாட்டிக்கொண்டு, எல்லா பித்தான்களையும் சரிவர மூடிக்

கொண்டு 'பியூனே'ப் பின் தொடர்ந்தேன்.

அவர் என்னை அன்புடன் வரவேற்று, "மிஸ்டர் மருந்தீஸ்வரன் "கன்கராசுலேஷன்ஸ்." டெல்லியில் எழுதின பரீட்சையில் இந்தியாவிற்கே முதலாம் நீங்கள். பரீட்சைக் குழுவினர் உமக்களிக்குமாறு பரிசாக இந்தத் தங்கப்பதக்கத்தை அனுப்பியிருக்கின்றனர்," என்று ஒரு அழகிய கனமான ஜரிகை ரிப்பனில் கோர்க்கப்பட்ட ஓர் தங்கப்பதக்கத்தை, என்னிடம் கொடுத்தார். பிறகு சிரித்துக்கொண்டே, "இன்று முதல் உங்கள் சம்பளத்தை ஒரு ஐந்து ரூபாய் உயர்த்தபடும்." என்ருர்.

"மிகவும் நன்றி சார்," என்றேன்.

பதக்கம் நான்கு சவரன்களாவது இருக்கும்போல் சற்று கனமாகவேயிருந்தது. பரீட்சையின் பெயரையும் வருடத்தையும், முதல் பரிசு என்றும் குறிப்பிட்டு, திருவான்மியூர் மருந்தீஸ்வரன் என்று ஆங்கிலத்தில் பொறித்திருந்தது. அதைப்பார்த்து அம்மா அழுதே விட்டார்கள.

ஒருவாரம் சென்றிருக்கும் மத்தியான சாப்பாட்டிற்கு ஒட்டலுக்குச் சென்றுவிட்டு திரும்பிவந்தேன்! என்ன ஆச்சரியம்! ஆபீஸ் பூராவும், பல போலீஸ்காரர்கள் நின்றிருந்தனர். டைரக்டர், மானேஜர், போலீஸ் கமிஷனர் ஒரு மூலேயில் நின்றனர். மானேஜர், "திடீரென்று ஒரு நூறு ரூபாய் நோட்டு காணப்படவில்லே. அதனல் உங்களெல்லாரையும் சோதிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மன்னிக்கவும்" என்று சோதனையைத் துவக்கிவைத்தார். என் முறை வந்தது. சோதனையானதும் திரும்பினேன்.

"ஸார், அதோ தொங்கும் கோட் உங்களதுதானே?" என்ருர் கமிஷனர்,

"ஆம்," என்றேன்.

"அதையும்..."

உடனே அதைக்கொணர்ந்து அவரிடம் கொடுத்தேன். என்னிடம் அதிகமான கோட்டுகள் இல்லாதமையால், என் நாற்காலியில் கோட்டை எப்பொழுதும் கழற்றி மாட்டி வைப்பது வழக்கம். வியர்வையாலும் உபயோகிப்பதாலும் கசங்காதல்லவா? என்னவென்று கூறுவது? அந்த நூறு ரூபாய் நோட்டை என் கோட்டின் உள்பையிலிருந்து வெளியே எடுத்தார் கமிஷனர்!!

முகம் வெளிற, கைகள் நடுங்க, வியர்வை ஆருய்ப்பெருக, எதுவும் பேச முடியாதபடி தொண்டை அடைக்க, "ஸார் அது எப்படி என் கோட்டிலிருந்தது என்று எனக்குத் தெரியாது," என்றேன்.

"உங்கள் வாக்குமூலத்தை போலீஸ் ஸ்டேஷனில் கூறுங்கள். உம்! புறப்படுங்கள்" என்ருர். அதிகாரமும், கயவனைக் கையும் களவுமாகச் கண்டு பிடித்த பெருமையும் அவர் குரலில் தொனித்தது.

(அடுத்த இதழில் முடியும்)







1

பீகார் மாநிலத்தில் பொகரோ என்னுமிடத்தில் உள்ள நிலக்கரி கழிவுப் பகுதி.

2

குரோசியா என்னுமிடத்தில் ரயிலில் நிலக்கரியை ஏற்றும் இடம்.

3

பொகரோ நிலக்கரிச் சுரங்கத்தில் நிலக்கரியை வெட்டி எடுக்கின்றனர்.

பொன் வண்டு

[அமலன்]

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இச்செய்தி காட்டுத் தீ போல் கிராமமெங்கும் பரவியது. விஷயத்தைக் கேட்ட லில்லி உணர்வற்றுத் தரையில் சாய்ந்தாள். பெண் வீட்டில் ஒரே பரபரப்பு! குழப்பம்!! அவளது தந்தை தாங்கமுடியாத வேதனையால் துடித்தார். களிப்பும், வனப்பும், கூடியிருந்த லில்லியின் முகம், கருத்து சிவந்து வாடியது. உடலில் எவ்வித அசைவையும் காணோம். செழித்து வளர்ந்த லில்லிச் செடி திடீரென பூவையும் இலையையும் உதிர்த்து வெறும் கோலாக நின்றது போலிருந்தது நிலைமை. கிராமத்து வைத்தியர் வந்தார்; மருந்து கொடுத்தார். இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் லில்லி தெளிந்து எழுந்தாள்; ஆனால் அவள் முகத்தில் சோகமே குடிகொண்டிருந்தது. யார் என்ன கேட்டாலும் அவள் சரியாகப் பதில் சொல்லுவதில்லை; வெளியே தலைகாட்டுவதில்லை. தன்னைக் காதலித்துத் திருமணம் செய்யமுன் வந்த அன்புவாசன் திடீரென்று இப்படி மாறுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அவள் ஏழை! அவன் பணக்காரன்! என்ன செய்வது? அவள் மௌனக் கண்ணீர் வடித்தாள்.

"ஏழை அழுதக் கண்ணீர் கூரிய வாளுக்குச் சமம்" அன்புவாசனின் இதயத்தில் அந்தவாள் என்றுவது ஒரு நாள் பாயாமலா போகும்?

நடந்தது நடந்துவிட்டது. நாட்களும் நகர்ந்து விட்டன. கோபம் தெளிந்த பிறகுதான் "ஏழைப்பெண்ணின்வாழ்வைப் பாழாக்கிவிட்டோமே" என்று பொருமினான் அவன். ஆத்திரத்தால் எழுந்த முன் கோபம் பல பலஹீனங்களை ஏற்படுத்தி பாவம் லில்லியின் ஆசையில் மண் போட்டுவிட்டதே! இனி அவள் கதி? பழைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாய் எழுந்து துயரங்களுக்கெல்லாம் சிகரம் போல் அவன் மனத்தை அலைக்கழித்தது. சிலசமயம் லில்லியிடம் போய் மன்னிப்பு கேட்கலாம்போலத் தோன்றும். இவ்வளவும் நடந்த பிறகு அவள் முகத்தில் எப்படி விழிப்பது? எப்படி மன்னிப்பு கேட்பது? மனத்தைக் கல்லாக்க முயன்றான்; முடியவில்லை. லில்லியின் நினைவு அடிக்கடிவரும். அப்போதெல்லாம் இன்னதென்று விளங்காத வேதனையால் மனம் தவிக்கும். அவளது ஏமாற்றம், துயரம், கண்ணீர் எல்லாம் அவன்

4

இதயத்தை வாள் கொண்டு அறுப்பது போலிருந்தது. திடீரென ஒருநாள் ஏதோ முடிவுக்கு வந்துவிட்டவன் போல் லில்லியைப்பற்றி விசாரித்து இராமத்து நண்பனுக்குக் கடிதம் எழுதினன். இரண்டு நாட்களுக்குப்பிறகு நண்பனிடமிருந்து பதிலும் கிடைத்தது. அதில் "அன்புவாசன் கோபமாய்ப் போன பிறகு லில்லிக்கு எவ்வளவோ வரன்கள் வந்ததாகவும், லில்லி தனக்குக் கல்யாணமே வேண்டாமென்று கூறி விட்டதாயும், கடைசியில் இரண்ட சொத்துக்களுடன் சிமையிலிருந்து வந்த தாய் மாமன் அவளையும் அவள் தந்தையையும் பட்டணத்திற்கு அழைத்துக் கொண்டு போய் விட்டதாயும் அதற்குப்பிறகு அவளைப்பற்றி எதுவுமே தெரியவில்லையென்று" எழுதியிருந்தான்.

லில்லியை எங்கே எல்லாமோ தேடி அலுத்த பிறகு அன்புவாசன் ஆண்டவன் திருப்பணியில் ஈடுபட்டு, முன் கோபத்தை விட்டு, ஜீவன்களிடத்தில் அன்புகாட்டி, லில்லியின் நினைவு நீங்காமல் 'பொன் வண்டை' வளர்த்து வந்தான். கடவுள் மக்களிடம் எதிர்பார்ப்பது என்ன? அன்பும் ஜீவகாருண்யமும் தானே!

அன்புவாசன் தன் கதையை சொல்லிவிட்டு சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். குளமாகத் தேங்கிக் கிடந்த கண்ணீர் இமைக்கரைகளை உடைத்துக் கொண்டு வழிந்தோடியது. நான், நண்பனது கவலையை மாற்ற எண்ணினேன்.

"அன்புவாசா! நான் சொல்வதைக் கேள். "நீங்களோ மிஷன் பாதிரியார்! துறவறத்திலும் இல்லறம் நடத்தலாம். ஏதாவது ஒரு நல்ல பெண்ணைக் பார்த்து......!"

கண்களைத் துடைத்துக் கொண்டே பாதிரியார் தொடர்ந்தார் "என் இதயத்தில் லில்லி இடம் பெற்றுவிட்டாள் அவள் இல்லை என்றால் கல்யாணமே வேண்டாம்..."

அவள் எங்கிருக்கிருள்? எப்படி இருக்கிருள்? என்ற விவரமே தெரியவில்லையே!"—நான் குறுக்கிட்டேன்.

"மிஸ்டர் அமலன்! நீங்கள் நினைத்தால் எங்கள் இருவரையும் ஒன்று சேர்க்கலாம்."

"என்ன சொல்கிறீர்கள்...?"

"ஆம்! கடவுள் சிருஷ்டிக்க முடியாததெல்லாம் எழுத்தாளன் சிருஷ்டிக்க வில்லையா? நீங்கள் நினைத்தால் உங்கள் கதை மூலம் லில்லியை எங்கிருந்தாலும் வரவழைத்து விடலாம்."

நண்பனின் அன்புக் கட்டளை என்னை திகைக்கச் செய்து விட்டது. என் கற்பனைக்கும் எட்டாத வேலையைக் கொடுத்து விட்டானே? வெற்றியில் நம்பிக்கையுண்டு. ஆனல்...? இருவரது சந்திப்பும் எந்த நிலையிலிருக்குமென்பது தான்புதிராக இருக்கிறது. லில்லி தன் வாழ்நாள் முழுவது நண்பனுக்காகக் காத்திருப்பாள் என்பதில்

என்ன நிச்சயம்? மேலும் பெண் மனம் எப்படிப்பட்டதென்று யாராலும் புரிந்து கொள்ள முடியாதே!

இருவரும் எழுந்து பங்களாவிற்குப் போனோம். இரவு 7 மணி வண்டிக்கு நான் வேலையி நிமித்தம்வெளியூர் போகவேண்டியிருந்ததால் நாள் முழுவதும் நண்பனுடன் தங்கினேன். சரியாக மாலை நாலு மணிக்கு அன்புவாசன் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டான். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் ஆஸ்பத்திரிக்குச் சென்று உடலாலும் உள்ளத்தாலும் பலம் குன்றி மரணப் படுக்கையில் கிடக்கும் நோயாளிகளுக்கு ஆறுதல்கூறி அவர்களுக்காக வேண்டிக்கொள்வது கிறிஸ்து மத தர்மம். அதற்காக அன்புவாசன் புறப்பட்டான். அவனுடன் நானும் சென்னை ஆஸ்பத்திரியைப் பார்க்கப் பின்தொடர்ந்தேன்.

ஆஸ்பத்திரியின் உள்ளே நுழைந்தோம். எங்கும் ஒரே அமைதி! ஒரே மருந்து நெடி!! சிற்சில இடங்களில் நோயாளிகளின் முனகலும், அலறலும் அமைதியைக் குலைத்தன. முதல் முதலாக ஒரு 'வார்டி'ல் நுழைந்தோம். அங்கே ஒரு பெண் மரணப்படுக்கையில் கிடந்தாள். அவள் உடலிலிருந்து அனல் காற்று வீசியது. உறவினர்கள் ஒன்றிரண்டு பேர் அருகிலிருந்தனர். பயங்கரத்தை சந்திப்பதுபோல் அவள் பிதற்றிக் கொண்டிருந்தாள் வாழ்நாள் பூராவும் செய்த

P. H. முகமது நஸீருத்தீன்

★

டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்

G'I பைப் & பைப்

பிட்டிங்ஸ் வியாபாரம்,

இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்

★

பாலக்கரை ரோடு, திருச்சி-8.

தபால் பெட்டி நெ. 456

போன் : 786

தந்தி : HARDWARE

★

குறிப்பு:—

1/157, தஞ்சை ரோடு (அரிய மங்கலம் ஹமீதியா ரைஸ் மில் எதிரில்) சப் டிப்போவிலும் சிமெண்ட் டிலவரி செய்கிறோம்.

திமைகள் தனியாகத்திரண்டு வந்து அவள் தலையைக்கனக்க வைத்திருந்தது. நம்பிக்கை இழந்த முகபாவம்!

அன்புவாசன் அந்தப் பெண்ணைப்பார்த்ததும் பிரமித்துப் போய்விட்டான். கடைசி முறையாகக் கண்களை விழித்துப் பார்ப்பதுபோல் அவள் பார்த்தாள். அன்பு வாசனின் முகம் நிழல்போல் தெரிந்தது. மெதுவாக உட்கார முயற்சித்தாள். அருகிலிருந்தவர்கள் தூக்கி உட்காரவைத்தனர். பாதிரியாரை நன்றாக உற்றுப்பார்த்தாள். கடைசியாக அணையப் போகும் விளக்கின் பிரகாசம் அவள் விழிகளில் மின்னிற்று.

''ஆ...நீங்க...ளா?!' எங்கிருந்தோ வந்த ஒரு அசுர சக்தி அவளை வாய் திறந்து பேசவைத்தது.

அன்புவாசன் வாய்புதைத்து உட்கார்ந்தான். அவனால் ஒன்றும் பதில் சொல்லமுடியவில்லை. மெதுவாக அவனது கைகளைப் பற்றிக்கொண்டு "என்...கடிதம் இருவர்...வாழ்க்...கையும்...!" அவளால் பேசமுடியவில்லை.

மன்னிப்பைக் கோரி அன்புவாசனைப் பார்த்தாள். அவன் விழித்தான். வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை; கண்களிலிருந்து நீர் சொட்டியது. மீளமுடியாத தவிப்பில் ஆழ்ந்தான். அவளது உயிர் துடித்தது. அன்பு வாசனுக்கோ உயிரும் உடலும், நெஞ்சும், நினைவும் சேர்ந்து துடித்தன. இந்த எதிர்பாராத சந்திப்பு எனக்கு வேதனையைக் கொடுத்தது. உறவினர்கள் வாய்விட்டு அழத் தொடங்கினர். அதே சமயம் உள்ளே நுழைந்த நர்ஸ் ''உஷ்! புதிதாக வந்த டாக்டரம்மா பார்வையிட வருகிறார்கள். தயவு செய்து அமைதியாக இருங்கள்''—என்றாள்.

சில நிமிடங்களுக்குப் பிறகு டாக்டரம்மா உள்ளே வந்து பிரத்தியேக முறையில் பரிசோதித்துவிட்டு ஆயாசப் பெருமூச்சுடன் செயலற்று நின்றாள். அகஸ்மாத்தாக பாதிரியார் அன்பு வாசனும், டாக்டரம்மாவும் ஒருவரையொருவர் மாறி மாறிப்பார்த்தனர். இருவர் உள்ளங்களிலும் அலை புரண்டன.

படுக்கையிலிருந்த பெண் டாக்டரம்மாவின் கையை உரிமையுடன் மெதுவாகப் பற்றி பாதிரியார் கையில் இணைத்து ''நீங்கள்...என் ... தோழியை ..."அவ்வளவுதான் அவளுக்கு மூச்சுத் திணறியது. நாக்கு வறண்டது. மெள்ள மெள்ள நாடி அடங்கத் தொடங்கின. இதுவரை நெஞ்சைக் குடைந்து கொண்டிருந்த ஒன்று பறந்து போனது போல் முகத்தில் புன்னகை தவழ, சாவிலேயும், வாழ்வின் இன்பம் பெற்றவள் போல் அவள் உயிர் உடலை விட்டுப் பிரிந்து போயிற்று. டாக்டரம்மாவும், அன்பு வாசனும் மௌனமாக ஒருவரை ஒருவர் மாறிமாறிப் பார்த்துக் கொண்டனர்.

எனக்கு அந்த நிலையில் எதுவுமே கேட்பதற்கு தர்மசங்கட

மாயிருந்தது. அதே சமயம் ரயிலுக்கும் போக வேண்டிய நேரமும் ஆகிவிட்டது. அன்பு வாசன் அருகில் சென்று காதோடு காது வைத்தாற் போல் "அன்பு வாசா! எனக்கு நேரமாகிவிட்டது. நான் வருகி றேன் விவரங்களுக்குக் கடிதம் எழுது" என்று கூறிவிட்டு விடைப் பெற்றேன். இதுவரை நடந்த நிகழ்ச்சிகளை ஊருக்குப் போனதும் எழுதி வைத்து விட்டு, கதையின் முடிவுக்காக அன்பு வாசனின் கடிதத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந் தேன்.

"சார்... தபால்!"

கடிதத்தை வாங்கி ஆவலு டன் பிரித்தேன். கல்யாணப் பத்திரிகை என் கவனத்தை முதலில் கவர்ந்தது. பிரித்துப் படித்தேன்.

"அன்புவாசனுக்கும்-லில்லிக் கும் திருமணம்!"

எனக்குத் தூக்கிவாரிப்போட் டது.

நண்பனின் கடிதத்தைப் பர பரப்புடன் படித்தேன்.

அன்புள்ள அமலனுக்கு!

நலம். எல்லோர் கற்பனைகளை யும் திணற அடிக்கும்படியாகத் தான் சம்பவம்நடந்திருக்கிறது. கடிதம் எழுதியவளும், கடைசி யில் இறந்து போனவளும் லில்லி என்றுதானே நீ இது வரை கற்பனை செய்து கொண் டிருந்தாய்.

நண்பா! உண்மையில் கடிதம் எழுதியவளும், இறந்தவளும் ரோசியேதான். என்ன வியப் பாக இருக்கிறதா? பெண்கள் உள்ளத்தில் ஒருவர்மீது ஆசை விழுந்துவிட்டால் அதை லே சில் மாற்றமுடியாது. ரோசி என்னை நேசித்தாள்; நானோ லில்லியை விரும்பினேன். இது ரோசிக்கு ஏமாற்றம் தானே? சேற்றில் மலர்ந்த செந்தாமரை கடவுளின் பாதமலரை அலங்க ரித்தால், ரோஜாப்பூ சும்மா இருக்குமா? ரோசி யோசித் தாள். எங்கள் இருவரையும் பிரித்து விட்டால்? பிறகு......? கடைசியாக கல்யாண தினத் தன்று காலையில் அவளுக்கு சரி யான சந்தர்ப்பம் கிடைத்துவிட் டது. நாங்கள் குளித்துக்கொண் டிருப்பதை பயன்படுத்தி, லில்லி எழுதுவதுபோல் அந்தக் கடிதத்தை எழுதி கொல்லைப் புறமுள்ள குளத்தங்கரைக்குப் பூனைபோல் வந்து வைத்துவிட் டுப்போய்விட்டாள். ரோசி குறும்புக்காரி என்றுதான் நினைத்தேன். அவள் புத்தி சாலியுங்கூட! என்னையும், என் னுடன் வளர்ந்துவரும் முன் கோபத்தையும் எடைபோட்டு நான் நம்பும்படியாக எவ்வளவு விசித்திரமாகக் கடிதம் எழுதி யிருக்கிறாள்? கடைசியில் ஒரு பாவமும் அறியாத லில்லி என் முன் கோபத்திற்குப் பலியா னாள். பயங்கரப்புயல் லில்லிக் கும் எனக்குமிடையே அடித்து ஓய்ந்துவிட்டது. இனி அமைதி தான். நெஞ்சின் ஆழத்தில் இதுவரை புதைத்து வைத் திருந்த இந்த ரகசியத்தை, லில்லியை ஆஸ்பத்திரியில் லேடி டாக்டராக சந்தித்த அன்

பொடிகளில் சிறந்தது எது?

கிரிஜா நெ. 1. பட்டணம் பொடி

நேதாஜி நெ. 1. பட்டணம் பொடி

சவரன் மார்க் பவுன் கலர் பொடி

ஸ்ரீ ஆண்டாள் ஆபீஸர்

ஸ்பெஷல் நெய் பொடியும் எமது தயாரிப்பே.

ராதா பவுன்கலர் & ஆபீஸர் பொடி

RADHA SNUFF

MANUFACTURERS: RADHA & CO., 12.T.H. ROAD. MADRAS-21.

றே சொல்லியிருக்கிருள். தன் தவறுதலை கடைசி நேரத்திலாவது சொல்லி அழுது, மன்னிக்கும்படி லில்லியிடம் மன்னிப்புக் கேட்டிருக்கிருளே, அந்த நல்ல குணத்திற்காக ரோசியை நாம் பாராட்டவேண்டியதுதான்.

ஒரு "பொன் வண்டு" எங்கள் இருவர் உள்ளங்களேயும் இணைத்தது மற்ருெரு "பெண் வண்டு" எங்கள் இருவரையும் விசித்திரமாகப் பிரித்தது. கடைசியில் வண்டும் மலரும் ஒன்று சேர்ந்துவிட்டது. இனி யாராலும் பிரிக்க முடியாது.

வாடிய பூ உதிர்ந்தது. தேடிய பூ கிடைத்துவிட்டது.

நாளை புதன்கிழமை எனக்கும்—லில்லிக்கும் திருமணம் உடனே புறப்பட்டுவா. மற்றவை நேரில்.

அன்பன்,

அன்புவாசன்,

கடிதத்தைப் படித்து, கதையையும் எழுதி முடித்துவிட்டு நிறைந்த மனத்துடன் ஜன்னல் வழியே பார்த்தேன். கொல்லையில் "பூமகளின்" புன்னகை போல் வண்ணமலர்கள் பூத்துக்குலுங்கின. மகரந்தத்தில் புரண்டு எழுந்த ஒரு கருவண்டு இளங்கதிரவனின் ஒளி பெற்று "பொன்வண்டாக" மின்னியது.

(முற்றும்)

“எத்தன் வந்து ஏற்பானோ?”

—[அ. ப. விந்தைவேலன்]—

★

தென்னம் பாளைச் சிரிப்புடையாள்
  தெவிட்டா அழகின் அரசியவள்!
கன்னக் கதுப்புங் கனியிதழுங்
  காணக் காணத் தெவிட்டாவாம்!
எண்ணத் தொலையாக் கற்பனையை
  இதயம் மூட்டிச் சூடேற்ற
முன்னர் இருந்த நிலைநினைந்து
  மூர்ச்சை யுற்று விழுந்தனளே.

பாலும் பழனுங் கசந்தனவே;
  பன்னீர்ச் சூடாய்க் கொதித்ததுவே;
காலும் கையும் இலையெனினும்
  காலம் கடத்தத் தயங்காளாம்!
வேலும் வில்லும் தாங்குமிள
  வேலன்—அத்தான் இலையாயின்
கோல மயிலீங் குயிர்வாழாள்;
  கொதித்து வெந்தே யிறந்திடுவாள்.

கள்ளன் வேலன் அவள்மனதைக்
  கவர்ந்து கொண்டு சென்றதினால்
முள்ளில் வீழ்ந்த சிறுபுழுவாய்
  மொட்டை மரமாய்க் கதிரிழந்து
வெள்ளைத் தாமரைத் தண்பூவாய்
  வெதும்பி வாழ வருந்துகிறாள்;
எள்ளின் அளவுங் கருணையிலா
  “எத்தன் வந்து ஏற்பானோ?”

★

"அழகுக் கலை"

—சோ. அரங்கநாதன்—

அறிவு புதுமையை வேண்டும்போதும் உள்ளமும் உணர்வும் ஒருங்கே இணைந்துஒன்றை நாடும்போதும் நம்மையறியாமலே இன்பம் பிறக்கிறது. துன்ப வேளையில் செவிக்கின்பந்தரும் இசையும், கண்களுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் நல்ல நாடகம், நடனம், திரைப்படக்காட்சி போன்றவைகளும் அழகுக் கவர்ச்சியில் நம்மை நிலைபெறச் செய்வதுமல்லாமல், 'கலை' என்ற தனிச் சிறப்புச் சொல்லுக்கு உரியதாகவும் விளங்குகின்றன. தமிழர் பண்பாட்டின் அடிப்படையில் அமையப்பெற்று, பொழுது போக்குக்கென்று இருக்கின்ற நிகழ்ச்சிகளில் கலைமணங்கமழ்வது இயல்பு. நாடகம், நடனம், திரைப்படம் ஆகியவை 'கலை' என்ற பெயரில் பெருமைக்குரியதாகவும் திகழ்கின்றன. ஓவியம் வரைதல் சிற்பங்கள் செய்தல் ஆகிய தொழில்களிலிருந்து முடிவெட்டும் தொழில் வரையில் 'கலை' என்ற பெயர் சூட்டி பெருமை கொள்ளும் உயர்ந்த பண்பாடுடைய நம் தமிழ்நாடு திறமைக்கு எடுத்துக் காட்டாக விளங்கி வருகிறது.

பொது வாழ்வில் மக்களின் தேவையுணர்ந்து செய்யப்படுகின்ற தொழில்களில் கலை அழகைக் காண்கிறோம். செய்யப்படுகின்ற தொழில் சிறப்புள்ளதாகவும் 'தொழிற்சாலை' என்ற பட்டியலில் இடம்பெற்றுள்ளதாகவும் விளங்கினாலும் அவைகளில் சில பின்தங்கியே உள்ளன. அரசியலார் சிறு கைத் தொழில்களுக்கு ஊக்கந்தந்து உதவிபுரிந்து போற்றிடும் இந்நாளில் ஓரளவு தமிழ்நாடு முன்னணியில் உள்ளதென்றே கூறலாம்.

செய்தொழிலில் கலை அழகு வாய்க்கப்பெற்றவைகளைக் கண்டு வியக்கும் நேரத்தில் ஆபரணங்கள் செய்யும் தொழிலையும் மறந்து விடுவதற்கில்லை. மாந்தர்க்கு அழகுக்கழகு அளித்து பொலிவோடு விளங்கும் அணிகலன்கள் பற்றியும், அவைகளைச் செய்யும் தொழிலின் மேன்மை குறித்தும் சிறிது ஆராய்வோம்.

'ஆபரணங்கள் மக்களுக்கு அவசியந்தானா என்ற வினா எழுப்பத் தோன்றும். மக்கள், தங்களுடைய வாழ்க்கையில் அன்றாடத் தேவைகளை யாவையும் பூர்த்தி செய்துகொண்ட பின்னர் ஆடம்பர வாழ்க்கையில் சிறிது கவனம் செலுத்த முற்படுகின்றனர். தங்களிடம் எஞ்சியுள்ள பணத்தில் நல்ல அணிகலன்களைச் செய்து அணிந்து கொள்ள விரும்புகின்றனர். ஒவ்வொருவருக்கும் அணிகலன்கள் தங்களை

அழகு படுத்துவதற்கென்று இருப்பதோடல்லாமல் அவைகள் அவர்களுக்கு கைவசமுள்ள பொருட் செல்வங்களாகவும் விளங்குகின்றன.

இளமங்கையொருவள் பூச்சூடி பட்டுடுத்தி நெற்றியில் திலகமிட்டு பொலிவோடு திகழ்ந்தாலும் அணிகலன்கள் இல்லையேல், அவள் அழகில் குறையிருப்பதாகவே தோன்றும். இயற்கையில் அழகுள்ளவள் அணிகலன்கள் பூணுவதால் பேரழகு வாய்ந்தவளாகிருள். அவள் அழகுக்கு அழகு சேர்த்து தனிக் கவர்ச்சியைத் தருவது அணிகலன்களாகும்.

மண விழாவில் புது வாழ்வு தொடங்கப் போகும் இளந்தம்பதிகளுக்கு 'மாங்கல்யம்' எத்துணை அவசியம் என்பதை யாவரும் அறிவர். பெண்மையின் உயர்வுக்கு பெரியோர் வகுத்த முறையை யொட்டி கற்பு நெறிக்குச் சான்ருக— குடும்ப ஒழுக்கத்திற்கு வேலியாகத் திகழ்வதுதான் 'மாங்கல்யம். மாங்கல்யத்தின் பெருமையைப் போற்றிடும் வேளையில் அதைச் செய்வோர் தொழில் திறமையை சிறிது எண்ணிப்பார்த்தால் அவசியமல்லவா?

ஆழ்கடலடியில் மூழ்கி எடுக்கப்பட்ட முத்து—மண்ணுக்கடியில் அகழ்ந்து சேகரிக்கப்படும் தங்கம்—மதிப்புள்ள பொருட் செல்வங்களாகும். ஆயினும், அவைகள் சேர்ந்து பொற்கொல்லர் கரங்கள்பட்டு முத்துச்சரமாக, வளையல்களாக, மற்ற அணிகலன்களாக உருவாக்கப்படும்போதுதான் அழகு பெறுகின்றன. அவைகளின் மதிப்பும் உயருகின்றன.

மென்கரங்களில் வளையல்களணிந்து, காதுகளில் அணிகள் பூண்டு, கழுத்தில் உயர்ந்த மணிமாலைகளோடு மங்கை ஒருவள், கற்புக்கு அணிகலனும் 'மாங்கல்யம்' ஏற்று, கணவன் அருகில் அன்னநடை பயின்று வரும்காலை 'அழகுக்கலை' என அவளைப்போற்றி மகிழ்வான்.

பெருமைக்குரியதான இத்தகைய தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலோர் தாழ்நிலையில் தான் உள்ளனர்.

வீடுகட்டும் தொழிலாளர் எல்லோருமா சொந்த வீட்டில் வாழுகின்றனர்? விலையுயர்ந்த துணி நெய்பவனும் உடுக்க சரிவர ஆடையின்றி இருப்பதைக் காண்கிருேமல்லவா? கழனிகளில் உழுது பயிர்விளைவிப்போனுந்தான் சில வேளைகளில் குடிக்கக் கூழின்றி வாடுகிருன். அதே நிலைதான் இன்று ஆபரணங்கள் செய்யும் தொழிலாளிக்கும் இருந்துவருகிறது. ஆசைக்கு அணிந்து அழகு பார்க்க ஒரு குண்டுமணி எடையுள்ள தங்கம் கூட அவனுக்குச் சொந்தமானதாக இல்லை.

சிறுகைத்தொழில்களுக்கு ஆதரவு தருகின்ற அரசாங்கம் சற்று இந்தத் தொழிலையும் உயர்த்த முற்பட்டால் அதில் ஈடுபட்டுள்ள ஏழைத்தொழிலாளர் துன்பம் குறைவதற்கு வழி ஏற்படும்.

தங்கத்தை உருமாற்றி வகைவகையான ஆபரணங்களைச் செய்து தருகிருனே தொழிலாளி—அவன் 'அழகுக்கலை'யை வளர்ப்பவன்—அவன் ஒரு கலைஞன்!

பைத்தியம்!

—சி. இரா. சாரநாத்—

இலேசாக் மழை தூறத்துவங்கியது. மாடியில் கட்டிலில் அமர்ந்தபடியே சட்டப் புத்தகம் ஒன்றைப்படித்துக்கொண்டிருந்த நான் மெதுவாக எழுந்து கைப்பிடிச் சுவர் பக்கமாக நடந்தேன்.

கைப்பிடிச் சுவராருகே நின்றபடி வானத்தை நோக்கினேன். எங்கும்ஒரே கருமை. மாதிரிக்கு ஒரு வெள்ளை நிறமோ அன்றி வேறு பார்க்கவே முடியாதபடி ஒரேகார் மேகம்.

தோட்டத்தில் உள்ள மாமரத்தில் என் விழிகளை ஓட்டினேன். அங்கே—

ஒரு ஜோடிப் புரு மரக்கிளை ஒன்றில் அமர்ந்தபடியே கொஞ்சிக்கொண்டிருந்தது. புருவின் மேற்பகுதியில் இலைகள் அடர்ந்து இருந்தமையால் மழைத் துளி புருக்களின்மீது விழவே வழி இல்லை.

ஆண்புரு தன் அலகினைப் பெண்புருவின் அலகின்மேல் வைத்தது. பெண் புருவின் சிறகு படபடத்தது!

இதைப்பார்த்தவுடன்—

"மனிதனாகப் பிறப்பதை விட பகுத்தறிவே அற்ற இது போன்ற பறவைகளாகப் பிறப்பது எவ்வளவோமேல்" —என்று முணுமுணுத்தது என் உதடுகள்.

காற்றின் வேகம் சற்று அதிகமாகியது- குளிரும் அதிகமாவதுபோல் தோன்றியது. 'பாண்ட்' பையிலிருந்த சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தேன், வாயிலிருந்து வெளியேறிய புகை சுருண்டு சுருண்டு மேல் எழும்பிச் சென்றது. அப் புகையைப் போலவே கடந்தகால நினைவும் சுருண்டுச் சுருண்டு மேல் எழுந்து என் உள்ளத் திரையில் நிழலாடியது.

ஃ ஃ ஃ

நாராயணன், எனக்கு உள்ள ஒரே ஒரு உயிர்த் தோழன். என் வீட்டிற்கு அருகில்தான் அவனது வீடும். தங்கமான பையன். என்னிடம் எதையும் மறைக்காமல் சொல்வான். அப்படி அவன் சொன்னவற்றின் தொகுப்பை என்னுடைய நடையிலே கீழே தருகிறேன்.

ஜனகம்!—இவள்தான் நாராயணனின் அத்தை மகள்; அவனது அன்பிற்கு உரியவள். சற்றுமுன் மாமரக்கிளையில் நான் கண்டேனே ஜோடிப்புரு; அதனது அன்பிற்குச் சற்றும்

மனத்தைக் கொள்ளை கொண்டவள் மண நாள் அன்று பிணமாகி விட்டாள், அவனை நடைப் பிணமாக்கி விட்டு.

தாழ்ந்ததல்ல நாராயணன்— ஜனகம் அன்பு. ஆனால்—

ஜனகத்தை மருமகளாக ஏற்றுக் கொள்ள நாராயணனின் பெற்றோருக்குச் சற்றும் இசைவு இல்லை. காரணம் அவள் ஏழையின் வயிற்றில் பிறந்த குற்றத்திற்காக! ஜனகத்தின் தந்தையின் உள்ளத்தில் மட்டும் எப்படியும் நாராயணன் தன் மருமகனாகி விடுவான் என்ற நப்பாசை இருக்கத்தான் செய்தது. அதுவும் எத்தனை நாளைக்குத்தான் தாக்குப் பிடிக்கும்? நாராயணனின் தந்தையோ மணப்பேச்சையே எடுப்பதில்லை. இவராகத் துவக்கினாலும் சரியான பதிலேதும் கூறாது மழுப்பி விடுவார். பெண்ணிற்கோ "மதமத" வென்று வயதுஏறிக்கொண்டே சென்றது. கடைசியில் வேறு வழியின்றி வெளியில் வரன்களைப்பார்க்க ஆரம்பித்து விட்டார் ஜனகத்தின் தந்தை. இந்த சமயத்தில்தான் ஒரு நாள்—

மாலை வேளை. ஜனகத்தின் தந்தை வெளிவேலையாக எங்கோ போயிருந்தார். வீட்டில் அவள் மட்டும் இருந்தாள். அந்த சமயத்தில் உள்ளே நுழைந்தான் நாராயணன்.

சோகப்பதுமையாக உரலருகே அமர்ந்து மாவை ஆட்டிக் கொண்டிருந்த ஜனகம் நாராயணனைக் கண்டதும் பெருக்கெடுத்து வந்த கண்ணீரைத்துடைத்துக் கொண்டே "வாங்க அத்தான்!" என்றாள்.

"ஜனகம்!"— அன்பொழுக அழைத்தபடியே அவளை நெருங்கினான் அவன். அவளும் கைகளைக் கழுவிக் கொண்டு எழுந்து வந்தாள்.

"என்ன ஜனகம் இது! அழுதாயா?"—என்று பரிவுடன் கேட்டான் நாராயணன்.

"சிரிக்கும் நிலையிலா நீங்கள் என்னை வைத்திருக்கிறீர்கள்? உங்களையே சதமென்றிருந்தேன் நான். நீங்களோ என்றால் இதைப் பற்றி மூச்சுவிடவும் பயப்படுகிறீர்கள். அலுத்துப் போன அப்பாவும் வெளியே வரன்களைதேட ஆரம்பித்து விட்டார்!-" என்று கூறிய ஜனகம் மேற்கொண்டு பேச முடியாமல் பொருமினாள். மார்பகம் விம்மி விம்மித் தணிந்தது. கண்களில் மடை திறந்தாற்போல் நீர்த் துளிகள் கொட்டியது.

நாராயணன் சிலையாக நின்றிருந்தான்.

"அத்தான்! என் ஆசைகள் அனைத்தும் வெறும் கனவு தானா?"—மீண்டும் கேட்டாள் பொங்கும் துயரை அடக்கிய படியே.

அதற்குமேல் தாங்க முடியவில்லை நாராயணனால்.

"ஜனகா! கவலைப் படாதே! உனக்கு நான்; எனக்கு நீ என்பது தான் நான்முகனின் முடிவு. இப்போதே போய் ஆக வேண்டியதைக் கவனிக்கிறேன்

Please Contact Us

For all your Iron & Steel Consumer goods Requirements of

DOOR HINGES, DOOR PEGS, WALL PEGS, GATE PEGS, AGRICULTURAL IMPLEMENTS, POTS, DRUMS, THAVAS, BONDS, ETC., ETC., ETC.,

R. AMIRDHALINGAM

(Government Approved Fabricator)

Manufacturers and Wholesale suppliers of Consumer Goods.

31, Sattanna Naicken St., Choolai Madras-7

வரும் முகூர்த்தத்தில் நம் திருமணம் நிச்சயம்!"

ஆவேசத்துடன் தன்னையும் மறந்தவாறே கூறினான் நாராயணன்.

"உண்மையாகவா அத்தான்?"—வியப்பால் விரிந்தது ஜனகத்தின் விழிகள்.

நாராயணன் என்னவோ உணர்ச்சியின் வேகத்தில் ஏதேதோ சொல்லிவிட்டான், ஜனகத்திடம். அதைச் செயல்படுத்தும் நேரத்தில்தான் அவனுக்குத் தெரிய வந்தது, அதன் சிரமம்.

தந்தையிடம் விஷயத்தை வெளியிடுவது எப்படி? நேரடியாக, "அடுத்த முகூர்த்தத்தில் ஜனகத்தை என் மனைவியாக்குங்கள்!" என்று சொல்ல முடியுமா? மேலும் நாராயணனுக்குச் சிறுவயதுமுதலே தந்தையைக் கண்டால் சற்று பயம். முதலில் தயங்கியது உள்ளம். முடிவில்—

கேட்டே விட்டான் துணிந்து! ஆனால்—

நாராயணனின் தந்தை சரி என்றும் சம்மதம் தரவில்லை; முடியாது என்றும் மறுப்பு கூறவில்லை. அருகில் நின்று நடப்பவற்றை கவனித்துக் கொண்டிருந்த தாயின் முகத்தை நோக்கினான் நாராயணன். அவளாவது தனக்குச் சாதகமாக ஏதாவது பேசுவாள் என்ற நம்பிக்கை அவனுக்கு! ஆனால்—!

"ஹுக்கும்." மோவாய்க் கட்டையை தோளில் இடித்து

—ஒரு வெட்டு வெட்டியபடியே சமையல் அறைக்குள் புகுந்து விட்டாள் அவள்.

நீண்டநேரம் நின்று பார்த்தான். கிடைத்தபதில் எல்லாம்—

மௌனம் தான்!

முடிவில் மௌனம் சம்மதத்தின் அறிகுறி என்று எண்ணியபடியே துணிந்து விட்டான் நாராயணன்.

அன்று மாலையே புறப்பட்டு விட்டான் ஜனகத்தின் வீட்டிற்கு. நாராயணனின் 'திடீர்' வரவைக்கண்டு ஒரு புறம்வியப்பும், மறுபுறம் மகிழ்வும் பிடித்தாட்ட வாயெல்லாம் பல்லாக, பல்லெல்லாம் புன்னகையாக வரவேற்றார் ஜனகத்தின் தந்தை.

அத்தானின் வரவறிந்த ஜனகம் புள்ளிமான்போல் துள்ளி ஓடினாள், சமையலறைப்பக்கம் சற்றைக்கெல்லாம் கையில் சுக்குமல்லிக் காப்பியுடன் வெளியே வந்தாள்.

ஜனகம் தந்த சுக்குமல்லி காப்பியை ஒரே மூச்சில்குடித்து முடித்த நாராயணன் 'விஷயத்தைச் சொல்வது எப்படி?'' என்று தயங்கினான், ஒருசில வினாடிகள். ஆண்பிள்ளை தான் என்றாலும் தன் திருமணத்தைப்பற்றித் தானே பேசுவது என்பது—அவனுக்கு வெட்கமாகத் தான் இருந்தது. தாய்தந்தையர் இருந்தபோதும் தான் இப்படி வெட்கத்தைவிட்டுப் பேச வேண்டியது இருக்கே என்று எண்ணும்போது—அழுகையே வரும்போல்தான் இருந்தது அவனுக்கு.

"எனக்கும்... ஜனகத்திற்கும் ...திருமணம்...அடுத்த முகூர்த்தத்திலேயே..." ஒரு வழியாகத்திக்குத் திணறி எப்படியோ சொன்னான் நாராயணன்.

துள்ளிக் குதித்தது ஜனகத்தின் தந்தையின் உள்ளம். உள்ளே ஓடினார் பஞ்சாங்கத்தை எடுத்துவந்து புரட்டினார். பிறகு, "வரும் இருபத்தைந்தாம் தேதி நல்ல முகூர்த்த நாள். நான் ஐயரைப் பார்த்துவிட்டு அப்படியே வீட்டுக்கு வந்து அப்பாவைப்பார்த்து பேசுகிறேன்" என்றார் பொங்கும் மகிழ்ச்சியை அடக்க முடியாது.

ஜனகம் அடைந்த இன்ப நிலையை சொல்ல முடியாது!

ஜனகத்தின் தந்தையார் சொன்னது போலவே அன்று மாலை நாராயணன் வீட்டிற்கு வந்தார். வந்தவரை வழக்கம் போல் வரவேற்றார் ஜனகத்தின் தந்தை. சுற்றி வளைக்காமல் நேரடியாகவே விஷயத்திற்கு வந்து முகூர்த்த நாளையும் குறிப்பிட்டார். நாராயணனின் தந்தை மறுப்பேதும் கூறாது தன் சம்மதத்தையும் வெளியிட்டு விட்டார்.

* * *

"இந்தாங்க!''—மதிய உணவை முடித்துக் கொண்டுவந்த என் மனைவி ஒரு மஞ்சள் உறையை நீட்டினாள். அது—

ஒரு திருமணப் பத்திரிக்கை!

"நாம் எண்ணுவதெல்லாம் நடந்தால் பிறகு கடவுளைப்பற்றி யார்தான் எண்ணுவர்!"—என் உதடுகள் இலேசாக முணுமுணுத்தது. தொடர்ந்து பெருமூச்சு ஒன்று வெளிக் கிளம்பியது.

*   *   *   *

ஆம்! திருமணத்திற்கு இன்னமும் ஐந்தே ஐந்து நாட்கள் தான் உள்ளது. அதற்குள்—யாருமே எண்ணிப் பார்த்திராத முறையில்...சே! என்ன பயங்கரம்!

அன்று—

மாலை நேரம். நான் சட்டப்புத்தகத்தில் மூழ்கிக் கிடந்தேன். அப்போது—

"ஐயா! வக்கீலய்யா!"—குரலே கூறியது நாராயணன் குரல் தான் என்று, நிமிர்ந்து பார்த்தேன். அங்கே—

கலைந்த கேசம், பீதி கலந்த பார்வை, துயரம் சொட்டும் முகம், இந்த நிலையில் நின்று கொண்டிருந்தான் நாராயணன். அவனது நிலை ஏதோ ஓர் அசம்பாவிதம் நடந்திருப்பதாகச் சுட்டியது.

"நாராயணா! என்னப்பா இந்தக் கோலம்! திருமண வேளையில்..."—நான் சொல்வதைப் பொறுமையாகக் கேட்கக்கூட அவனுக்கு நேரம் இல்லைபோலும். இடை மறித்தான் அவன்.

"சார், ஆபத்து. என் இன்ப வாழ்க்கை துயரச் சாகரமாக மாறப் பார்க்கிறது. கடவுள் என்னை மோசம் செய்யப் பார்க்கிறார். கனியைக் கையில் தந்து மோந்து பார்' என்று கூறிவிட்டுப் பின் 'இது உன் உடைமை. சுவைத்துபார்" என்று சொல்லிவிட்டு, நான் அதை ருசிக்கஇருக்கும் நேரத்தில் என் கையிலிருந்து பறிக்கப் பார்க்கிறான் அந்தப் பரந்தாமன்!"—உணர்ச்சியோடு கண்ணீர் கொட்டப் பேசினான் நாராயணன். அவன் பேசுவது எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

"என்னப்பா நடந்தது. கடவுளை வீணாகக் குறை கூறாதே. எல்லா நாட்களும் இன்ப நாட்களாகவே இருந்து விட்டால்பின் அந்த இன்பத்திற்குத்தான் ஏதப்பா மதிப்பு? கசப்பும் இனிப்பும் கலந்த வாழ்க்கை தான் சுவை நிறைந்தது. விவரத்தைச் சொல்!"

"நேற்றிரவிலிருந்து ஜனகத்திற்கு உடல் நலம் இல்லை. பிரக்ஞையற்று கிடக்கிறாள். என்ன செய்வது என்று யாருக்கும் புரியவில்லை, சார்! பிழைப்பாளா என் ஜனகம்? சொல்லுங்கள் சார்! வாய்திறந்து சொல்லுங்கள் சார்!"

"வைத்தியம்...!"

"பார்த்தோம். நம் கிராம மருத்துவர் கிட்டாச்சாமி வந்து பார்த்தார். நிச்சயம் சொல்வதற்கில்லை என்று கை விட்டு விட்டார்!"

"கவலைப்படாதே நாராயணா! புறப்படு! நமது காரிலேயே மது

ரைக்குப் போய் பெரிய டாக்டரை அழைத்து வருவோம் புறப்படு!"

உடனடியாக இருவரும் மதுரைக்குச் சென்று ஒரு பிரபல டாக்டரை அழைத்துக் கொண்டு வந்தோம். டாக்டர் எப்போதும் உடனே இருந்து சிகிச்சை செய்தார். அதன் பலனாக இரு தினங்களில் சற்று பிரக்ஞை வந்தது ஜனகத்திற்கு.

முகூர்த்த நாளுக்கு இன்னும் மூன்று தினங்கள் தான் உண்டு எல்லோரும் டாக்டர் உட்பட ஜனகத்தின் கட்டிலைச் சுற்றி உட்கார்ந்திருந்தோம். அப்போது பிரக்ஞை தெளிந்து சிறிது பேசும் தெம்பும் அடைந்த ஜனகம் மெதுவாக "அத்தான்!"-என்றாள். ஜனகத்தின் தலைப்புறம் அமர்ந்து அவளது தலையைக் கோதிவிட்டுக்கொண்டிருந்த நாராயணன், "ஜனகம்!" என்றான் அன்பு ததும்பும் குரலில்.

"என்னைக் கை விட்டு விடமாட்டீர்களே அத்தான்?"-அவளது குரலில்தான் எத்தனை நம்பிக்கை.

"இல்லை ஜனகம் இல்லை! எனக்கு எல்லாமே நீ தான். நீ இல்லா வாழ்வு எனக்கு சுவைக்காது, ஜனகம்! சுவைக்காது!"-நாராயணன் கூறினான் உறுதியாக.

* * *

சாரல் பலத்த மழையாக மாறத் தொடங்கியதால் என் அறைக்கே திரும்பினேன். திருமணப் பத்திரிகையை மேஜை மேல் வைத்துவிட்டு அங்கு ஸ்டாண்டில் இருந்த சி. எம். வி. ரேடியோவைத் திருகினேன்.

"கல்யாண ஊர்வலம் வரும் ......"—திரைப்பட பாட்டு ஒன்றை அது ஒலி பரப்பியது. அந்தப்பாட்டு என் நினைவுகளை மீண்டும் தொடரச் செய்தது. அப்படியே அமர்ந்தேன், சோபாவில்!

* * *

அன்று—

ஆம்! அன்றுதான் முகூர்த்தநாள் குறித்தவேளையில் ஜனகத்தின் கழுத்தில் நாராயணன் தாலிகட்டி விடுவது என்று எல்லோருமாக முடிவு செய்திருந்தோம். அப்படிச் செய்தால் ஒருவேளை ஜனகத்தின் காய்ச்சல் குறையலாம் என்றும் அபிப்பிராயப்பட்டார் டாக்டர்.

அப்போது—

"அய்யோ! ஜனகம்! ஜனகம்!"

ஜனகம் படுத்திருந்த அறையில் இருந்து நாராயணனின் அலறல் கேட்டது. எல்லோரும் ஓடினோம். ஆம்! அங்குநாங்கள் கண்டகாட்சி...'

"அவள் எல்லோரையும் ஏமாற்றிவிட்டு திரும்பிவரமுடியாத இடத்திற்கு—சாவூருக்கே சென்று விட்டாள்!

போன் : 31738.　　　　தந்தி : மெரிகோல்ட்

தொழில்

(INDUSTRY)

(தமிழ் மாத மிருமுறை)

55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

விளம்பர விகிதம்

—11—1959 முதல் மாறுதல் செய்யப்பட்டுள்ளது

கடைசி மேல் அட்டை 2 கலர்	...	ரூ.	150	0	0
,, 1 கலர்	...		120	0	0
மேல் அட்டை உள்பக்கம் 2 கலர்	...		125	0	0
,, 1 கலர்	...		100	0	0
உள் முழு பக்கம் (ஒரு தடவை)	...		75	0	0
,, ½ பக்கம் ,,	...		30	0	0
,, ¼ பக்கம் ,,	...		20	0	0

குறிப்பு:—ஆறு மாதத்துக்கு மேல் காண்ட்ராக்ட் விளம்பரம் தருபவர்களுக்கு கட்டணச் சலுகைகள் உண்டு.

"பாவம் நாராயணன்!"— என்று என் உதடுகள் முணுமுணுத்த வேளையில் "இந்தாங்க தம்பியை ஆஸ்பத்திரியிலே இருந்துகூட்டிவந்துட்டாங்க!"—என்று, கூறிக்கொண்டே வந்தாள் என் மனைவி.

அவள் தம்பி என்று குறிப்பிட்டது நாராயணனைத்தான். ஜனகம் மறைந்த நாள்தொட்டு சித்தபிரமையால் பாதிக்கப்பட்டு 'ஜனகம் ஜனகம்' என்று அலறிக்கொண்டிருந்தவனை நான்தான் மதுரை ஆஸ்பத்திரியில்கொண்டுபோய் சேர்த்திருந்தேன்.

"இப்போது எப்படி இருக்கிறதாம்? பூரண குணமாகிவிட்டதா?"

"அப்படித்தான் ஆஸ்பத்திரியில் சொன்னார்களாம். ஆனாலும் தம்பி இன்னும் பேயடிச்சவன் மாதிரியே வெறிச்சென்று இருக்கான்!"

எழுந்து கிளம்பினேன், நாராயணனைப்பார்த்து விட்டு வர!

'சே! மனித மனம்தான் என்ன பலஹீனமானது! மலராவது சற்று வெயிலைத்தாங்கிக் கொண்டு சிரித்த முகமாக மலர்ந்திருக்கும். ஆனால் இந்த மனிதமனம் இருக்கிறதே அதனால் சற்றுகூட 'துயர்' எனும் வெயிலைத் தாங்கிக் கொண்டிருக்க முடிவதில்லை!"

கட்டிடம் கட்டுகிருர்.

—சாலை இளந்திரையன்—

கட்டிடம் கட்டுகிருர்—செங்கல்
கட்டிடம் கட்டுகிருர்

செங்கல் அடுக்கியே
சாந்து பரப்பியே
சிக்கெனத் தட்டி
இறுக்கி நெருக்கியே

—கட்டிடம் கட்டுகிருர்.

●

செங்கல் எடுப்பவர் சாந்து குழைப்பவர்
சித்திர மாகவே மாடம் சமைப்பவர்
இத்தனை பேரும் இணைந்து குழுமியே

—கட்டிடம் கட்டுகிருர்.

●

ஓரம் எழுப்பிய சாரத்தில் ஏறியே
ஒன்று சிலபல செங்கல் முறிகளை
உள்ளே புகுத்தியே சாந்தினைக் கொட்டியே

—கட்டிடம் கட்டுகிருர்.

●

கொற்றன் கரத்தில் கரண்டியின் லாவகம்—
சிற்ருள் தலையிலே செங்கலும் சாந்துமாய்
நாட்டியத்துக்கொரு போட்டி இதாமெனக்

—கட்டிடம் கட்டுகிருர்.

பத்தொன்பதே வயது நிரம்பிய அமெரிக்கப் பெண்ணொருத்தி 1913-ம் ஆண்டில் முதன் முதலாக விமானத்திலிருந்து 'பாரசூட்' மூலம் குதித்து புதிய சகாப்தத்தை உண்டு பண்ணினாள். இப் பெண்மணியின் பெயர் ஜியார்ஜியா பிராட்விக் என்பதாகும்.

●

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்திய மருத்துவரான சஸ்ருதா என்பவர் அறுவை சிகிச்சை முறையில் 'பிளாஸ்டி'க்கைப் பயன்படுத்தியுள்ளாராம்.

●



எஃகினால் செய்த கப்பல் ஒன்று அதே அளவுள்ள மரத்தால் செய்த கப்பலின் எடையைவிட குறைவாக இருக்கும். ஆணிகள் முடுக்கப்பட்டு செய்த கப்பல், பற்ற வைக்கும் முறை மூலம் செய்யப்பட்ட கப்பலை விட குறைவான வேகம்தான் செல்லும். எடையில் 13 சதவிகிதம் கூடுதலாக இருக்கும்.

மூர்ச்சையுற்ற ஒருவனுக்கு செயற்கை முறையில் சுவாசம் வரவழைப்பதற்கு, அவனின் வாயோடு வாய் பொறுத்தி அழுத்தி மூச்சு இழுப்பது தான் சிறந்த முறை என்று அமெரிக்க தேசீய செஞ்சிலுவைச் சங்கத்தார் நம்புகின்றனர். வயது வந்தவர்களுக்கு நிமிடத்திற்கு 12 தடவையும், சிறுவர்களுக்கு 20 தடவையும் அம் மாதிரி செய்யவேண்டுமாம்.

ஜப்பான் நாட்டைச் சார்ந்த கோசோ ஓகிசி என்பவர் உருளைக் கிழங்கையோ அல்லது ரொட்டியோ சாப்பிட்டவுடன் குடிகாரன் மாதிரி ஆகிவிடுகிருர். இதை பரிசோதித்துப் பார்த்த டாக்டர்கள் ஜீரணக்குழாயில் 'யீஸ்டு' போன்று ஒருவகை செடி வளர்ந்திருப்பதே இதற்குக் காரணம் என்று கூறியுள்ளனர்.

நல்ல ஆரோக்கியமுள்ள ஒரு மனிதன் ஒவ்வொரு 20 நாட்களிலும் தன்னுடைய உடலின் மொத்த எடை எவ்வளவு உள்ளதோ அந்த அளவு எடையுள்ள தண்ணீர் குடிக்கிருன் என்று அமெரிக்க ராணுவ மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தைச் சார்ந்த டாக்டர் அல்லின் என்பார் கூறியுள்ளார்.

அதுவும் தோல்வியா?

—சரோஜா குஞ்சிதபாதம்—

காட்சி—1

இடம்: கருணாகரா அண்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட்டின் ஆபீஸ்:

காலம்: காலை மணி 11

[டைப்பிஸ்டு தம்புசாமி, குமாஸ்தாக்கள் அடைக்கலசாமி, பெரியசாமி, அக்கவுண்டண்ட் அண்ணாசாமி, ஹெட் கிளார்க் சின்னசாமி முதலியவர்கள் ஒவ்வொருவராக வருகிறார்கள்.]

தம்புசாமி: (வாயில் வெற்றிலையை குதப்பிக்கொண்டே) அண்ணா, அடைக்கலம்! அந்த புகையிலை பொட்டலத்தைக் கட்டி விடாதீர்கள்; இங்கு கொடுங்கள்.

(பொட்டலத்தை வாங்கிக் கொள்ளுகிறான்; கொஞ்சம் வாயில் போட்டுக் கொண்டு)

சிவபுரியா! தங்கபுரியா! வாசனை அவ்வளவு நன்றாக இல்லையே?

அடைக்கலம்: வாசனை நன்றாக இல்லை என்று சொல்லிக் கொண்டே நீர் இதுவரை தினம் 20 தடவை இந்த புகையிலையை 'ஓசி'யில் போட்டுக்கொண்டிருக்கிறீர்.

தம்பு: (கடைக்கண்ணால் இடது பக்கம் பையைப்பார்த்துக் கொண்டே, பொடி டப்பியை திறக்கும் பெரியசாமியிடம்) ஓய்! ஓய்! டப்பியை மூடிவிடாதீர்! அதை அப்படி கொடும், உம்மகிட்டே ஒரு தடவை பொடி வாங்கி போடாவிட்டால் கை மிஷினிலேயே படியமாட்டேன் என்கிறது!

(டப்பியை எரிச்சலுடன் கொடுக்கிறார், பெரியசாமி)

என்ன ஐயா! நெய் பொடியா இல்லை அதிலும் கலப்படமாக டால்டாவை கலந்து விட்டானா? அவ்வளவு சுகமில்லையே!

(ஹெட்கிளார்க் சின்னசாமி வருகிறார். ஆபீஸ் நிசப்தமாக இருக்கிறது.)

அடைக்கலசாமி: (தன் இடத்தில் அமர்ந்துகொண்டே) என் ஐயா தம்புசாமி! நேற்று கொடுத்தேனே கல்கத்தா பார்ட்டி லெட்டர், அதை டைப் செய்துவிட்டீரா?

கோட்டம் அடங்கியது என்று கொக்கரித்தனர்; ஆனால் பிறந்த நாள் விழாவைக் காட்டி அவன் அவர்களை மட்டந் தட்டியபோது...

தம்புசாமி: இதோ ஒரு நிமிடம் கொடுத்துவிடுகிறேன். (வேலையில் முனைவதாக பரப்பரப்பு காட்டுகிருன்.)

அடைக்கலம்: (பெரியசாமியிடம்) என்ன பெரியசாமி? இந்த தம்புவின் ரோதனை பெரிய ரோதனையாகப்போய்விட்டது எல்லாவற்றையும் 'ஒசி'யிலேயே முடித்துக்கொள்கிருன் என்ருலும் அதிலும் ஆயிரத்தெட்டு குற்றம் அல்லவா சொல்லுகிருன்?

பெரியசாமி: (பையின் உள்ளே ஒரு சினிமா புத்தகத்தை வைத்துக்கொண்டு படிப்பதை நிறுத்திவிட்டு) ஆமாம்...ஆமாம்! இது பெரிய ரோதனையாகப் போய்விட்டது. இவனுக்கு சரியானபாடம் கற்பிக்கவேண்டும்.

அடைக்கலசாமி: வேலை ஆகட்டும். பேச்சு! அப்புறம் 'காண்டினி'ல் வைத்துக்கொள்ளலாம் (டைப்பிஸ்டு பக்கம் திரும்பி) என்ன ஐயா ஆகிவிட்டதா?

பெரியசாமி: ஓய் அடைக்கலம் அவர் 'காண்டீன்' என்றவுடன் ஞாபகம் வருகிறது (குசுகுசு வென்று சின்னசாமி காதில் ஏதோ சொல்லுகிருர்.)

அடைக்கலசாமி: ஆம்! ஆம்! எப்படி செய்தால்தான் புத்தி வரும். இன்று மாலையே வைத்துக்கொள்வோம்.

தம்புசாமி: (பெரியசாமி பக்கம் திரும்பி) அந்த டப்பியை கொஞ்சம் கொடும். காரம் அதிகம் இல்லாததால் அடிக்சடி வேண்டியிருக்கிறது.

(பெரியசாமி திட்டிக்கொண்டே கொடுக்கிருர்.

எல்லோரும் அவரவர்வேலைகளில் முனைகிருர்கள்).

காட்சி—2

இடம்: அம்பிகா லாட்ஜின் ஒரு மூலை.

காலம்: மாலை தம்புசாமி பெரியசாமி சின்னசாமி மூவரும் 'டிபன்' சாப்பிட்டுக்கொண்டிருக்கிருர்கள்).

பெரியசாமி: (தம்புவிடம்) கூச்சப்படாதீர்கள் வேண்டியதெல்லாம் சாப்பிடுங்கள்! சர்வர்! இவருக்கு இன்னொரு 'பிளேட்' பாதம் அல்வா கொண்டுவா.

தம்புசாமி: என்ன ஐயா! முதலில் மைசூர் பாகு சாப்பிட்டுவிட்டு அப்புறம் மசாலாதோசை வேறு சாப்பிட்டாகிவிட்டது. மறுபடியும் பாதம் அல்வா கொண்டுவரச் சொல்லுகிறீர்?

அடைக்கலசாமி: ஒரு ஸ்வீட், ஒரு காரம், மறுபடியும் ஸ்வீட், காரம் இப்படித்தான் சாப்பிட வேண்டுமேதவிர ஒரே தடவையில் இரண்டு ஸ்வீட் சாப்பிடக் கூடாது என்று ஜெர்மனியில் உள்ள மனோதத்துவ நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளதாக இன்று பேப்பரில் வந்துள்ளதை தாங்கள் படிக்கவில்லையா?

தம்புசாமி: 'ஒசி'யில் யாரும் பேப்பர் கொடுக்காததால் படி

2/21, Pilliar Koil Street,

MADRAS-3

2/21, பிள்ளையார் கோயில் தெரு,

சென்னை-3

க்கவில்லை. அப்படியென்றால் சரிதான்! கொண்டுவரச்சொல்லுங்கள்.

(சர்வர் கொண்டுவந்தபாதம் அல்வாவை சாப்பிட்டுகொண்டே பெரியசாமியிடம் கண் ஜாடை காட்டுகிறார்)

பெரியசாமி: (குப்புசாமியிடம்) என்னுடைய நண்பர் ஒருவர் என்னைக் கூப்பிடுகிறார். இதோ வந்துவிட்டேன் (போகிறார்)

அடைக்கலம்: தம்பு போதுமா? இன்னும் ஏதாவது வேண்டுமா?

தம்பு: இன்றுபோதும்! வேண்டுமானால் நாளை மாலை மீதியைப் பார்த்துக்கொள்ளலாம்.

(திடீரென்று ஏதோ யோசனை வந்தவர்போல்) அடடே! கடைசிப்பையன் ஓட்டலிலிருந்து ஏதாவது வாங்கிக்கொண்டு வரச்சொன்னானே! அடடா!... நல்ல வேளை ஞாபகம் வந்தது.

அடைக்கலம்: அதற்கென்ன வாங்கிக்கொள்ளேன். சர்வர்! இரண்டு பாதம் அல்வா, இரண்டு மசாலாதோசை பார்சல் கட்டு (தம்புவிடம் திரும்பி) சரி! நான் கைக்கழுவிக்கொண்டு வருகிறேன். நீ பார்சலை வாங்கிக்கொண்டு வா (போகிறான்)

(சர்வர் பார்சலை தம்புவிடம் கொடுக்கிறான் வாங்கிக்கொண்டு புறப்படுகிறான்)

சர்வ: சார்—சார்... இந்தாருங்கள் 'பில்'

தம்பு: பில்லா! என் அப்பா! அவர்களிடம் கொடுக்கவில்லை?

சர்வர்: அவர்களிடமா? அவர்கள்தானே உங்களிடம் கொடுக்கச் சொன்னார்கள்!

தம்பு: அப்படியா... (வாங்கிப் பில்லை பார்க்கிறான்) என்ன, நான்கு ரூபாய், நாற்பது நயா பைசாவா? (சுற்றி சுற்றி பார்க்கிறான். அவர்கள் இருவரில் ஒருவரும் தென்படவில்லை. மெல்ல மேஜையை நோக்கி வருகிறான்).

காட்சி—3

இடம்: **கருணாகரா அண்ட் கம்பெனி.**

காலம்: **காலை 10 மணி.**

(ஆபிஸில் அவரவர்கள் வேலையை செய்துக் கொண்டிருக்கின்றனர்).

தம்புசாமி: மிஸ்டர் பெரியசாமி! என் பெரிய பயலுக்கு பிறந்த நாள் கொண்டாட நினைத்திருக்கிறேன். ரொம்ப 'சிம்பிளா'க முடித்துவிட யோசனை. உங்களையும், அடைக்கல சாமியையும் அழைத்து 'டீபார்ட்டி' வைக்கலாம் என்று திட்டம் போட்டுள்ளேன். ஒரு 'டீபார்க்கு'—8 பேருக்கு, திட்டங்களை ஒரு கடிதத்தில் போட்டுக் கொடுங்களேன். நான் 'டைப்' அடிப்பதை கவனிக்கிறேன்.

'பெரியசாமி: இதற்கென்ன பிரமாதம்! போட்டுத் தந்தால் போயிற்று!.

(பெரியசாமியும், அடைக்கல சாமியும் குசுகுசுவென்று பேசுகின்றனர்.)

பெரியாமி: (அரைமணி நேரம் கழித்து) தம்புசாமி இது போதுமா பாருங்கள்! (ஒரு பேப்பரை அவரிடம் கொடுக்கிறார்).

தம்புசாமி: (படிக்கிறார்) பாதம் அல்வா 8. குளோப்ஜான் 8. மிக்ஸ்சர் பாக்கெட் 8. ரவா தோசை எட்டு. சபாஷ்! இது போதும் (மடித்து பையில் வைத்துக்கொள்கிறார்).

காட்சி—4

இடம்: **தம்புசாமி வீடு.**

காலம்: **மாலை.**

(பெரியசாமி, அடைக்கலம் மற்றும்பலர் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர்)

தம்புசாமி: சங்கோசப்படாதீர்கள்! வேண்டியதைச் சாப்பிடுங்கள்.

பெரியசாமி: சங்கோசமா? வயிற்றைப் பொறுத்தவரை நாங்கள் கொஞ்சம் கூட வஞ்சனை செய்வதில்லை. எல்லாவற்றையும் சாப்பிட்டு விட்டுத்தான் சங்கோசப் படுவது!

(சாப்பிடுவதில் முனைகிறார்கள். பார்ட்டி முடிந்தவுடன் அடைக்கலசாமி தம்புவிடம் நெருங்கி)

அடைக்கலசாமி: ரொம்பநன்றி மிஸ்டர் தம்பு! தங்கள் பையன் நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன்!

தம்பு : (முணு முணுக்கிறார்) வெறும் வாயளவில்தானா? ஏதாவது 'பிரசன்டேஷன்' வாங்கிக் கொண்டு வருவீர்கள் என்று நினைத்தேன்!

(பெரியசாமியும் தன் நன்றியை வாயளவில் தெரிவித்துக் கொண்டு புறப்படுகிறார்).

காட்சி—4

[இரண்டு மூன்று நாட்கள் கழித்து, முதல்தேதி, ஆபீஸில்

அவரவர்கள் வேலையைக் கவனித்துக்கொண்டு இருக்கின்றனர். ஆபிஸ் பியூன் பெரியசாமியிடம் வந்து ஒரு பெரிய பில்லை கொடுக்கிறான்) பெரியசாமி என்ன 20 ரூபாய், 22 நயா பைசாவா? 8 பாதம் அல்வா, 8 ரவா தோசை, டேய்! இது எனக்கு இல்லை போல இருக்கிறதே?

பியூன்: நீங்கள் தான் உங்கள் கை பட இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு எழுதி அனுப்பி வாங்கிவரச் சொன்னீர்களாமே? உங்களிடம் தான் கொடுக்கச் சொன்னார். நான் இன்று காலை காபி சாப்பிடப் போகும்போது ஓட்டல் முதலாளி கொடுத்தார்.

பெரியசாமி: (தம்புசாமியை பார்க்கிறார். அவர் வேலையில் முனைந்திருப்பதாக காட்டிக் கொண்டு அவரை கவனிக்காதது மாதிரி இருக்கிறார்) இதற்குதான் என்னிடம் திட்டம் கேட்டு என் கைப்பட எழுதி வாங்கிக் கொண்டானா? அடப்பாவி!

பியூன்: (அடைக்கலசாமியிடம் திரும்பி வந்து) சார் உங்களைத் தேடிக்கொண்டு வெளியே யாரோ வந்திருக்கிறார்கள்!

அடைக்கலம் : என்னையா? இதோ வந்து விட்டேன் என்று சொல்.

(வெளியே வருகிறார்)

யாரப்பா நீ!

அவன்: நான் அம்பிகா லாட்ஜில் வேலை செய்பவன் சார்! முதலாளி உங்களிடம் இதைக் கொடுத்து விட்டு பாக்கி வாங்கிக் கொண்டு வரச் சொன்னார்.

அடைக்கலம்: (திடுக்கிட்டவராய்) பாக்கியா! (அவனிடமிருந்து ஒரு கடிதத்தை வாங்கி படிக்கிறார்).

"தாங்கள் மூன்றும் தேதி மாலை இரண்டு நண்பர்களுடன் டிபன் காபி சாப்பிட்டுவிட்டு மற்ற இரண்டு நண்பர்களுடன் சென்றவுடன் தாங்கள் என்னிடம் பர்சை வீட்டிலேயே வைத்துவிட்டேன் என்று கூறிவிட்டு பணத்தை மறுநாள் அனுப்புவதாக சொன்னீர்கள் நாளது வரை பணமோ, தங்களையோ காணவில்லை. உடனே இக்கடிதம் கொண்டு வரும் ஆள்வசம் நான்கு ரூபாய் நாற்பது பைசாவைக் கொடுத்து அனுப்பவும்—ருத்ரபதி ஐயர்.

அடைக்கலம்: அடபாவி! நாங்கள் போனவுடன் என் பெயரைத்தானா நீ கொடுத்துவிட்டு வரவேண்டும்? (பணத்தைக் கொடுக்கிறார்).

பெரியசாமி: என்ன அடைக்கலம். யார் வந்தது?

அடைக்கலம்: அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறாய் (விஷயத்தைச் சொல்கிறான்.)

பெரியசாமி: அவனுக்குப் பாடம் கற்பிக்கப் போய் நாம் தானா ஏமாந்தோம்?

(இருவரும் ஒருவரை ஒருவர் பரிதாபமாகப் பார்த்துக் கொள்கிறார்கள்.)

தம்பு: அடைக்கலம்! எங்கே, அந்த பொடி டப்பியை கொஞ்சம் கொடு! (முணுமுணுத்துக் கொண்டே பெரியசாமி பொடி டப்பியை நீட்டுகிறான்)

(திரை)

வியாபாரியும் விற்பனை வரியும்

—கே. பெருமாள் உடையார்—

குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் சம்பந்தமாக ஆராயவேண்டிய நிலைமை மிக முக்கியமானதாகும். இத்தொழில்கள் பலவழிகளில் நன்மை அளிக்கின்றன. நம்நாட்டில் கிட்டத்தட்ட 3 கோடி பேர்கள் வேலை இல்லாத்திண்டாட்டத்தால் அல்லலுறுகின்றார்கள்; வேலை இல்லாத்திண்டாட்டத்தின் நிலைமையை நாம் கண்கூடாகப்பார்க்கிறோம். சிறு தொழில்கள் இந்திய நாட்டில் ஏராளமான பேருக்கு வேலை கொடுக்கின்றன. சிறுதொழில்கள் பெரும் கனரகத் தொழிலுக்குவேண்டிய பெரிய அளவு மூலதனம் தேவை இல்லை. வேலை இல்லாத்திண்டாட்டத்தில் அல்லல்பட்டுக் கொண்டிருப்பவர்களில் பலர், இத்தொழிலின் மூலம் வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

உபயோகமற்றிருக்கும் விடு முதலையும், தொழில் திறனையும் சரியானபடி பயன்படுத்த சிறு தொழில் வழிவகுக்கிறது, அதோடு தேசிய வருமானத்தை நியாமான விதத்தில் வினியோகிக்கவும் இத்தொழில் வழி காட்டுகின்றது. இந்தத் தொழில்களை சீர்படுத்தி வளர்ப்பது மிகமிக முக்கியமாகும்.

இத்தொழில்களின் இயந்திரீக முன்னேற்றத்தின் வேகத்தை ஒழுங்குபடுத்துவது மிகவும் அவசியம்.

இச்சிறுதொழிலை நம்பி இருக்கும் வியாபாரிகள், எந்த அளவு விற்பனை வரியால் பாதிக்கப் படுகிறார்கள் என்று பார்ப்பது நன்று. விற்பனைவரி அவசியமா என்றால் அவசியம்தான்; ஆனால் விற்பனைவரி எப்போது விதிக்கப்படவேண்டும்? என்பது தான் நம்மை நோக்கியிருக்கும் பிரச்னையாகும்.

சிறுதொழிலை நம்பிவாழும் வியாபாரிகள் பலவிதசங்கடங்களுக்குள்ளாகியுள்ளார்கள். தரமான மூலப்பொருட்கள் சரியான விலையில் கிடைக்காமை; கருவிகள் திருப்திகரமாக இல்லாமை; என்பவை போன்ற சங்கடங்கள், நிதிபற்றாக்குறையின் நேரடியான விளைவுகளாகும்! போதிய விற்பனை வசதி இல்லாமை; புதிய உற்பத்தி முறைகளையும் மார்க்கட் நிலவரத்தையும் அறிந்து கொள்ளாமை என்ற சங்கடங்களும் உள்ளன இவைகாரணமாக இத்தொழில்களில் உள்ள தொழிலாளர்கள் தங்கள் உழைப்பு சக்தியையும், திறமையையும், பூரணமாகப்பயன்படுத்த முடியாமல் போகிறது.

சிறு உற்பத்தியாளர்கள் ஸ்தாபன ரீதியாகக் கடன்

வசதி பெறவும், மூலப்பொருட்கள் வாங்கவும், உற்பத்தியாகும் பண்டங்களை பெரிய அளவில் விற்கவும் வழியேற்படுத்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் வழிவகுக்கிறது.

சிறு தொழில் செய்யும் வியாபாரிகள் படும் கஷ்டத்தை மேலே கூறப்பட்டுள்ளது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் சிறு தொழில்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன; இதனால் சிறு தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும்—ஆரம்ப நிலையிலுள்ள வியாபாரிகளும் விற்பனை வரியால் பாதிக்கப் படுகிறார்கள்.

இந்தநிலையில், சிறுதொழிலை நம்பி வாழும் வியாபாரிகளுக்கு எப்போது வரி விதிக்கவேண்டுமென்பது ஆராய்வது மிகவும் முக்கியமானது. எந்த சர்க்காரும் வரி வசூல் செய்யாவிடில் நிர்வாகத்தை இயக்கமுடியாது, என்பதுநாடறிந்த உண்மையாகும்.

வரிவிதிக்கும்போது சர்க்கார் வியாபாரிகளின் வரி கொடுக்கும் திறனை (Taxable Capacity) கவனித்து வரி வசூலிப்பது நன்று; இதனால் வியாபாரிகளும் பாதிக்கப்படமாட்டார்கள்; சர்க்காருக்கும் பணம் கிடைக்கும்; மக்களுக்கு வேண்டிய பொருள்களும் அவ்வப்போது மார்க்கட்டில்கிடைக்கும். ஆரம்ப நிலையிலுள்ள ஒருசிறு தொழில் செய்யும் வியாபாரியின்மீது, விற்பனை வரிவிதித்தால் அவன் நிலை என்ன ஆவது? தினசரி வாழ்க்கையை நடத்துவதற்கு கஷ்டப்படும் அந்த வியாபாரி

போன்: 31738 தந்தி: மெரிகோல்ட்

தொழில்

மாதமிருமுறை

55, எடப்பாளையம் தெரு, மதருஸ்-3.

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

வரிப்பளுவை தாங்கமுடியாது தொழிலை மூடிவிட ஏதுவாகும். ஆனால் அந்தத்தொழிலை கஷ்டத்தை சகித்துக்கொண்டு நடத்தினால் லாபம் இல்லாமை ஒரு புறம். அப்படி உற்பத்தி செய்கின்ற பொருள்கள் மார்க்கட்டில் பற்றுக்குறை ஏற்படும். பற்றுக்குறை ஏற்படுவதால், பண்டங்களின் விலை ஏறும் விலை ஏற்றத்தால் பாதிக்கப் படுவர்கள் பொதுமக்கள் தான்!

அதே நேரத்தில் அந்தத் தொழிலை நம்பி இருக்கும் வியாபாரி ஸ்தாபனரீதியாக வலுவடைந்துவிட்டால் அவனுடைய திறமைக்குத் தகுந்தபடி வரிவிதிக்கப்படுதல் நியாயமாகும். அதனால் சர்க்கார் வருவாய் அதிகரிக்கும். பொது மக்களும் நன்மை அடைவார்கள். ஆகவே விற்பனை வரிவிதி

ப்பதில் வியாபாரியின் வருவாயை நன்குக் கணித்து அதற்குத்தகுந்தவாறு வரிவிதித்தல் மிகவும் நல்லது.

கூடியவரையில் ஆரம்ப நிலையில் இருக்கும் சிறுவியாபாரிக்கு விற்பனை வரி விதிக்காமல் இருக்கவேண்டும். நம் நாட்டில் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றால் இந்த முறையை கடைபிடிப்பது மிகவும் நல்லது.

நம்முடைய பொருளாதார நிலையை கனரகத் தொழில்கள் அபிவிருத்தி செய்கின்றன. ஆனால் கனரகத் தொழில், சிறு தொழில்கள் இல்லாவிடில் தனிப்பட்ட நிலையில் இயங்க முடியாது. பல சிறுதொழில்கள் தான் ஒரு கனரகத் தொழிலை உருவாக்குகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அமெரிக்காவில் அணு உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையில் ஏறக்குறைய 3000, தனிப்பட்ட சிறு தொழிற்சாலைகள் வேலை செய்கின்றன. இந்த 3000 தனிப்பட்ட சிறு தொழிற்சாலைகள்தான் ஒரு பெரிய அணு தொழிற்சாலையை உருவாக்க முடிகிறது. நம்முடைய பெரம்பூர் ரெயில்வே தொழிற்சாலையை எடுத்துக்கொண்டாலும், அந்த தொழிற்சாலையும் எத்தனையோ சிறு தொழிற்சாலைகளைத்தான் நம்பி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவேதான் ஆலோசித்துக் கூறுகிறோம், சிறு தொழில்கள், நம் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு போன்றவை. அந்த தொழில்கள் நசுக்கப்பட்டு விடக் கூடாது. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் ஆரம்ப நிலையிலுள்ள இந்தத் தொழில்கள் வரிவிதிப்பு என்ற பிடியில் இருந்து விலக்கப்படுகின்றன.

நம் நாட்டிலும் அந்த நிலை ஏற்படவேண்டும். அப்போதுதான் நம் பொருளாதாரம் அபிவிருத்தி அடையும். நம்மை நோக்கியிருக்கும் பயங்கரவேலையில்லாத்திண்டாட்டம் அகன்றுபோக ஏதுவாகும். நமக்கு வேண்டிய பொருள் பற்றாக்குறை ஏற்படாமல் மார்க்கட்டில் கிடைப்பது கஷ்டமாக இருக்கின்றது. அதைத்தவிர்க்கத்தக்க வழிவகைகள் செய்வதால் எல்லோருக்கும் லகுவான விலை பொருள்கள் கிடைக்க ஏதுவாகும்.

கர்நூல் மாவட்டத்தில் களிமண் படிவ ஆராய்ச்சி

ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த கடப்பை, கர்நூல் ஆகிய மாவட்டங்களிலும் களிமண் படிவுகள் இருப்பதாக இந்திய பூகோள ஆராய்ச்சிப் பிரிவினர் கண்டு பிடித்துள்ளனர். இக்களிமண் கண்ணாடி போன்ற பளபளப்பான பீங்கான் பொருள்களைத் தயாரிப்பதற்கு ஏதுவாக இருப்பதாகவும் ஆராய்ச்சி செய்து கூறியுள்ளனர். ✻

ஆழ்கடல் அளிக்கும் அருஞ் செல்வம்

சென்னை மாநிலத்தின் கீழ்க் கரையில் மன்னார் குடாக் கடல் படுகையில் இவ்வாண்டு மார்ச்சு திங்கள் முதல் மே திங்கள் வரையில் நடைபெற்ற முத்துக் குளிப்பின் மூலம் 60 இலட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள முத்துக்கள் கிடைத்துள்ளன.

மற்ற ஆண்டுகளை விட இவ்வாண்டில் தான் அதிகமான முத்துக்கள் கிடைத்துள்ளன. இதற்கு முக்கிய காரணம் வாடுதெனில் உயர்தரமான, நவீன முறைகளை முத்துக் குளிப்பில் கையாண்டதே யாகும். மத்திய அரசின் உணவு-வேளாண்மை அமைச்சு இந்நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகளை யெல்லாம் செய்து தந்தது. உலக உணவு - வேளாண்மை நிலையத்தின் நிபுணர் பேராசிரியர் சால்வடோரி (இத்தாலி) தம் சேவையைப் பெரிதும் தந்து உதவினார்கள். பேராசிரியர் சால்வடோரி புதிய நவீன துணைக் கருவிகளை முத்துக்குளிப்பில் பயன்படுத்தினார். முக்கியமாக "நீரில் மூச்சு வாங்கும் நுரையீரல்" கருவியை உபயோகித்தார். முத்துச்சிப்பிகள் படிந்து கிடக்கும் இடங்களைக் கண்டு பிடிப்பதற்கு இக் கருவி பெரிதும் பயன்பட்டது.

இந்நவீனக்கருவியைப் பயன்படுத்துவதன் மூலம் முத்துக் குளிப்பவர்கள் முதிர்ந்த முத்துச் சிப்பிகளைத் தாராளமாக எடுப்பதற்கும், அதே சமயத்தில் இளஞ்சிப்பிகள் படிந்து கிடப்பதைக் குலைத்துச் சேதப்படுத்தாமல் இருப்பதற்கும் வழி கிடைக்கிறது.

தமிழகத்தின்கண் உள்ள மன்னார் குடாக் கடல் பகுதியில் முத்துக்குளிப்பு வேலை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடைபெற்று வருகிறது. மாசிடோனியர்கள் பாரசீக வளைகுடாவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முத்துக்குளிப்பு செய்து வந்தனர். ஆனால் நம் தமிழ் நாட்டிலோ இதற்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே முத்துக்குளிப்ப நடைபெற்று வந்திருப்பதாக வரலாறு கூறுகிறது. உரோம சாம்ராஜ்யப் பிரபுக்கள் வீட்டிலும் கீழ்த் திசை நாட்டுமன்னர்கள் அரண்மனைகளிலும் மன்னார் வளைகுடா நல்முத்துக்கள் பெரு மதிப்புப் பெற்று அரும் பெரும் அணிகலன்களாகப்போற்றப்பட்டு வந்தன. உலகப்பேரழகியான கிளியோபாத்ரா தமிழ்நாட்டு முத்துக்களை சாராயத்தில் போட்டு குடித்துவந்ததால்தான் அவள் என்றும் பேரழகோடு விளங்கினாள். என்றும் கூறப்படுகிறது.

பல நாட்டவராலும் விரும்பி வாங்கப்பட்ட இந்த ஒளி முத்தைக் கத்துக் கடலிலிருந்து வெளிக் கொண்டு வரும் துணிச்சல்மிக்க அபாயகரமான வேலையில் பெரும்பாலும் மீனவர்களே ஈடுபட்டிருந்தனர். திருநெல்வேலி மாவட்டத்தின்கடற்

கரைப் பகுதியில் உள்ள நெய்தல் நிலத்து மக்கள் இத்தொழிலில் பெரிதும் ஈடுபாடுகொண்டிருந்தனர். நவீன வசதிகளின்றி ஆலை கடலின் சுழிப்பையும், ஆழ கடலின் அடியில் வாய் பிளந்து நிற்கும் திமிங்கலங்களுக்கும் அஞ்சாமல் அவர்கள் முத்துக் குளிப்பில் ஈடுபட்டிருந்தனர். ஏராளமானவர்கள் பல கொடிய மீன்களுக்குப் பலியாகியுமுள்ளனர். அப்படியிருந்தும் கூட அம் மக்கள் இத்தொழிலை விட்டு விடாமலேயிருந்து வந்தனர். ஆனால் நாளடைவில் தொழில் மங்கிக்கொண்டே வரலாயிற்று. முத்துச் சிப்பிகள் கிடைக்கும் இடங்களில் அள்வுக்கு மீறி சிப்பிகளை வாரி விடுவதும், விதை முத்துச் சிப்பிகளை அவர்கள் விஷயம் தெரியாமல் சிதைத்து வந்ததாலுமே இத்தொழில் நாளடைவில் மங்கிவந்ததற்கு முக்கிய காரணமாகும். ஒரு முத்துச்சிப்பி நான்கு ஆண்டுகள் முதிர்ந்தால்தான் அதில் சிறந்த முத்துக்கிடைக்கும். இவைதயெல்லாம் உணராதிருந்ததினுல் ஏராளமான முதிராத இளஞ்சிப்பிகள் சேதப் படுத்தப்பட்டு தொழிலைப் பாதித்தன. இதனையுணர்ந்த அரசினர் முத்துக்குளிப்பதில் பல புதிய முறைகளைக் கையாளுகின்றனர். ஆனுல் புராதன முறைகளும் பெரும்பாலாகக் கையாளப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச்சு திங்கள் இரண்டாம் வாரத்தில் இப்பகுதியில் முத்துக்குளிக்கும் வேலை ஆரம்பமாகும். பருவத்தை யொட்டி அந்த வேலை சில சமயங்களிம் 4 அல்லது 6 வாரங்கள் கூட நீடிக்கும்.

இப்பகுதியில் முத்துக் குளிக்கும் இடம் கரையைவிட்டு சுமார் 25 மைல் தூரத்திற்கப்பால் உள்ளது. கோழிகூவுவதற்கு முன்பே படகேறி முத்துக்குளிக்கச் சென்றுவிடுவார்கள. படகுகள் முத்துச்சிப்பிகள் செறிந்து கிடக்கும் பாறையை நெருங்கியவுடன் சமிக்ஞை வேட்டுகள் வைக்கப்படும். உடனே முத்துக்குளிப்போர் நீரில் மூழ்குவர் நீரில் மூழ்குவோர் இடுப்பில் கயிறென்றைக்கட்டிக்கொண்டு இறங்குவர். இக்கயிறு படகுடன் இணைக்கப்பட்டிருக்கும். மேலும் நீரில் அவர் விரைவில் அமிழ்வதற்காகப் பாரமான கல் ஒன்றையும் கட்டிக்கொள்வார். இக்கல் கட்டப்பட்ட கயிறும் மேலேயுள்ள படகுடன் இணைக்கப்பட்டிருக்கும். நீரில் மூழ்கிய ஒவ்வொருவரையும் படகில் உள்ளோர் மிக ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொண்டேயிருப்பர். நீரில் மூழ்கியிருப்போர் ஏதாகிலும் கயிற்றின் மூலம் சமிக்ஞை தருகிறுரா என்பதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே இருப்பார். நீரில் மூழ்கியவர் முத்துச் சிப்பிகளை கூடையில் வாரி நிரப்புவார். உடனே கயிற்றின் மூலம் படகில் இருப்போருக்கு சமிக்ஞை செய்வார். உடனே அவர் பாரத்திற்காகக் கட்டப்பட்டுள்ள கல்லை மேலே யிழுத்து வாங்குவார். உடனே முக்குளிப்பவர் தாமாகவே மேலே வந்து விடுவார். முத்துச் சிப்பிகள் நிறை



ந்த கூடைகளை மேலே இழுத்து வாங்கி விடுவார்கள்.

நீரில் மூழ்குபவர்கள் ஒவ்வொருவரும் 50 முதல் 80 வினாடிகள் வரை தண்ணீருக்கடியில் இருப்பார்கள். ஆனால் சில சந்தர்ப்பங்களில் சிலர் ஆறு நிமிடங்கள் வரை மூச்சுப் பிடித்து மூழ்கியிருந்ததாகவும் விவரங்கள் கிடைத்துள்ளன. நீருக்கடியில் முக்குளிப்போர் சுறு மீன் போன்ற பெரிய மீன்கள் தாக்காமல் இருக்க அவர்கள் முள் கோலை எடுத்துச் செல்வர். பரம்பரை வழக்கத்தைப் பின்பற்றுகிற சிலர் நீரில் குளிப்பதற்கு முன்பு சுறுமீன்களை வசியம் செய்யும் மந்திர உச்சாடனங்களையும் உபயோகிப்பர். அதற்கான மந்திரவாதி ஒருவர் எப்போதும் படகில் இருப்பார். கரையிலும் இதே போன்று வேறு பலர் இருப்பர்.

முத்துக்குளிப்பின் மூலம் கிடைத்த முத்துச் சிப்பிகளை அரசினரின் 'லாஞ்சு'களில் ஏற்றிக் கொள்வர். இந்த 'லாஞ்சு'கள் முத்துக் குளிப்பு வேலையை எப்பொழுதும் மேற்பார்வையிட்டுக் கொண்டேயிருக்கும். 'லாஞ்சு'களில் ஏற்றப்பட்ட மொத்த முத்துச் சிப்பிகள் அரசினருக்கு 2/3 பங்கும் முத்துக்குளிப்போருக்கு 1/3 பங்கும் பிரித்துக் கொடுக்கப்படும். அரசினர் பங்கு சிப்பிகள் உள்ள பைகள் நன்றாக மூடி முத்திரையிடப்பட்டு முகவரிச்சீட்டு ஒட்டப்படும். முத்துக்குளிப்பவர்களின் பங்கு சிப்பிகளடங்கிய பைகள் மூடி முத்திரையிடப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்படும். படகுகள் கரை சேர்ந்த பின்பு பைகளை இறக்கும்போது கண்டிப்பான பரிசோதனையிருக்கும். முத்துக்குளிக்கும் முகாமில் முக்குளிப்பவர்கள் தங்களுக்குக் கிடைத்த முத்துச்சிப்பிகளைத் தாராளமாகப் பொதுமக்களுக்கு விற்கலாம். இந்த முத்துச் சிப்பிகளை வாங்கும் வியாபாரிகளும் ஏராளமாக இருக்கின்றனர் அவர்கள் நீண்டகாலமாக இவ்வியாபாரத்தில் அநுபவமுள்ளவர்களாவர். யோகமிருந்து தங்களுக்கு நல்ல முத்துக்கிடைக்காதாவென்று அதிருஷ்டத்தை நம்பி வாங்குபவர்களும் நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். அரசாங்கத்திற்குரிய முத்துச்சிப்பிகள் ஆயிரக்கணக்கில் பொது ஏலத்தில் அன்று மாலையே விற்கப்படும்.

தூத்துக்குடியில் தளங்கொண்டு முத்துக்குளிக்கும் நடவடிக்கை சென்ற மூன்றாண்டு காலமாக ஆண்டு தோ

"இலம் என்பாரை நகும் நிலம்"

நாளுக்குநாள் வளர்ந்து வரும் இவ்வுலகத்தின் ஜனத் தொகைக்கு, என்றென்றும் போதிய உணவளிப்பது சாத்தியந்தானா? பல நூற்றுண்டுகளாகவிவாதிக்கப் பட்டுவரும் ருசிகரமான பிரச்சினை இது. சில நாடுகள் "அபரிமிதமான ஜனப்பெருக்கத்தை"க்கொண்டுள்ளதாயும், உழைப்பாளி மக்கள் "வரையற்ற அளவுக்குப் பிள்ளைகளைப் பெற்றுத் தள்ளுவதாயும்", இவ்வாறு ஜனத்தொகை அளவுக்குமீறி அதிகரித்துவருவதாயும், அதே நேரத்தில் இப்பூமியின் உணவு சப்ளை குறைந்துவருவதாயும் ஒப்பாரிவைத்து துயரகீதம் பாடும் கட்டுரைகள், பல பத்திரிகைகளில் அடிக்கடி வெளிவருகின்றன என்பது தெரிந்ததே. ஜனப் பெருக்கத்தால் வெகுவிரைவில் மிகப் பெரிய விபத்து ஏற்படப்போவதாக எண்ணிக்கொண்டுள்ள இந்த சாக்குருவி வேதாந்திகள், பிறப்பு விகிதத்தைக் குறைக்கவேண்டுமென்றும் இதுதான் இந்த ஆபத்தைத் தடுப்பதற்கான மிகவும் சரியான நடவடிக்கை என்றும் கருதுகின்றனர். தொத்து நோய்கள் யுத்தம், இவற்றின் மூலம் மரணவிகிதம் உயருவதைக்கூட இவர்கள் வரவேற்கின்றனர்-

ஆனல் இந்த அபாய அறிவிப்பிற்கு எந்தவித உண்மை

றும் நடைபெற்று வருகிறது. 1957-ல் 20 லட்சம் ரூபாய் மதிப்புள்ள முத்துக்களும் 1958-ல் 30 லட்சம் ரூபாய் மதிப்புள்ள முத்துக்களும் கிடைத்தன.

தூத்துக்குடி கரையோரத்திலுள்ள முக்குளிப்பவர்களுக்கு சங்கு குளிப்பதும் மற்றொரு வருமான ஆதார வேலையாக இருந்து வருகிறது. ஆண்டுதோறும் அவர்கள் 10 லட்சம் சங்குகளை எடுத்து வருகிறார்கள். சிலப்பதிகார ஆசிரியரால் புகழ்ந்து பேசப்பட்ட வலம்புரிச்சங்கும் இங்குக் கிடைக்கின்றது. இதனை ,தங்கநிறச் சங்கு என்று சொல்கின்றனர் இச்சங்குகள் பெரிதும் மதிக்கப்படுகின்றன. மத சடங்கு வைபவங்களுக்கு இச்சங்குகள் உபயோகப்படுகின்றன.

தமிழ் நாட்டுக்கடலில் கிடைக்கும் இந்த அரும் பொருள்களை மேலும் மேலும் வெளிக்கொணர அரசாங்கம் முயற்சி செய்தால் நம் நாட்டின் பெருளாதாரம் விரிவடையும் என்பதில் இஞ்சிற்றும் ஐயமில்லை.

யான ஆதாரமும் இல்லை. காலனி ஆதிக்கவாதிகள் கோலோச்சும் இடங்களிலும், ஆயுதப் போட்டியால் மக்கள் வறியர்களாகும் இடங்களிலுமே பசியும் பட்டினியும் தாண்டவமாடுகின்றன என்பதை எதார்த்த உண்மைகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே பிரச்சினை ஜனத்தொகைப் பெருக்கத்தின் வேகம் சம்பந்தமானதல்ல. பொருளாதார அமைப்பு சம்பந்தமான பிரச்னை இது. சமுதாயத்தின் உறுப்பினர்களுக்கு பொருளாதாரவசதிகள் எந்தக்கோட்பாட்டின்படி விநியோகிக்கபபடுகின்றன என்பது சம்பந்தமான பிரச்சினை இது.

உணவு சப்ளையும், மனிதன் உயிர் வாழ்வதற்கான இதர தேவைப்பண்டங்களின் சப்ளையும் அபரிமிதமான அளவிற்கு அநேகமாகவரையறையற்ற அளவிற்கு—உள்ளன. இன்றுள்ள ஜனத்தொகையைப்போல 10 மடங்கு மக்களுக்கு உணவளிக்கும் ஆற்றல் நிலத்திற்கு உண்டு. மிக உயர்வான நிலைவாசியை நிலைகாட்டி பெரும் லாபம் சம்பாதிக்கும்பொருட்டு, கோடிக்கணக்கான டன் எடையுடைய உற்பத்திப்பண்டங்கள் நாசப்படுத்தப்படாதிருந்தால், உலகில் பசியால் வாடும் மக்களே இருந்திருக்கமாட்டார்கள். உலகின் செல்வாதாரம் பூராவும் மனிதகுலம் முழுமையின் நலன்களுக்கேற்ப சிக்கனமுறையில் பயன் படுத்தப்பட்டிருந்தால், எல்லா மக்களும் போதிய உணவும் உடையும் பெற்றிருப்பர்.

இப்பூமியின் நிலப்பரப்பு 14 கோடியே 90 லட்சம் சதுர கிலோமீட்டர். இதில் 100 கோடி ஹெக்டர் நிலமே (ஒரு ஹெக்டர் சுமார் இரண்டரை ஏகர்) சாகுபடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. பூமியின் பரப்பில் 11 சதவிகித பிரதேசமே மனிதன் வாழாதபகுதி (ஆர்க்டிக், அண்டார்க்டிக்) என்றும், சுமார் 19 சத விகிதப் பிரதேசம் பாலைவனங்கள் என்றும், மீதியுள்ள பிரதேசத்தில் 10.1 சதவிகிதம் செழிப்பான பள்ளத்தாக்குகள் என்றும், 39.4 சதவிகிதம் மாறக்கூடிய இடைத்தட்டு நிலங்கள் (காடுகள், வறண்ட பாழ்வெளிகள்) என்றும், 13.7 சத விகிதம் மலைப்பிரதேச புல்வெளிகளும் காடுகளும் என்றும் சோவியத் தரையியல் அறிஞர் எல். ஐ. பிரசோலோவ் மதிப்பிடுகிறார். பாலைவனப் பிரதேசங்களில் (19 சதவிகிதம்) பாதிக்கு மேற்பட்ட பகுதிகளை நீர்ப்பாசனத்தின் உதவியால் வேளாண்மைக்குக் கொண்டுவரமுடியும். எனவே, 1000 கோடி ஹெக்டருக்கு அதிகமான நிலத்தை வேளாண்

மைக்கு லாயக்கானதாகக் கருதலாம் என்று ஏற்படு கிறது.

இந்த நிலத்தில் மாற்றுப் பயிர்களை முறைப்படி சாகுபடி செய்தால், குறைந்த பட்சம் 2500 கோடி மக்களுக்கு-அதாவது இன்றைய உலக ஜனத்தொகையை விட ஏறத்தாழ 10 மடங்கு அதிகமான மக்களுக்கு - ஓராண்டிற்குத் தேவையான உணவுப்பொருள்களை வழங்கமுடியும்.

புதிதாக நிலங்களைச் சாகுபடிக்கு லாயக்கானதாக-ஆக்குவதின் முக்கியத்துவத்தைப் பின்வரும் உதாரணத்திலிருந்து நன்கு புரிந்துகொள்ளலாம். சோவியத் யூனியனில் புதிதாக 3 கோடியே 65 லட்சம் ஹெக்டர் கன்னிநிலங்கள் சாகுபடிக்குச் கொண்டு வரப்பட்டதால் ஆண்டொன்றிற்குக் கூடுதலாகக் கிடைக்கும் தானியம், பிரிட்டன், பிரான்சு, ஸ்பெயின், இத்தாலி பின்லாந்து, நார்வே, டென்மார்க் இந்நாடுகள் யாவற்றின் மக்களுக்கும் போதுமானதாக உள்ளது.

தாவரப் பூச்சிகளை ஒழிப்பதற்குப் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருப்பதாலும் பிரம்மாண்டமான அளவிற்குப் பண்ணைப்பண்டங்கள், விரையமாகின்றன. சீனத்துப்பேராசிரியர் சன் சிங்கி என்பவர் 20 கோடி மக்களுக்கு ஓராண்டிற்குப் போதுமான அளவு தானியம் ஆண்டுதோறும் பூச்சிகளால் நாசப்படுத்தப்படுவதாக மதிப்பிட்டுள்ளார். இதைவிடவும் அதிகமான தானியங்கள், எலி, பெருச்சாளி முதலியவற்றினால் நாசப்படுத்தப்படுகின்றன.

எனவே சாகுபடிப் பிரதேசத்தை விஸ்தரிப்பதின் மூலமும், கண்டுமுதலைப் பெருக்குவதன் மூலமும், விரையத்தைக்குறைப்பதன் மூலமும் விவசாய உற்பத்தியை எல்லையற்ற அளவிற்குப் பெருக்க முடியும் என்பது தெட்டத் தெளிவாகப் புலனாகும். ஆனால் நாம் இதுவரை குறிப்பிட்டது நிலத்திலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்களைப் பற்றியேயாகும். கடல்களிலும், நதிகளிலும், ஏரிகளிலும் ஏராளமான உணவு வளங்கள் பொதிந்துகிடக்கின்றன என்பது தெரிந்ததே.

இதுவரை நாம் குறிப்பிட்டது தாவரங்களும், மிருகங்களும் அளிக்கும் இயற்கை உணவைப்பற்றியதாகும். ஆனால் மனிதன் இப்பொழுது பல பொருள்களை செயற்கைமுறையில் தயாரிக்கத் தொடங்கிவிட்டான். மார்கரைன், உணவுச் சாராயம், பலவேறு அமிலங்கள், மற்றும் பல உணவுச் சத்துக்களை இரசாயனத்தொழில் உற்

"ஹெலிகாப்டர் சகாப்தம்"

—ஜான். டபிள்யூ. ஆர். டேலர்—

[சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஹெலிகாப்டர் விமானம் பறந்தபோது, இது பயனற்ற சாதனைஎன்று பலர் எண்ணி நகையாடினர். ஆனால் இன்றோ ஹெலிகாப்டர் பல பணிகளுக்கு சிறந்த வாகனமாகக் காட்சி யளிக்கிறது. அதனை, இக்கட்டுரை விவரித்துக் கூறுகிறது].

சுமார் இருபதாண்டுகளுக்கு முன்பு வி. எஸ். 300 ஹெலிகாப்டர் விமானம் வானில் பறந்தது அதன் சாதனையை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ச்சி நடத்தியதால் புதிய ரக விமானம் ஒன்று கிடைத்துவிட்டது.

பல ஆண்டுகளுக்கு முன்னேயே, பிரிட்டனிலும், பிரான்ஸ், ஜர்மனி நாடுகளிலும், ஹெலிகாப்டர்கள் பறந்தன. 1925 ஆம் ஆண்டில் நடந்த பான்பரோ விமானக் காட்சியில் ஓர் ஹெலிகாப்டர் பறந்

பத்தி செய்யத்தொடங்கிவிட்டது. செயற்கை சர்க்கரைச் சத்தையும், கொழுப்புச் சத்தையும், மாவுச்சத்தையும் மனிதன் உற்பத்தி செய்யத் தொடங்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை. இவ்வாறு இரசாயன விஞ்ஞானம், வாழ்க்கையின் எல்லாத் தேவைப்பண்டங்களையும், எல்லையற்ற அளவிற்கு வழங்கமுடியும் என்பதில் ஐயமில்லை.

கடைசியாக, பூமியில் வாழும் மக்களின் உணவு சப்ளைக்கான மற்றொரு புதிய ஆதாரமும் தோன்றியுள்ளது இப்பொழுது அடுத்த 50-100 ஆண்டுகளில் மனிதன் அண்டவெளியை ஊடுருவி, கிரகங்களின் இயற்கை வளங்களைத் தனது தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்த முடியும் என்று நம்புவதற்கு இடமுண்டு. புதிய அண்டவெளி சகாப்தத்தின் முதல் தூதுவர்களே சோவியத் 'ஸ்பூட்னிக்'குகள் என்று கூறமுடியும்.

எனவே இவ்வுலகின் செல்வாதாரங்களும், உணவு வளங்களும் அளவிடற்கரியன என்றும் எல்லையற்ற ஜனப் பெருக்கத்தையும் ஆதரிக்கப் போதுமானவை என்றும் நாம் கூறுவது ஆதாரமற்ற பேச்சல்ல.

தது. ஆனால் ஆரம்ப கால ஹெலிகாப்டர்கள் சுமை தூக்கிச் செல்லும் ஆற்றலற்ற, சிக்கல் நிறைந்த பொறிகளாகவே இருந்தன. வி. எஸ். 300 ஹெலிகாப்டர் வந்த பிறகுதான் அமைப்புத் துறையில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. ஆயினும் மேலும் பல ஆண்டுகள் சென்றபிறகுதான் மக்கள் ஹெலிகாப்டரைப்பற்றி சிந்திக்கத் தொடங்கினார்கள்.

ஈஸ்டு ஆங்கிலியா பகுதியில், உருளைக்கிழங்கு வயலில் "பனிச் சூறை நோய்" இறங்கிற்று. மகசூலைக் காக்க விரும்பிய விவசாயிகள், பெஸ்டு கன்ட்ரோல்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தின் உதவியை நாடினார்கள். அந்த நிறுவனம், ஓர் ஹெலிகாப்டர் மூலம் வயல்கள் மீது தடுப்பு மருந்துகளைத் தூவிற்று. இது 1948இல் நடந்தது. அதன் பிறகு நாட்டின் பல பாகங்களிலுள்ள விவசாயிகள் இந்த நிறுவனத்தின் உதவியை நாடினார்கள்.

இன்று, இந்த நிறுவனம் பைஸன் ஏர்ஓர்க் லிமிடெட் என்ற பெயரில் உலகின் பல பாகங்களில், பல ஹெலிகாப்டர்களை உபயோகித்து பணியாற்றி வருகிறது.

விவசாயத்துறையில்

விவசாயத்துறையில், இன்று ஹெலிகாப்டருக்கு முக்கிய இடம் கிடைத்து விட்டது. துளிர்விடும் தாவரங்களில் மூன்றில் ஒரு பங்கு பூச்சி புழுக்களால் சேதமடைவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். பூச்சிகளின் அழிவுப்பணி தொடங்கியதும் தடுப்பு நடவடிக்கை எடுத்துக்கொண்டால் பயிரைக் காப்பாற்றிவிட முடியும். தடுப்பு முறையை, விரைவிலும் பரவலாகவும் செய்வதற்கு, சிறுரக விமானங்களைவிட, ஹெலிகாப்டரே சிறந்தது என்பது அனுபவத்தால் அறிந்த உண்மையாகும். வெஸ்ட்லாந்து வேர்ள்விண்ட் ஹெலிகாப்டர், ஒரே மணி நேரத்தில் நூறு ஏகரா பரப்பில் 110 காலன் மருந்தை தெளிக்கும் ஆற்றலுள்ளது. கொசுக்களை அழிக்க மருந்து வீசவும், பனியால் சுருண்டு நிற்கும் தோட்டப் பயிர்கள் மீது வெப்பக்காற்று வீசி, அவை அழியாது காக்கவும் வெடிக்காத காய்களுள்ளபருத்திச் செடிகள் மீது மருந்து தெளித்து, மகசூலைப் பெறவும், விவசாயிகள் ஹெலிகாப்டர்களை உபயோகிக்கிறார்கள்.

முதலுதவிப்பணிக்கு

மீட்சிப்பணியிலும், முதலுதவிக்கும் ஹெலிகாப்டரை உபயோகிப்பது மேனாடுகளில் சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. மலேயாவில் வனப்பகுதியில் படுகாயமுற்ற ராணுவ வீரர்களையும், நோயுற்ற மக்களையும் அப்புறப்படுத்த ராயல் விமானப் படையினர் ஹெலிகாப்டர்களை உபயோகித்தார்கள். பிரிட்டனில் கோடைகாலத்தில் கடலாடவரும் மக்களில் சிலர் நீந்தும்போது கை சோர்ந்து தத்தளிப்பதுண்டு. மீனவர்கள் புயலில் சிக்கி, நடுக்கடலில் தவிப்பதுண்டு. இவர்

களை மீட்க, ஹெலிகாப்டர்களை யே உபயோகிக்கிறார்கள். ராயல் விமானப்படையிலும், கடற் படையிலும் மீட்சிப் பணிப் பிரிவிலும், வேர்ள்விண்ட், பிரிஸ்டல்ஸிகமோர் முதலிய ஹெலிகாப்டர்கள் உண்டு. ஹெலிகாப்டர்செங்குத்தாக ஏறி இறங்கும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் தாழப்பறந்து ஆராயவும் மெதுவாகப் பறந்து செல்லவும் ஹெலிகாப்டரை உபயோகிக்க முடியும்.

பிரிட்டிஷ் யூரோப்பியன் ஏர் வேஸ் என்ற விமானக்கம்பெனி 1950-இல் பயணத்துறையிலும் ஹெலிகாப்டர்கள் பயன்படுத்த முன் வந்தது. சிறிய தூரப் பயணத்தை விரைவில் முடிக்க ஹெலிகாப்டரை உபயோகிக்கலாம். 1950 ஜூன் மாதத்தில் கார்டிஃபிலிருந்து லிவர்பூலுக்கு ஹெலிகாப்டர் ஸர்வீஸ் தொடங்கப்பட்டது. அதிக அளவில் பிரயாணிகள் ஏறிச் செல்ல முடியாத சிறு வாகனங்களாக இருந்ததால் ஹெலிகாப்டர் சர்வீஸ் லாபகரமாக இயங்கவில்லை.

பயணத்திற்கு

ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. வெஸ்ட்லாந்து ஏர்கிராஃப்ட் லிமிடெட் என்ற நிறுவனம் 46 பேர்களை ஏற்றிச் செல்லும் ஹெலிகாப்டர்களைத் தயாரிக்கத் தொடங்கிவிட்டது. விமான அம்சங்களும் ஹெலிகாப்டரின் சிறப்புகளுமுள்ள 'ரோடோடைன்' என்ற ஹெலிகாப்டரை பேரி அவெயிஷன் லிமிடெட் என்ற நிறுவனம் தயாரித்திருக்கிறது. இது 65 பிரயாணிகளை ஏற்றிச் செல்ல வல்லது. இந்த ரக ஹெலிகாப்டர் உற்பத்திக்கு பிரிட்டிஷ் சர்க்கார் ஊக்கமளிக்கிறார்கள். ராணுவத் தேவைக்கேற்ற முறையில் இந்த ரக ஹெலிகாப்டர்களை அமைக்கவும் முயற்சியுண்டு.

எண்ணெய் வயல்களுக்கு எந்திர சாதனங்களை ஏற்றிச் செல்லவும்வேறுபல நிர்மாணப் பணிகளிலும் இப்போது ஹெலிகாப்டர்களை உபயோகிக்கிறார்கள். எட்டாப் பகுதிகளுக்கு வீரர்களையும் படைக்கலன்களையும் ஏற்றிச்செல்கிறது, ஹெலிகாப்டர். சுருங்கக்கூறின் விமானப்போக்குவரத்திலும் தொழிற்றுறையிலும் ஹெலிகாப்டர் புரட்சிகரமான மாறுதலைச் செய்துவிட்டது.

—●—

இந்தியாவுக்கு அமெரிக்க அரிசி

இந்தியாவுக்கு அமெரிக்கா 1,50,000 மெட்ரிக் டன் அரிசி வழங்குகிறது. இதற்கான ஒப்பந்தம் ஒன்று அண்மையில் வாஷிங்டனில் கையெழுத்தாகியது. இது பொதுச் சட்டம் 480 என்பதன்படி நவம்பர் 13-ந் தேதி கையொப்பமான ஒப்பந்தத்தின் துணை ஒப்பந்தமாகும்.

துணை ஒப்பந்தத்தின்படி கிடைக்கும் உதவி, கப்பல் கட்டணம் உள்பட 8 கோடி 80 லட்சம் ரூபாய் (185 லட்சம் டாலர்) இதனால் இதுவரை அமெரிக்கா இந்தியாவுக்கு வழங்கியுள்ள உதவி மொத்தம் 935 கோடி, 10 லட்சம் ரூபாய் (200 கோடி டாலருக்கு மேல்) ஆகிறது.

இரு அடி துணை கொண்டு இமயங் கண்ட தமிழர்!

வடதிசையின் கோடியில் இமயமலையின் கண் உள்ள கைலாயபர்வதத்தை நடந்து சென்று காண்பதென்றால் எளிதான செயலல்ல. கைலாயம் தேடிச்சென்ற நாவுக்கரசர் எத்தகைய இன்னலுற்றார் என்பதை திருவிளையாடற் புராணம் விவரிக்கிறது. அத்தகைய கைலாயத்தை ஒரு தடவை அல்ல — மும்முறை கால்நடையாகவே நடந்து சென்று அபாரசாதனையை ஏற்படுத்தியுள்ளார் ஓர் முனிவர் — அதுவும் தமிழர்!! அவர் தான் பரமஹம்ச, பரிவிராஜக, பௌரேஷய, ஞானாசாரிய சத்குரு ஸ்ரீமத் சிவானந்த முனிவர்கள்.

சிவானந்த முனிவர்கள் தற்பொழுது பட்சி தீர்த்தத்தி



சிவானந்த முனிவரின் கைலாய யாத்திரையின் போது புதுடில்லி தமிழர்களை சந்தித்து உரையாடினர் அப்போது எடுக்கப்பட்ட படம் இது. 'தொழில்' ஆசிரியர் பெருமாள் உடையாரையும் படத்தில் காணலாம்.

லுள்ள வேதாச்சலம் என்னும் குகையில் தங்கியிருந்து வருகிறார். இவர் உலகத்தின் பலபாகங்களுக்கு யாத்திரை செய்துள்ளார். முனிவர் அவர்கள் 1953-54-ஆம் ஆண்டில் பாரதத்தின் தென்கோடியான குமரி முனையிலிருந்து வடதிசையின் கோடியான இமயமலைக்குக்கால் நடையாகவே யாத்திரை செய்தார். மூன்றாவது முறையாக 22-7-59 அன்று குமரி முனையிலிருந்து புறப்பட்டு கைலாயத்தைத் தரிசித்துவிட்டு குமரிமுனை திரும்பியுள்ளார்.

முனிவரவர்கள் யாத்திரை செய்தபோது டெல்லியில் பாரதப் பிரதமர் நேருஜி அவர்களைக் கண்டு ஒருமணி நேரம் உரையாடினார். சுவாமிஜி அவர்களின் முயற்சியை நேருஜி அவர்கள் வெகுவாகப்பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தார். போக்குவரத்து சாதனங்கள் நிறைந்துள்ள இக்காலத்தில்—அதுவும் நடந்து செல்வதென்பதையே வெறுத்தொதுக்கும் மக்கள் நிறைந்துள்ள இந்நாளில்—கால் நடையாகவே நடந்துசென்று கைலாயம் கண்ட சிவானந்த முனிவர் அவர்களின் சாதனை வியக்கத்தக்கதே!

— ● —

பிரதம மந்திரிக்கும் பிறந்த நாள் "பரிசுகள்"

நாட்டிலுள்ள ச தாய அபிவிருத்தித் தொகுதி மக்கள், 1600-க்கு மேற்பட்ட, குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு நிலையங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், நூல் நிலையங்கள், மஹிவா மண்டலிகள் ஆகியவற்றை பிரதம மந்திரிக்கும் பிறந்தநாள் பரிசாக வழங்கியுள்ளார்.

இவை தவிர, 638 பள்ளிக் கூடங்களுக்கும், புதிய பள்ளிக் கூடங்களை அமைப்பதற்கும் ஏற்கெனவேயுள்ளவற்றை விஸ்தரிப்பதற்காகவும், 956 ஏக்கர் நிலமும், 25,67,699 ரூபாய் ரொக்கமும் மற்றும் பல வகைப்பட்ட அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

சமுதாய அபிவிருத்தித்தொகுதிமக்கள் குழந்தைகள் பெயரில் 2 லட்சம் ரூபாய்க்குமேல் சிறு சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்துள்ளனர். குழந்தைகளின் நலனுக்காக, தொகுதி பிரதேச மக்கள் கிராமஆயுள் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் 50 லட்சம் ரூபாய் முதலீடு செய்துள்ளார்.

— ● —

இந்தியாவில் உள்ள சீனர்கள்

இந்தியாவில், 1959 அக்டோபர் 31-ந் தேதியக் கணக்குப்படி, மொத்தம் 11,942 சீனர்கள் இருப்பதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை ராஜ்யவாரியாக வருமாறு:—சென்னை-90; மைசூர்-28; கேரளா-6; ஆந்திரப் பிரதேசம்-110; அஸ்ஸாம்-471; மேற்கு வங்காளம்-8,127; பீஹார்-100; அந்தமான்-10; பம்பாய்-2,404; மணிப்பூர்-9; மத்தியப் பிரதேசம்-33; டில்லி-382, ஒரிஸ்ஸா-6; பஞ்சாப்-56; உத்தரப்பிரதேசம்-137; ராஜஸ்தான்-2; ஜம்மு-காஷ்மீர்-1.

இத்தகவலை யூனியன் உள் விவகார மந்திரி, ஸ்ரீ ஜி. வி. பந்த் நவம்பர் 18-ந் தேதியன்று லோக் சபாவில் தெரிவித்தார்.

பண்டைக் காலத்தில் பொம்மைக் கலை

நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்தே குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாதனங்களும், பொம்மைகளும் இருந்து வந்ததாகத் தெரிய வருகிறது. இந்தியாவின் புராதனக் கலைகளில் விளையாட்டுச் சாதனங்களும் பொம்மைகளும் தயாரிக்கும் தொழிலும் ஒன்றாகும். மனிதன் அம்பு, வில், கழி ஆகிய ஆயுதங்களைக்கொண்டு உணவைத் தேடித் திரிந்த காலத்தில், அவன் குழந்தைகளுக்காகச் செய்து கொடுத்த விளையாட்டுச் சாதனங்களும் பொம்மைகளும், அன்றாட வாழ்க்கையில் உபயோகித்தவைப் போலவே இருந்தன. சிறிது காலத்துக்குப் பிறகு அவன் வீடும் குடியுமாக ஒரே இடத்தில் தங்கத் தொடங்கிய போது சட்டி, பானைகளையும் வேறு மண்பாண்டங்களையும் உண்டாக்கினான். அவனுடைய குழந்தைகளின் பொம்மைகளும், விளையாட்டுச் சாதனங்களும் அதே உருவிலேயே அமைந்தன. மொகஞ்சோதாரா, அரப்பா, சங்கோ-தாரா ஆகிய சரித்திர முற்கால கட்டத்தில் நகர்ப்புற நாகரீகம் பரவி இருந்தது. ஆகவே எந்தகால கட்டத்தை நோக்கினாலும், அப்போது மனிதன் அவனுடைய குழந்தைகளுக்காக ஒரு சிறிய உலகத்தையே உருவாக்கியிருக்கிறான். அதன் மூலமாகத்தான் குழந்தைகளை மகிழ்ச்சியாகவும் களிப்புடனும் இருக்கச் செய்தான்.

இவைகளுக்குப் பிறகு தெரிய வந்துள்ள, கண்டுபிடிப்புகளின், எண்ணம், கோட்பாடு, கைத்தொழில் கலை ஆகியவைகளிடையே வரிசைக் கிரமத் தொடர்பு இருந்துவருவதைக் காணலாம். கும்ராகர் (பாட்னா), கடம்குவான் (பாட்னா), முசாபர்ப்பூர் (பீகார்), புலந்திபாக் (பாட்னா), கௌசாம்பி (அலகாபாத்), பெல்வா (சரன் ஜில்லா), பிரகாம்புரி (கோல்காப்பூர்), பிரம்மகிரி (மைசூர்) ஆகிய பல்வேறு இடங்களில், விலங்குகள், பறவைகள், தேர், சக்கரம் அமைக்கப்பட்ட சாதனங்கள், கோலிகள், ஓவியம் வரையப்பட்ட தட்டுகள் ஆகியவை தோண்டி எடுக்கப்பட்டிருக்கின்றன; அவைகள் குழந்தைகள் தனித்தனியாகவும், சேர்ந்தும் விளையாடுவதற்கு உபயோகிக்கப்பட்டவையாகும்.

இவ்விதமாகத் தோண்டியெடுக்கப்பட்ட சாதனங்கள், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் போக்கைக் காட்டுகிறது; உதாரணமாக, கௌசாம்பியின் தேர் பொம்மைகளில் சில விஷயங்களில் வெளிநாட்டு அம்சங்களும் தென்படுகின்றன. பிரம்மகிரிப் பிரதேசத்தைச் சேர்ந்த தேர், டோங்கா வாகனம் ஆகியவைகளில் ரோம் நாட்டு அம்சங்க

யிருக்கின்றன. அகிசத்திரா போன்ற பிரதேசங்களில் "குதிரை சவாரி" பொம்மைக ளும் காணப்படுகின்றன. சில பிரதேசங்களிலுள்ள பொம்மை களின் கைவேலைப்பாட்டுத் திறமை மிகுந்து காணப்படுகி றது. மீதியுள்ளவைகள் விஷ யத்தில் திறமை குறைந்து காணப்படுகின்றன.

விளையாட்டுச் சாதனங்கள், பொம்மைகள் தயாரிப்பு முறை யில் பல்வேறு முறைகள் கை யாளப்பட்டிருக்கின்றன. களி மண், துரும்பு, தூசி, மண் ஆகிய கலவைகளைக் கொண்டு அவைகள் தயாரிக்கப்பட்டிருக் கின்றன; சுண்ணும்புப் பூச்சி மீது காவியடிக்கப்பட்ட பொம் மைகளும் கண்டு பிடிக்கப்பட் டிருக்கின்றன. கருமண்ணிலும் சாம்பல் நிற மண்ணிலும்பொம் மைகள் செய்யப்பட்டிருக்கின் றன. கண்ணுடி, கல், வெண் கலம், செம்பு ஆகிய உலோகங் களால் செய்யப்பட்ட பொம்மை களும் தோண்டி யெடுக்கப்பட் டிருக்கின்றன; ஆனுல், மண் பொம்மைகள் தான் ஏராளமாகக் கிடைத்தன. ஏழை மக்களின் சிற்பத் திறமையைக் காட்டும் கருவி களிமண் தான். தயா ரிப்பு முறையிலும் "அச்சு முறை", "கையினுல் செய்யும் முறை" ஆகிய இரண்டும் கை யாளப்படுகின்றன.

பாட்னுபொருட்காட்சிசாலையி லுள்ள பொம்மைப் படங்கள் விசேஷ அழகும் முக்கியத்துவ மும் நிறைந்ததாகும். அவைக ளில், உருவத்தின் ஆழத்தை யும் வேலைப்பாட்டின் சிறந்த அம்சங்களையும் காணலாம். அவைகள், சுங்கா, குஷாணு, சதவாகனு ஆகியகாலங்களையும் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்தவை. வெங்கல "டோங் கா" வண்டிகள் டெக்கான் பிர தேசத்தைச் சேர்ந்தவை; மத் திய பிராந்தியங்களிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட விலங் குகள் பொம்மைகளும் இருக் கின்றன.

உலோகங்களிலும், களி மண் ணிலும் செய்யப்படுகிற பொம் மைகள் விஷயத்தில் கலைஞர் கள் அந்தந்த உருவங்களின் குண விசேஷங்களையும் தன் மையையும் எவ்வளவு தத்ரூப மாகக்காட்டியிருக்கிருர்கள் என் பது மிகவும் வியக்கத்தக்க தாகும்.

அந்த பொம்மைகளை அழகு படுத்துவதற்காகச்சேர்க்கப்படு கிற அம்சங்களைவிட அவைகள் எதுவுமின்றி அந்த பொம்மைக ளின் அங்க அமைப்பும் உருவ மும் எவ்வளவு திறமையாக செய்யப்பட்டிருக்கின்றன என்ப தும் அதிசயிக்கத்தக்கது. சுங் கா காலத்தைச் சேர்ந்த நாலு எருதுகள் பூட்டிய ரதத்தில் எடுப்பான தோற்றமும் தலை நிமிர்ந்து கம்பீரமாக நிற்கிற குதிரையும், ஆட்டுக்கடா பொம் மையின் பயங்கரமான தோற்ற மும் பொம்மைக் கலையின் உயர்ந்த கலை வேலைப்பாட்டை நிரூபிக்கின்றன.

டெக்கான் பிரதேசத்தைச் சேர்ந்த சதவாகனர் காலத்தின் வெங்கலப் பொம்மைகளின் படங்களும் உயர்ந்த ரகத்தைச்

சேர்ந்தவையே. இவை களிமண் பொம்மைகளைவிட முற்றிலும் மாறுபட்டவையாகும். இந்தக் கால கட்டத்தில் மிகவும் நாகரிகமான சமூகம் வாழ்ந்திருக்க வேண்டும்; உலோக சாதனங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. யானையின் மீது ஒரு குடும்பம் முழுவதும் அமர்ந்திருப்பது போன்ற பொம்மை, நகங்களை அகல விரித்துக்கொண்டிருக்கும் புலி, இந்திய டோங்கா வண்டி ஆகியவைகளும் காணப்படுகின்றன. இந்த டோங்கா வாகனங்கள் சதவாகனங்கள் ரோமர்களுடன் தொடர்பு வைத்திருந்த காலத்தைச் சேர்ந்தவைகளாகும். பிரம்மகிரியில் (மைசூர் மாநிலம்) கண்டு பிடிக்கப்பட்ட வெண்கலப் பொம்மைகளும் குறிப்பிடத் தகுந்தவையே.

பல்வேறு பொருள்களில் தயாரிக்கப்பட்டிருக்கிற ஏராளமான பொம்மை வகைகள் புராதன காலக்கைவினைஞர்களின் திறமையை எடுத்துக்காட்டுகின்றன.

—※—

இந்தியாவில் கனிப் பொருள்கள் உற்பத்தி

1959-ம் ஆண்டில், முதல் ஆறு மாத காலத்தில் மொத்தம் 72 கோடி ரூபாய்மதிப்புக்கு கனிப்பொருள்கள் வெட்டியெடுக்கப்பட்டன. இதற்குச் சரியான காலத்தில் உற்பத்தி மதிப்பு 72.2 கோடி ரூபாயாகும் மொத்த மதிப்பில் 20 லட்சம் ரூபாய் குறையக் காரணம், உப்பு, மாங்கனீஸ் கனி ஆகியவற்றின் உற்பத்தி ஒரேயடியாகக் குறைந்தவிட்டிருப்பது தான். பரிசீலனைக் காலத்தில், நிலக்கரி, இரும்புக் கனி, காரீயம், துத்தநாகம் ஆகியவற்றின் உற்பத்தியில் கனிசமான அதிகரிப்பு காணப்பட்டது. பரிசீலனைக் காலத்தில் மொத்தம் 47.3 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலக்கரி வெட்டியெடுக்கப்பட்டது.

இதர கனிகள் விவரம்: மாங்கனீஸ் கனி (5.1 கோடி ரூபாய்); உப்பு (4.8 கோடி ரூபாய்); இரும்புக் கனி (3 கோடிரூபாய்); தங்கம் (2.6 கோடி ரூபாய்); அப்ரகம் (1.2 கோடி ரூபாய்); செம்பு (1.1 கோடி ரூபாய்); இல்மனைட் உலோகம் (0.8 கோடி ரூபாய்) ஆகியவை இடம் பெற்றன.

—●—

இந்திய கைவேலைப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

1959-ம் ஆண்டின் முதல் அரையாண்டு காலத்தில் சுமார் 3.6 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்திய கைவேலைப் பொருள்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகி யுள்ளனவாம். அடுத்த அரையாண்டுகாலத்தில் ஏற்றுமதியின் அளவு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கின்றனர். சென்ற ஆண்டு முழுவதிலும் கைவேலைப் பொருள்கள் ஏற்றுமதி மூலம் 6.67 கோடி ரூபாய் இந்திய அரசினருக்குக் கிடைத்துள்ளது.

பட விமர்சனம்.

★ அமுதவல்லி ★

அண்மைக் காலத்தில் வெளிவந்த நம் தமிழ்ப் படங்கள் அனைத்தும் சமூகக் கதையாகவே காட்சி யளித்தன—கதையில் புதுமையில்லாமல்! இதனையுணர்ந்த ஜுபிடர் பிக்சர்சார் பத்தாண்டு காலத்திற்கு முன்பு வெளிவரவேண்டிய ஒரு கதையை—பாதி பூலோகம்—பாதி நாகலோகம் செல்லும் புராணக் கதையை ''அமுதவல்லி'' என்ற பெயரில் படமாக்கி துணிந்தும் திரையிட்டு விட்டார்கள். மேலைநாட்டுப் படங்கள் எத்தனையோ துறையில் முன்னேறிக் கொண்டுவருகின்றன; ஆழ்கடலின் அடியில் புதையுண்டு போன பழைய கண்டமொன்றையே படமாக்க முனைந்துள்ள இந்நாளில் ''அமுதவல்லி'' படத்தைப் பார்க்கும்போது நம் தமிழ்ப்பட உலகத்தை எண்ணி சிரிப்பதோடு மட்டுமல்ல - வருந்தவும் செய்யத்தான் வேண்டும்.

'மாலையிட்ட மங்கை''க்குப் பிறகு டி. ஆர். மகாலிங்கத்திற்கு ஏகப்பட்ட கிராக்கி. அமுதவல்லியில் அவரை இரட்டை வேடத்தில் நடிக்க வைத்துள்ளனர். ஒரு பகுதி—பைத்தியம்; இன்னொருபகுதி, காதல்பைத்தியம். பைத்தியக்காரவேடத்தில் மகாலிங்கம் நன்கு சோபிக்கிறார். ஆனால் மறுபாதியில் 'சோடை' யாகி விடுகிறார். அருமையாகப் பாடியுள்ளார். நீண்டநாட்களுக்குப்பிறகு எஸ். ஏ. நடராசன் நடித்துள்ளார். அவருக்கே உரித்தான வசன உச்சரிப்பும், சிரிப்பும் இன்னும் அப்படியே இருக்கின்றனவே! அப்புறம ஏன் இவரை நம் படாதிபதிகள் மறந்திருக்கின்றனரோ?

எம். என். ராசம் அமுதவல்லியாக வருகிறார். "கணவனே தெய்வம்" என்றெண்ணி அருமையாக நடித்துள்ளார். தாம்பரம் லலிதா நாகலோக மங்கையாக வருகிறார். அழகாகத் தோன்றி அருமையாக நடிக்கிறார். ஆனால் வசனம் பேசுகையில் கழுத்தில் ஏதோ வலி கண்டவர்போல் கோணி நிற்பது ஏனோ?

அரு. ராமநாதன் வசனத்தை எழுதியுள்ளார். குறள் கருத்துக்களை இடையிடையே புகுத்துவதில் அதிக கவனம் செலுத்தியுள்ளார்; ஆனால் ஏனோ வசனம் எடுபடவில்லை. பாடல்களை தஞ்சை ராமய்யாதாஸ், கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோர் எழுதியுள்ளனர். தஞ்சை ராமய்யாதாஸ் வழக்கமான தன் "கைவரிசை"யைக் காட்டியிருக்கிறார். கண்ணதாசன் எழுதி "கண்ணிரண்டும் ஒன்றையொன்று காண முடியுமா" என்ற பாடலை மகாலிங்கம் அருமையாகப்பாடியுள்ளார். பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் எழுதியுள்ள "காலம் எனுமொரு ஆழக்கடலினில்" என்னும் பாடல் கருத்தாழத்தோடு நன்கு அமைந்துள்ளது.

பிரபல ஆர்ட் டைரக்டர் ஏ. கே. சேகர் படத்தை டைரக்ஷன் செய்துள்ளார். வேண்டாம் அவருக்கு இந்த "வேலை" என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. கலைநிர்மாணத்தில் அவரின் கைவண்ணம் அருமையாக அமைந்துள்ளது.

ஒளிப்பதிவும் நன்கு அமைந்துள்ளது. ஜி. கே. ராமுவின் தந்திரக் காட்சிகளும் பரவாயில்லை. ஒலிப்பதிவு சுமார்.

அமுதவல்லி—நிச்சயம் ஓர் 'அழகிய' வல்லிதான்!

—கோ. ச.

வளரும் படங்கள்

பார்! பார்!! பட்டணம்பார்!!

மேலநாட்டு படாதிபதிகள் தாங்கள் தயாரிக்கும் படத்தில் புதுப்புது நுணுக்கங்களை கையாண்டு வருகையில் நம் படாதிபதிகள் பழமையிலேயே இன்னும் இருக்கிறார்களே என்று குறைப்படுவதுண்டு. ஆனால் கவுண்டர் பிலிம்சார் என்னும் தயாரிப்பாளர்கள் படத்தின் தலைப்பில் ஓர் புதுமையைக் கையாண்டிருக்கிறார்கள். அவர்கள் தயாரிக்கும் முதல் படத்திற்கு "பார்! பார்! பட்டணம் பார்!!" என்று பெயரிட்டுள்ளனர். டி. ஆர். மகாலிங்கம், மாலினி முக்கிய பாத்திரம் ஏற்று நடிக்கும் இப்படம் ஓர் முழு நீளநகைச்சுவை படமாகும். பெருமாள் என்பவர் டைரக்ட் செய்கிறார்.



சேவா சமாஜத்தின் சார்பில் ஜலண்டு மைதானத்தில் நடை பெற்ற சங்கீத நாட்டிய விழாவில் கலந்து கொண்ட நடிகை பத்மினி இம்மாதிரி உடை யணிந்து காட்சி அளித்தார்.

சிவாஜி கணேசன் நடிக்கும் "சிவாஜி"!

திரு. சின்ன அண்ணாமலை "வீர சிவாஜி" என்னும் பெயரில் ஒரு குழந்தைப்படத்தைத் தயாரித்து வருவது தெரிந்ததே! ஆனால் சிவாஜி கணேசனும் சிவாஜியின் வரலாற்றைப் படமாக்க தீவிரமாக முனைந்து வருகிறார். பம்பாயில் உள்ள ஓர் பிரபல படத்தயாரிப்புக் கம்பெனியுடன் அவர் இப்படத்தைக் கூட்டாகத்தயாரிப்பார். படம் முழுவதும் கேவாகலரில் தயாரிக்கப்படுமாம்!

யானைப்பாகன்

சாண்டோ சின்னப்ப தேவர் 'யானைப்பாகன்' என்னும் பெயரில் ஒரு படத்தைத் தயாரித்து வருகிறார். இப்படத்தில் 'கல்யாண பரிசு' புகழ் ஜெமினி கணேசனும் சரோஜாதேவியும் ஜோடியாக நடிக்கின்றனர். படத்தின் பெரும்பகுதி நீலகிரி மலையின் மேற்குச் சரிவிலுள்ள கூடலூர் காடுகளில் படமாக்கப் படுமாம்!

தேனாற்றங்கரை!

பிரபல ஒப்பனைக்கலைஞர் ராமதாஸ் "தேனாற்றங்கரை" என்னும் பெயரில் ஒரு படத்தைத் தயாரித்து வருகிறார். இப்படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், எம். என். நம்பியார், எம். ஜி. சக்ரபாணி ஆகியோர் நடிக்கின்றனர். எம். ஜி. ராமச்சந்திரன் டைரக்ஷன் பொறுப்பை ஏற்றுள்ளார்.

ஜீவபூமி

ஸ்ரீராம் புரொடக்‌ஷன் சார் சாண்டில்யன் எழுதிய சரித்திரக்கதையான 'ஜீவபூமி'யை வெகு வேகமாகத் தயாரித்து வருகின்றனர். சிவாஜிகணேசன் இப்படத்தில் முற்றிலும் புதுமையான பாத்திரம் ஏற்று அருமையாக நடித்துள்ளாராம். மற்றும் எம். ஆர். ராதா. ஸ்ரீராம், சரோஜாதேவி, ஆகியோர் நடித்து வருகின்றனர். கே. சோமு படத்தை டைரக்ட் செய்கிறார். இசையமைப்பு கே. வி. மகாதேவன். வசனத்தை ஏ. பி. நாகராசன் எழுதுகிறார். படம் பொங்கலுக்கு வெளிவரும் என்று தெரிகிறது.

தர்மபத்தினி

ஆர். எஸ். ஆர். பிக்சர் "தர்மபத்தினி", வெகு வேகமாக வளர்ந்துவருகிறது. இப்படத்தில் ஜமுனா, சௌகார் ஜானகி, மனோகர், நாகையா முதலியோர் நடிக்கின்றனர். படம் பிப்ரவரி மாதத்தில் திரையிடப்படும்.

கவலை இல்லாத மனிதன்

கண்ணதாசன் பிக்சர்சார் தயாரிக்கும் "கவலையில்லாத மனிதன்" நிச்சயம் பொங்கலன்று திரையிடப்படும் என்று தெரிகிறது. இப்படத்தில் சந்திரபாபு அபாரமாக நடித்துள்ளாராம். எம். ஆர் ராதாவும் அட்டகாசம் செய்கிறாராம். மற்றும், மகாலிங்கம், ராஜசுலோசனா, மாலினி ஆகியோர் நடிக்கும் இப்படத்தை கே. சங்கர் டைரக்ட் செய்துவருகிறார். கதை, வசனம், பாடல் அனைத்தும் கண்ணதாசன் எழுதியுள்ளார்.

அருந்ததி!

மோட்சேஸ்வர் சித்திரா புரொடக்‌ஷன்சாரின் 'அருந்ததி கோல்டன் படப்பிடிப்பு நிலையத்தில் துரிதமாக சுடப்பட்டு வருகிறது. படத்தின் தலைப்பைக்கொண்டு இதை ஓர் புராணக் கதை என்று எண்ணிவிடாதீர்கள். உள்ளத்தை உருக்கும் உணர்ச்சிக் கட்டங்களும் அறிவு புகட்டும் நீதிகளும் கொண்ட ஓர் சமூகக் கதை இது. இப்படத்தில் "சோக மன்னன்" ஏ. நாகேஸ்வரராவ் கதாநாயகனாக நடித்து வருகிறார். மற்றும் அஞ்சலி, முத்துலட்சுமி, எஸ். பாலசந்தர், கருணாநிதி ஆகியோர் நடித்து வருகின்றனர். வேதாந்தம் ராகவய்யா டைரக்‌ஷன் பொறுப்பை ஏற்றுள்ளார்.

பலகோடி டாலர் செலவில் "ஆளப்பிறந்தவன்"!

மேலைநாட்டுப் பிரபல நாவலாசிரியர் ருட்யார்ட் கிப்ளிங் என்பவர் எழுதிய "ஆளப்பிறந்தவன்" என்ற கதை பலகோடி டாலர் செலவில் திரைப்படமாக்கப்படுகிறது. இப்படத்தை ஆலிவுட்டின் பிரபல டைரக்டர்களில் ஒருவரான ஜான் உஸ்டன் என்பவர் தயாரிக்கிறார் படத்தில் சர் லாரென்ஸ் ஆலிவர், பிராங்க் சின்ட்ரா முதலியோர் நடிக்கின்றனர்.

சாந்தி நிவாஸ்

ஸ்ரீ புரொடக்‌ஷன்சார் "சாந்தி நிவாஸ்" என்னும் தெலுங்குப்

M. KANNAN

Government Approved
Fabricator and Contractor
(Regd. 10)

30, Wall Tax Road, Madras-3

★

Please Contact us For

COLLAPSIBLE GATES, MAIN GATES,
WINDOW GRILLS, VENTILATORS &
ALL OTHER BUILDING MATERIALS

●

Steel Trusses and erection works undertaken

Specialist in Arc and Gas Welding
Stainless Steel Aluminium Gas Cutting
Works are also undertaken.

OUR MOTTO IS TO SATISFY OUR CUSTOMERS

படத்தை விஜயா ஸ்டுடியோவில் துரிதமாகத் தயாரித்து வருகின்றனர். இப்படத்தில் ஏ. நாகேஸ்வரராவ், நாகையா, தேவிகா, பாலசரஸ்வதி, காந்தாராவ் முதலியோர் நடித்து வருகின்றனர். சி. எஸ். ராவ் டைரக்ஷன் செய்து வருகிறார்.

பக்த ஜயதேவா

லலிதகலா நிகேதன் 'பக்த ஜயதேவா' என்னும்படத்தைத் தயாரிக்கின்றனர். அஞ்சலி தேவியும் நாகேஸ்வரராவும் முக்கியப் பாத்திரத்தில் நடித்து வருகின்றனர். வசனத்தை சமுத்ராலாவும் இசையை ராஜேஸ்வரராவும் அமைத்துள்ளனர்.

பத்மினி நடிக்கும் "கல்பனா"

பிரபல தென்னாட்டு நாட்டிய நடிகை பத்மினி 'கல்பனா' என்னும் இந்திப் படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார். இப்படத்தை வடநாட்டு குணசித்திர நடிகரான அசோக்குமார் தயாரிக்கிறார். பத்மினியுடன், அசோக்குமார், கிஷோர் குமார், ராகினி ஆகியோரும் நடிக்கின்றனர்.

தரவாடு

பிரபல மலையாள நாவலாசிரியர் தகழி சிவசங்கரன் எழுதிய 'செம்மீன்' என்னும் நவீனத்தை பொன்னம்பல வாசன் பிக்சர்சார் 'தரவாடு' என்னும் பெயரில் திரைப் படமாக்கி வருகின்றனர். படத்தில் சந்திரன், சாந்தினி முத்தையா, குன்யாண்டி முதலியோர் நடித்துவருகின்றனர். இசையமைப்பு எம். பி. சீனிவாசன். பி.பி. யுன்னி படத்தை டைரக்ட் செய்கிறார்.

அடுத்த வீட்டுப் பெண்

அஞ்சலிபிக்சர்சாரின் "அடுத்த வீட்டுப் பெண்" விரைவில் திரையில் பவனி வரும் என்று தெரிகிறது. இப்படத்தில் அஞ்சலி தேவி, தங்கவேலு, டி. ஆர். ராமச்சந்திரன், ஏ. கருணாநிதி முதலியோர் நடித்துள்ளனர். அஞ்சலிதேவி ஜப்பான் உடையில் தோன்றி ஆடும் நடனங்கள் கண்ணு[illegible] கவர்ச்சிகரமாக — கலரில் எடுக்கப்பட்டுள்ளனவாம். வேதாந்தம் ராகவய்யா டைரக்ஷன் செய்கிறார்.

ஃ ஃ ஃ

நடிகர்தின விழா

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் நடிகர் தின விழா கோல்டன் படப்பிடிப்பு நிலையத்தில் 6-12-59 அன்று வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. காலையில் தமிழ்நாட்டு முன்னணி நட்சத்திரங்கள் அனைவரும் விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு ஓடியதும்— ஆடியதும் கண் கொள்ளாக்காட்சியாக அமைந்திருந்தது. 'இவராலும் ஓட முடியுமா' என்று எண்ணப்பட்ட நடிகைகளும் ஓட்டல்பந்தயத்தில் கலந்துகொண்டு ஓடியது ருசிகரமாகவும் வியப்பாகவும் இருந்தது; பலவீர விளையாட்டுகளும் நடைபெற்றன. மாலையில் பல கட்சித்தலைவர்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டமும் நடைபெற்றது. சென்னை மாநில மராமத்துத்துறை அமைச்சர்கனம் பி. கக்கன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். டாக்டர் பி. செங்கல்வராயன், கண்ணதாசன், ஜீவானந்தம், கே. அப்பன்ராஜ், சின்ன அண்ணாமலை எம். ஜி. ராமச்சந்திரன், பிரேம் நசீர், அஞ்சலிதேவி, ஆகியோர்



'ராஜபக்தி'யில் பானுமதி, பாலையா, சிவாஜி கணேசன் தோன்றும் ஓர் காட்சி



சென்னை-600 008

திருவல்லிக்கேணி நடராசா கல்விக் கழகத்தின் கட்டிட நிதிக்காக நடைபெற்ற 'உபகுப்தன்' நாடகத்தின்போது இலங்கேஸ்வரன் மனோகர் அவர்களுக்கு "கலைமணி" என்னும் பட்டத்தை டாக்டர் யு. கிருஷ்ணு ராவ் வழங்கினர். நாடகம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு E. ஜவஹர் அவர்கள் பெரிதும் ஒத்துழைத்தார்.

சொற்பெருக்காற்றினர். விழா இரவு 9-30 மணிக்கு நடிகர்சங்க செயலாளர் டி. வி. 'நாராயண சாமி அவர்கள் நன்றியுரையோடு இனிது முடிவுற்றது.

பேச்சாளர் சங்கம்

நடிகர் தின விழாவில் கலந்து கொண்ட டாக்டர் பி. செங்கல்வ ராயன் அவர்கள் பேசுகையில், இன்று நாட்டில் வக்கீல் சங்கம், நடிகர் சங்கம், தொழிலாளர் சங்கம், எழுத்தாளர் சங்கம் என்று எத்தனேயோ சங்கங்கள் இருக்கின்றன. அதே போன்று பேச்சாளர்களுக்கும் ஓர் சங்கம் இருந்தால் நல்லது என்று கூறினர். அடுத்து பே[illegible] நடிகர் எம், ஜி. ஆர். [illegible]ா பேசுகையில், "பேச்ச[illegible]களுக் கென்று ஒரு தனி சங்கத்தை அமைக்க கனம் செங்கல்வராயன் அவர்கள் முன் வந்தால் என் போன்றோர்க்கு மிகவும் உபயோகரமாக இருக்கும்; மேடையில் எப்படி யெப்படி பேசவேண்டும்; என்னென்ன வார்த்தைகளை சொல்லவேண்டும் என்பதையும் அச்சங்கம் தீர்மானிக்கவேண்டும்" என்று சொன்னதும் கனம் செங்கல்வ ராயன் உள்[illegible]ட விழாவில் கலந்து கொண்ட அனைவரு[illegible] கொல்லென்று சிரித்தனர்.

Edited & Published by K. Perumal Udayar,
55, Edapalayam Street, Madras-3. Asst. Editor: G. Shanmugan

Printed by K. N. Thiruvengadam,
at his Ananda Parvathi Press, 30, Edapalayam St., Madras-3.